வெளியீடு 30-6-99

Issued 30-6-99

1083/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

**புதன்கிழமை, மே 27, 1998 - தொகுதி 57 - எண் 2**

**Wednesday the 27th May, 1998—Volume 57 - No. 2**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**



V24, 31'N98
N98·57-2

219400


[Price Rs. 3.00

27-5-1998

1083/99

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள்-விடைகள்**— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 265-302 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு**— | |
| (அ) திருப்பூர் நகரம் மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு பவானி ஆற்றுத் தண்ணீர் கொண்டு வருவதில் சிக்கல் | 303-304 |
| (ஆ) கோவை சிந்தாமணி ஊழியர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் | 305-313 |
| (இ) பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து மருத்துவமனைகள் நடத்தி வரும் மருத்துவர்கள்மீது நடவடிக்கை | 313-319<br>323-324 |
| 3. **கவன ஈர்ப்பு**— | |
| (அ) ஆவடி நகராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறை | 319-323 |
| (ஆ) நாமக்கல் பகுதியில் இலட்சக் கணக்கில் கோழிகள் இறந்ததால் முட்டை உற்பத்தி பாதிப்பு | 324-329 |
| 4. **அறிவிப்புகள்**— | |
| (அ) கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்குத் துறைகள் குறிப்பிட்ட கால அளவிற்குள் விவர அறிக்கை அளித்தல் | 329-330 |
| (ஆ) ஆளுநர் அளிக்கும் தேநீர் விருந்துக்குச் செல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி | 330-331 |
| (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) | 332 |
| (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) | 333 |

பக்கங்கள்


4. **அறிவிப்புகள்**—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 334

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 335

(எ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 337

(ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 338

(ஐ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகை முறை) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 339

(ஒ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 340

(ஓ) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 341

(ஔ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 342

(க) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உணவு அளித்தல் 408

(ங) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 424

(ச) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1988-89 (ஆசெ.) 425

(ஞ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1998 (ஆசெ.) 427

5. **அறிக்கை அளித்தல்**—

பொது நிறுவனங்கள் குழு 330


2194



D V24,3'N98 N98.57.2

பக்கங்கள்


6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்த (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. 331

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 332-333

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 333-334

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 334-335

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998 336

(ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 337-338

(எ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 338

(ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகை முறை) சட்டமுன்வடிவு, 1998 339

(ஐ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 340

(ஒ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998 341

(ஓ) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 342

(ஔ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 343

(க) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1998 424

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் நகர், தோமையர்புரத்திற்கு அருகில் அரசு மருத்துவமனையும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் இருப்பதால் தாய்-சேய் நல மருத்துவமனை அமைத்திடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரம், மிகப் பெரிய நகரம். மாவட்டத்தினுடைய தலைநகரமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் நகருக்கு வந்திருந்தபோது, தலைமை மருத்துவமனையைப் பார்வையிட்டார்கள். அங்கே தாய்-சேய் நலப் பிரிவில் இடநெருக்கடி இருப்பதன் காரணமாக, மகப்பேறுக்காக வந்திருந்த பெண்கள் தரையிலே படுத்திருந்த நிலையைக் கண்கூடாகக் கண்டார்கள். இடநெருக்கடியின் காரணமாகவும், பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாகவும், நகரத்தின் வளர்ச்சியின் அடிப்படையிலும், சௌரியார்பாளையம் மற்றும் தோமையர்புரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருக்கக்கூடிய உழைப்பாளி மக்கள், தோல் பதனிடும் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்கள் ஆகியோர் மிகவும் துன்பத்திற்கு ஆளாகின்றார்கள். எனவே, அந்தப் பகுதியில் மேலும் ஒரு மருத்துவமனையை ஆரம்பிப்பது என்பது மிகவும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, ஒரு மருத்துவமனையை ஏற்படுத்திக் கொடுப்பார்களேயானால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, மறுபரிசீலனை செய்து, மகப்பேறு மருத்துவமனையை ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல நான் திண்டுக்கல் தலைமை மருத்துவமனையைப் பார்வையிட்டபோது, அங்கே இடநெருக்கடி இருப்பதைக் கண்டேன். மாண்புமிகு உறுப்பினர் தோமையர்புரத்தில் தாய்-சேய் நல மருத்துவமனை அமைக்கும் திட்டம் உண்டா என்றுதான் கேட்டார். அந்த தோமையர்புரம் கிராமத்தில் 1615 மக்கள் வசிக்கிறார்கள். நரசிங்கபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் 1.5 கி.மீ. தொலைவிலும்,



ஆலமரத்துப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 3 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருவதால், அந்தக் கிராமத்திற்சென்று தனியாக மருத்துவமனை தொடங்குவதற்கோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கோ வாய்ப்பு இல்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை இந்த அரசு புரிந்துகொண்டு, அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை மேலும் அதிகரித்து, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற தாய்-சேய் நல மருத்துவமனைப் பகுதியை விஸ்தரிக்கலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்டத் தலைமை மருத்துவமனையில் இடநெருக்கடி இருப்பதுதான் முக்கிய காரணம். இன்னொன்று. சுற்றுப்புறக் கிராமங்களுக்காக, நகராட்சியின் சார்பில் இரண்டு மகப்பேறு மருத்துவமனைகள் இயங்குகின்றன. அங்கேயும் இடநெருக்கடி இருக்கின்றது. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான், இந்த வினாவை எழுப்பினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், விரைந்து செய்வதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நிச்சயமாக விரைந்து செயல்படும். திண்டுக்கல் தலைமை மருத்துவமனையில் அதனை விஸ்தரிப்பதற்குப் போதுமான இடம் இல்லை. ஆனால், நிறைய பழைய கட்டடங்கள் அங்கே இருக்கின்றன. அவைகளை இடித்துவிட்டு மாடிக் கட்டடங்கள் கட்டி, அங்கே படுக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை தாய்-சேய் நல விடுதிகள் இருக்கின்றன? எத்தனை தாய்-சேய் நல விடுதிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன? பெரும்பாலான பகுதிகளில், தாய்-சேய் நல விடுதிகள் மூடிக்கிடக்கின்றன, செயல்படுவதேயில்லை. அவைகளை

செயல்படச்செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எல்லா மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் தாய்-சேய் நலப் பிரிவுகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. அதைப்போலவே, வட்டார மருத்துவமனைகளில் 156 இடங்களில் மிகச் சிறந்த முறையிலே தாய்-சேய் நலப் பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவையும் செயல்பட்டு வருகின்றன. தாலுகா அல்லாத மருத்துவமனைகளில், non-taluk hospitals-ல் 60 இடங்களில் இந்தப் பிரிவு மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. 1408 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தாய்-சேய் மருத்துவம் கவனிக்கப்படுகிறது. இவை இல்லாமல் கிட்டத்தட்ட 8,500 இடங்களில் sub-centres, 5 கிராமங்களுக்கு ஓர் இடத்திலே தாய்-சேய் நலப் பிரிவு ஆரம்பித்து அங்கேயும் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி சொல்வதிலே ஓர் உண்மை இருக்கிறது. எந்தெந்தக் கிராமங்களிலே தாய்-சேய் நலப் பிரிவுகள் இருக்கின்றனவோ, அங்கு பணியாற்றுகின்ற மருத்துவச் செவிலியர்கள், அங்கேயே தங்கி மருத்துவம் பார்க்க வேண்டுமென்பதுதான் விதி. ஆனால், அவர்கள் அங்கு தங்குவது இல்லை. காரணம் கேட்டால், அவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடுகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதற்காக, இந்த ஆண்டு நம்முடைய மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இங்கே வந்தபோது 3,000 இடங்களிலே அவர்களுக்குத் தங்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதென்றால்—அவர்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுத்ததற்குப் பிறகு இந்த நிலைமை சீராகும்—அதற்கு ஏறக்குறைய 150 கோடி ரூபாய் பணம் தேவை என்று சொல்லி அதைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் இந்த அரசாங்கம் படிப்படியாக அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 622, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



622—

## அரக்கோணம் பகுதிக்கு மின் வசதி

***13292—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் மின் திட்டத்தை காஞ்சிபுரத்திலிருந்து வேலூருக்கு மாற்றியதை மீண்டும் காஞ்சிபுரத்திற்கே மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வினா எண் 623, திரு. து. செல்வராஜ், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

623—

## உடுமலைப்பேட்டையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***4432—திரு. து. செல்வராஜ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டையில் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உடுமலைப்பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 624, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**624—**

## கிருஷ்ணராயபுரம் தொகுதியில் குடிநீர் வசதி

***7602—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கட்டளைப் பகுதியிலிருந்து கடவூர் வரையுள்ள மக்களுக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கரூர் மாவட்டம், கடவூர், வையாம்பட்டி, மணப்பாறை மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1059 கிராமங்களுக்குச் சேர்த்து குடிநீர் வழங்கும்வண்ணம் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ச. நாகரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதி, காவிரியை ஒட்டியுள்ள தொகுதியாக இருந்தாலும், கிட்டத்தட்ட 75 விழுக்காடு குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதியாக இருக்கிறது. அதற்கு நிவர்த்தி



காண்கின்ற வகையிலே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக கட்டளைப் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கான பணி ஆய்வில் உள்ளதாக அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, நடப்பு ஆண்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல, அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கடவூர், வையாம்பட்டி, மணப்பாறை மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1059 கிராமங்களுக்குச் சேர்த்து குடிநீர் வழங்கும்வண்ணம் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. சித்தலவாடி அருகில் காவிரி ஆற்றில் நீர் ஆதாரம் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.26.92 கோடியிலே திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன், கடவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 214 கிராமங்களிலே உள்ள 83,522 மக்கள் பயன் பெறுவார்கள். தற்போது, இத்திட்டத்தின் மதிப்பீடு, தற்போதைய மக்கள் தொகையின் கணக்கெடுப்பின்படி, இன்றைய விலைவாசியின்படி, திருத்தப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். எவ்வளவு விரைவாக முடிப்பதற்கு முடியுமோ அவ்வளவு விரைவாக, அந்தப் பணியைத் தொடங்கி, முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுசம்பந்தமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழுப்புரத்திற்கு வருகை தந்தபோது அங்கேயுள்ள அதிகாரிகளையெல்லாம் கூப்பிட்டு மணலூர்பேட்டை, தியாகதுர்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், வேப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை துரிதமாகச் செயல்படுத்த அறிவுரை வழங்கினார்கள். ஆனால், அந்தத் திட்டங்கள் துரிதமாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. இதுசம்பந்தமாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[1998 மே 27

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீண் காலதாமதம் இந்தத் திட்டத்தில் ஏற்பட்டாலும் அல்லது அதிகாரிகள் சுணக்கம் செய்தாலும், எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் உரிய நடவடிக்கை எடுத்து, துரிதப்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு வழங்கப்பட இருக்கின்ற கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், மன்னார்குடி நகருக்குக் குடிநீர் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாக அறிகிறேன். அங்கே போதுமான நீர் ஆதாரம் இருப்பதாகத் தகவல் தரப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன். அவ்வழியாகத்தான் அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செல்கிறது. அந்த நகரத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நீர் கிடைப்பதற்கான வாய்ப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக—இந்த அரசு எடுத்திருக்கின்ற முயற்சி—பெரும்பாலும் எல்லோரும் கைவிட்டு விட்ட பிறகு, தமிழக அரசு மட்டுமே முயற்சி எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறது. அப்படியிருக்கின்றபோது, கூடுமானவரையில் அதிக நட்டம் இல்லாமலும், அதிகச் செலவு இல்லாமலும், நீண்டதூரம் சென்று அதிகத் தண்ணீரைச் செலவழிக்காமல் இருப்பதற்காகத்தான் ஒவ்வொரு முறையும் வழியோரக் கிராமங்களையும் எடுத்துக்கொண்டு அதன்படி அனைத்துக் கிராமங்களுக்கும் வரிசையாக நேரடியாக வந்து நேரில் பார்வையிட்டபோது, இடையில் வழி மறித்து நகராட்சித் தலைவர் என்னைக் கேட்டபோது, அவர்களுக்கும் தெளிவான விளக்கங்களைச் சொல்லி அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சாதாரணமாக இலவசமாகச் செய்யப் போவதில்லை. செய்துவிட்டு, பிறகு நகராட்சியிடமிருந்து பணம் பெறத்தான் போகிறோம். அதற்காக தனித் திட்டம் தயாரித்து அந்தப் பணியும் முடிந்திருக்கிறது. தேவையான அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது. நிச்சயமாக பாதிக்கப்படுமானால்,



1998 மே 27]

அந்தத் தண்ணீரைக் கொடுக்கும் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும். அதில் எந்தவிதமான அச்சமும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தர்மபுரி மாவட்டத்தின் தலையாய பிரச்சினையே குடிநீர்ப் பிரச்சினையாகத்தான் உள்ளது. ஒகேனக்கல்-தர்மபுரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், 567 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு, ஜப்பான் நாட்டு நிபுணர்களால் இரண்டு தடவை ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆண்டே அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டது. இந்த ஆண்டு அணுகுண்டு சோதனையால் தற்போது ஜப்பான் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தியுள்ளதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். எனவே, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே எடுத்துச் செய்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றுதான் சென்ற முறையும் சொல்லி, அதனைத் தொடர்ந்து இப்பொழுதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இதற்கு மேல் அதைப்பற்றி விவாதிப்பது தற்பொழுது நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 625, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**625—**

**வாசுதேவநல்லூர் தொகுதியில் கூடுதல் பேருந்துகள்**

***7398—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி-திருநெல்வேலி (121), கடலூர்-திருநெல்வேலி ஆகிய வழித்தடங்களில் இயங்கும் பேருந்துகள் டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை வழித்தடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பேருந்துகளும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும், வருவாயினை மிகவும் குறைவாக ஈட்டியதாலும் 6 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தப்பட்டன. தற்போது தடம் எண் 121 இயக்கப்பட்ட தடத்தில் நெல்லை போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் பேருந்து போக்குவரத்துக் கழகத்தால் மிகக் குறுகிய கால இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கடலூர்-திருநெல்வேலி தடத்தைப் பொறுத்தவரை, கடலூரை, இராமநாதபுரம் மற்றும் சங்கரன்கோவிலோடு தொடர்புபடுத்தி தினசரி 4 சுற்றுகள் 10-1-1997 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதியைப் பயன்படுத்தி சங்கரன்கோவில் வந்தடைந்தால் அங்கிருந்து திருநெல்வேலி செல்ல போதிய பேருந்து வசதியைப் பெறலாம்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகிரியிலிருந்து திருநெல்வேலிக்கு தடம் எண் 121 பேருந்து வழக்கமாக ஓடிக் கொண்டு இருந்தது. அது டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்டது. அதேமாதிரி, கடலூரிலிருந்து திருநெல்வேலிக்கு பஸ் சென்று கொண்டு இருந்தது. அதுவும் நிறுத்தப்பட்டது. அந்த பஸ்கள் மீண்டும் இயக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு துறையினர் கொடுக்கக் கூடிய தகவல்கள் தவறானவை. ஆக, மீண்டும் இந்த இரண்டு வாகனங்களை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எப்பொழுது நிறுத்தப்பட்டது



என்பதுதான்? 6 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்ட பேருந்து. அதைத்தான் நான் முதலில் சொன்னேன். 1991-லேயே அந்த வண்டிகளை நிறுத்தியிருக்கிறார்கள். சென்ற ஆண்டேகூட அவர்களுக்கு இரண்டு தடங்கள் விடப்பட்டு இருந்தன. மீண்டும் அந்த வண்டிகளுக்குப் பதிலாக வேறு தடங்களில் புதிய பேருந்துகளை விட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்தி அதில் ஒரு தடத்தைக் கேட்டிருக்கலாம். அதை விட்டுவிட்டு, இப்பொழுது புதிய தடத்தைக் கேட்கிறார். நிதிநிலையைப் பொறுத்து, துறையின் மூலம் புதிய பேருந்துகளைக் கொடுப்பதைப் பொறுத்து, அவைகளை மீண்டும் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 9-45

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இரண்டு வாகனங்கள் கொடுத்தீர்கள். அந்த இரண்டு பேருந்துகளில், விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்திலிருந்து புளியங்குடிக்கு ஒன்றும், தேவிப்பட்டணத்திலிருந்து சங்கரன்கோவிலுக்கு ஒன்றும் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால், இந்த வழித்தடங்களில் இயங்கிக் கொண்டிருந்த வாகனங்கள் இயங்கவில்லை. பல்வேறு காலகட்டங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வலியுறுத்திச் சொல்லியும் அது இயங்கவில்லை. அதுமட்டுமல்ல. புளியங்குடி டெப்போவில் இருக்கக்கூடிய வண்டிகள், நெல்லை மாவட்டத்திலேயே மிகவும் மோசமானவை. ஆங்காங்கே ரோடுகளில் அவை பழுதடைந்து நின்று விடுகின்றன. ஆகவே, அந்த நிலைகளையெல்லாம் மாற்றி, தொகுதிக்கு இரண்டு வாகனங்கள் என சட்டமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்ட வண்டிகளை, அன்று அந்தத் தடங்களில் இயங்கிய வண்டிகளை, வேறு தடங்களில் அவற்றை மாற்றிவிட்டு, பழைய வண்டிகள், கழிவான, மிகவும் பழுதடைந்த வண்டிகள் இப்போது ஓடிக் கொண்டிருக்கின்றன; அவற்றையெல்லாம் மாற்ற வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன்புகூட, புளியங்குடியில் இருக்கக்கூடிய 'டெப்போ' மேலாளரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பேசும்போது, 'சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு வழித்தடங்களில் வாகனங்கள் கொடுத்தீர்கள்; அவை இரண்டும் மோசமான நிலையில் இருக்கின்றன. நல்ல வண்டிகளை, முதலில் எந்த வழித்தடங்களில் விட்டீர்களோ, அதே வழித்தடங்களில் விடவேண்டும்' என்று கேட்டதற்குப் பிறகும் இதுவரை அந்தத் தடங்களில் வண்டிகள் விடவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

[1998 மே 27

ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த வண்டிகளை மீண்டும் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற குறைகள் நிலவுமானால், நிச்சயமாக அவைகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 626, திரு. த. நடராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**626—**

### பொருள் போக்குவரத்துக் கழகம் அமைத்தல்

***10456—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொருள் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. நடராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 627, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1998 மே 27]

**627—**

### திண்டிவனம் ஈஸ்வரன் கோவில் இராஜகோபுரத்தையும் தேரையும் புதுப்பித்தல்

***3988—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் ஈஸ்வரன் கோவில் இராஜகோபுரத்தையும், தேரையும் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 628, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**628—**

### அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோவில் கட்டுமானப்பணி

***6010—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறைக் கட்டுமானக் கழகத்தில் கட்டப்படும் மாமல்லபுரம் அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோவில் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, 13-5-1998ஆம் நாளன்று குடமுழுக்கு நடைபெற்று முடிந்திருக்கிறது.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்தத் திருப்பணி, நம்முடைய கழக ஆட்சியிலே, முடிவுற்று, குடமுழுக்கும் 13ஆம் தேதி நடைபெற்றிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே, திருக்கழுக்குன்றத்திலே, வேதகிரீஸ்வரர் திருக்கோவில் திருப்பணி, ஆறாண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு, நன்கொடையாளர்கள் மூலமாக, சுமார் 40 இலட்சம் ரூபாய்க்குமேல், இதுவரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் முடிவுறும் தருவாயில் இருக்கிறது. ஆனால், அக்கோவிலில் இராஜகோபுரங்களுக்கு வர்ணம் பூசுகின்ற வேலைக்காக ரூ.4½ இலட்சம் மதிப்பீடு செய்து, அரசுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை அரசு வழங்கினால், அந்தத் திருக்கோவிலுக்கும் உடனடியாகக் குடமுழுக்கு நீராட்டு விழா நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். அதனை அரசு வழங்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இதுகுறித்து தனிக் கேள்வி எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக, பல்வேறு கோவில்களுக்குத் திருப்பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நன்கொடையாளர்கள் மூலமாக கோடிக்கணக்கான, 2 கோடி அல்லது 3 கோடி ரூபாய் அளவிலும், அரசினுடைய சிறு உதவியோடும் திருப்பணிகள் நடைபெறக்கூடிய அந்தக் கோவில்களில் எல்லாம் உதவி கோட்டப்



பொறியாளர்களை விரைவாக நியமனம் செய்து, அப்பணிகள் விரைவாக நடப்பதற்கு ஏற்றவகையில், அரசு அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், பவானி தொகுதியில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோவிலில் நடந்து கொண்டிருக்கின்ற திருப்பணி வேகமாக நடைபெறுவதற்கு, உதவி கோட்டப் பொறியாளரை நியமனம் செய்வீர்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் பல்வேறு கோவில்களில் திருப்பணிகள் நடைபெறுகின்ற காரணத்தினால், ஏற்கெனவே இருக்கின்ற வேலைப் பளுவின் அடிப்படையில், அதிகமான அளவில் உதவி கோட்டப் பொறியாளர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட முடியாத இடர்ப்பாடு இருக்கின்றது. இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, மேற்கொண்டு புதிதாக சிலபேரை பணியமர்த்தவும், எல்லாப் பணிகளை விரைவுபடுத்தவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இரண்டாவதாக, அவர் பவானி சங்கமேஸ்வரர் திருக்கோவில் குறித்துக் கேட்டிருக்கிறார். ஏற்கெனவே, அந்த இடத்தை நானே நேரில் சென்று பார்வையிட்டு இருக்கிறேன் என்பதும் அவருக்குத் தெரியும். இப்போது, திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் அவை நிறைவுபெறும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாகப் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்றாலும், மாநிலத்தினுடைய பல்வேறு கோவில்களிலிருந்து பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன அல்லது திருடப்படுகின்றன. குறிப்பாக குழித்துறையில் இருக்கின்ற சிவன் கோவிலுக்குச் சொந்தமான யானையின் இரண்டு தந்தங்கள் திருடப்பட்டன. அந்த யானை இறந்து போய்விட்டது. அதை அறைக்குள்ளேயே பூட்டி வைத்திருந்தார்கள். திருடப்பட்ட தந்தங்களைப் பற்றி எந்த விவரமும் கிடைக்கப்பெறவில்லை. அதுபோல திருவட்டாறில் ஆதிகேசவப் பெருமாள் சுவாமியினுடைய உடலிலே பொருத்தியிருந்த தங்கத் தகடு பூராவையும் உரித்தெடுத்துவிட்டார்கள். இப்போது மீதி ஒன்றும் கிடையாது. இதற்கெல்லாம் அரசு சீரியஸாக நடவடிக்கை

எடுக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாக இருந்தாலும், இது சம்பந்தமாக என்ன நடந்துள்ளது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாவிற்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவட்டாறு கோவிலில் இருக்கின்ற தெய்வத்திற்குப் பெயர் ஆதிகேசவப் பெருமாள். பொதுவாகவே, பெருமாளுடைய கோலத்திற்கு நின்ற கோலம் என்றும், இருந்த கோலம் என்றும், கிடந்த கோலம் என்றும் 3 பெயர்கள் உண்டு. ஆதிகேசவப் பெருமாள் கிடந்த கோலத்தில் கிடை நிலையில் படுக்கையில் இருக்கிறார். அவருக்குத் தங்கத் தகடு, தங்க முலாம் அல்ல, தங்கத் தகடே பொருத்த வேண்டுமென்று எல்லோரும் முடிவு செய்து பெரிய அளவிலே சிறப்பாகத் தங்கத் தகடு செய்து அந்த சாமிக்குப் பொருத்தினார்கள். ஆனால் துணியைப் போட்டு மூடிவைத்து திருவிழாவிற்கு மட்டும் தான் அதைத் திறந்து பார்க்க வேண்டும் என்று விதியை வைத்த காரணத்தால் அது காலப்போக்கில் கொஞ்சம், கொஞ்சமாகக் கொள்ளையடிக்கப்பட்டது. இது நடந்தது நம்முடைய ஆட்சி வருவதற்கு முன்னால் என்பதையும் நாங்கள் இதுகுறித்து மேடையில் வகை வகையாகப் பேசியிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் உணர்த்த விரும்புகின்றேன். இப்போது அது தொடர்பானவர்கள், திருடியவர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. அதிலே பெரும் பகுதி மீட்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது எனக்குத் தெரிந்து இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் ஆங்காங்கே சில திருட்டுகள் நடைபெற்றாலும்கூட, குறிப்பாக, களக்காட்டிலே நடைபெற்ற திருட்டில் கொலையே நடந்தது. மூன்று பேரைக் கொலை செய்துவிட்டு திருடிக் கொண்டு போனார்கள். ஆனால் ஒரே வாரத்திற்குள் நம்முடைய காவல் துறை மூன்று குற்றவாளிகளையும் கைது செய்து உடமைகளையும் மீட்டு, அவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டு இருக்கிறது. இப்போது உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைப் போல தந்தம் திருடுபோனது போன்ற சிறு சிறு திருட்டுக்கள் நடந்தாலும் கூட இப்போது வந்திருக்கின்ற செய்திகளின்படி எந்த ஒரு பெரிய திருட்டும்



இந்த ஆட்சியில் நடைபெறவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள திருடப்பட்ட சிலைகள் பல மீட்கப்பட்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது, இந்த ஆட்சியின் சாதனை என்பதையும் குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், எத்தனை பிரசித்தி பெற்ற கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன, அந்தப் பணிகள் எப்போது முடிவடையும்? இந்தத் திருப்பணிகளைச் செய்யக்கூடிய கமிட்டி நிறைய இடங்களில் செயல்படாமல் இருக்கிறது. ஆகவே இந்தத் திருப்பணிக் கமிட்டியை மாற்றியமைத்து, திருப்பணிக் கமிட்டி செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவிலில் திருப்பணிக் குழுவில் இருக்கிறார். எனவே, திருப்பணிக் குழு நடந்து கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். நிச்சயமாக அவரும், இயங்காமல் இருக்கிறது என்று சொல்லமாட்டார். அது இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது அவருக்கும் தெரியும். அவருடைய தலைவருக்கும் தெரியும், அமைச்சருக்கும் தெரியும். எத்தனை கோவில்களில் திருப்பணிகள் நடைபெறுகின்றன என்பதை ஏற்கெனவே மானியக் கோரிக்கையின் போதே அறிவித்திருக்கிறோம். ஏறத்தாழ இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மட்டும் 825 கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போதும் பல பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புள்ளிவிவரங்கள் தேவையானால் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 629, திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[1998 மே 27

**629—**

**பொன்னேரியில் சார்பு நீதிமன்றம்**

***6330—திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பொன்னேரியில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு 1998-99 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்பட்டு, அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு சட்டம், சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டதும் இதற்கான ஆணைகள் வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். ராஜு.

**திரு. எஸ். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில், எப்போது அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் என்ன கேட்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அவரை தனிக் கேள்வி போடச் சொல்லிவிட்டேன். திரு. வை. சிவபுண்ணியம்.



1998 மே 27]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட மன்னார்குடி சப்-கோர்ட் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. அதைத் தொடங்குவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு உறுதி அளிக்கப்பட்ட சில நீதிமன்றங்களை அரசு அமல்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டது என்பதை இந்த மாமன்றத்திலே நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். முன்னோடித் திட்டத்தின்கீழ் உயர்நீதிமன்றம் பயன்படுத்தாத கோர்ட்டுகளை ரெகுலர் கோர்ட்டுகளாக எடுத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் சில நீதிமன்றங்களைத் திறப்பதற்கு நாங்கள் ஒப்புதல் அளித்தோம். ஆனால், உயர் நீதிமன்றம் எங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் மன்னார்குடி நீதிமன்றத்தை எங்களால் திறக்க முடியாமல் போய்விட்டது. என்றாலும்கூட, வருகின்ற ஆண்டு அது இடம்பெறும். அதைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் முனைப்புடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் தொடங்கப்படுவதற்கான ஆணையை அரசு வழங்கியது. அந்த இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் தற்போது புதுக்கோட்டை கோர்ட் வளாகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றம், புதுக்கோட்டையில் இயங்குகின்ற இந்த இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தை மாற்றுவதற்கு ஆணை வழங்காத காரணத்தால் ஆலங்குடியில் அந்த நீதிமன்றத்தைத் தொடங்க முடியவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. நான், அமைச்சர் அவர்களை நேரடியாகப் பார்த்து, அந்த நீதிமன்றத்தைத் திறப்பதற்காக அழைத்திருக்கிறேன். எனவே, விரைவில் அந்த நீதிமன்றத்தைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1998 மே 27

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வி சம்பந்தப்பட்ட விவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாகக் கடிதம் எழுதினாலோ, அல்லது வினா எழுப்பினாலோ நான் அதற்கான விவரங்களை அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 630, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**630—**

**உரிமையியல் நீதிமன்றங்கள் தொடங்குதல்**

***8152—திரு. வ. வேலுசாமி :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் உரிமையியல் நீதிமன்றங்கள் கூடுதலாகத் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், குற்றவியல் நீதிமன்றங்களையும், உரிமையியல் நீதிமன்றங்களாக அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் மாவட்டச் சார்பு நீதிமன்றங்கள் நான்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் மூன்றும் ஆக 7 நீதிமன்றங்கள் இருந்தாலும், வீட்டு வாடகை சம்பந்தப்பட்ட வழக்குகள் சற்றேறக்குறைய 10 ஆண்டுகளும், வாகன இழப்பீட்டு நஷ்ட ஈட்டு வழக்குகள் 4 அல்லது 5 ஆண்டுகளும், உரிமையியல் வழக்குகள் 5 அல்லது 6 ஆண்டுகளும் நடைபெறுகின்றன. இப்படி நீதிமன்றங்களில் வழக்குகள் முடிய காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் மக்கள் நீதிமன்றங்களை நம்பாமல், உடனடி பரிகாரம் தேடுவதற்கு விழைந்து



1998 மே 27]

குற்ற நடவடிக்கை உள்ளவர்களோடு தொடர்புகொண்டு, அதன் காரணமாக வன்முறைச் செயல்கள் எல்லாம் ஏற்படுவதற்கான வாய்ப்பு அமைந்து விடுகிறது. பல ஆயிரக்கணக்கான வழக்குகள் மதுரை மாநகரில் மட்டும் தேங்கிக் கிடக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, மதுரை போன்ற வளர்ந்து வரக்கூடிய பெரிய நகரங்களில் அதிகளவில் உரிமையியல் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா? மேலும் குற்றவியல் நீதிமன்றங்களையும் முன்சீப் கோர்ட்டாக இணைத்து நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் இப்போது இரண்டு நீதிமன்றங்கள் இருக்கின்றன. முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என்று இருக்கின்றன. அதேபோல மதுரை தாலுகாவிற்கு என்று ஒரு உரிமையியல் நீதிமன்றம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஆயிரக்கணக்கான வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன என்பது உண்மை. என்னிடத்தில் இருக்கின்ற விவரங்களின்படி ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. அதிகமான நீதிமன்றங்கள் தொடங்க வேண்டும் என்பதும் உண்மைதான். இதைப்பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 631, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. ச. அழகிரி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**631—**

**சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளைத் தடுத்தல்**

***9200—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**
**திரு. ஜி. கே. மணி:**
**திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 27

(அ) சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ள 15 நகரங்களில், சென்னையும் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளதால், வாகனப் புகை, தொழிற்சாலைக் கழிவுகள், பிளாஸ்டிக்-பாலித்தீன் பொருட்களால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். சென்னைப் பெருநகரில் 70 சிசி-க்கு மேல் உள்ள வாகனங்கள் அனைத்திற்கும் புகை சோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் நாளொன்றுக்குச் சேரும் சுமார் 2500 மெட்ரிக் டன் குப்பைகள், தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் இதர திடக் கழிவுகளைச் சேகரிக்க மற்றும் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பின்றி அகற்ற 5 ஆண்டுத் திட்டம் ரூ.210 கோடி உலக வங்கியின் நிதி உதவியுடன் வரும் சனவரி 1999 முதல் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த நீண்ட காலத் திட்டத்தின் தொடக்கமாக, சில பகுதிகள் தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டு, குப்பை வீடுகள் கட்டும் திட்டம், விழிப்புணர்வு முகாம் நடத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூவரும் இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரமானது எந்த அளவிற்குச் சுற்றுச் சூழலால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நேற்று ஒரு நாளிதழில் கூடப் படம் பிடித்துப் போட்டிருந்தார்கள். வாகனங்கள் விடுகின்ற புகையானது காற்றை அசுத்தப்படுத்திக் கெடுத்து விடுகிறது. ஆகவே, வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினுடைய அளவை நிர்ணயிக்கின்ற தரக்கட்டுப்பாட்டினை அரசு கடுமையாக அனுசரிக்குமா? அப்படி அனுசரிக்கப்பட்டால் அது எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்தபிறகுதான் இதனில்



சில நடைமுறை அடிப்படை வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. வாகனங்கள் புகையை வெளியேற்றும் கட்டுப்பாட்டு அளவினை மீறாமல் இருக்கின்றதா என்பதை அறிவதற்கு பல இடங்களிலே தனியார் பெட்ரோல் பங்க்குகளில் இயந்திரங்கள் நிறுவப்பட்டன. ஆனால் அதனுடைய தேவைக்கு மேல் சென்னையில் வாகனங்கள் இருக்கின்றபோது குறிப்பிட்ட காலத்தில் சான்றிதழ்கள் கொடுக்க இயலவில்லை. ஆகவே இன்று மீண்டும் அந்தப் பணி போக்குவரத்துத் துறை சார்பில் தேவைக்கேற்ப பல இடங்களிலே வாகனங்கள் வெளியிடும் புகையின் அளவைக் கண்டுபிடிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு தற்போது முழுமையாக அந்தப் பணி சென்னையில் நடைபெற்று வருகின்றது. திருவள்ளூர், ஊட்டி போன்ற இடங்களில் கூட இந்தப் பணி இப்போதைக்கு நடைபெற்று வருகின்றது. இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற சாந்தோம், முகப்பேர் போன்ற பகுதிகளில் காலை நேரங்களிலே ஒரே நேரத்திலே குவிகின்ற வாகனங்களின் காரணமாக அங்கே ஏற்படுகின்ற மாசு அளவு அதிகம் என்பதைக் கருதி அந்தப் பகுதியிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களின் நேரங்களைக் கூட மாற்றி அமைத்து அதன் மூலமும் வாகனப் புகையை கட்டுப்படுத்தலாம் என்கிற ஒரு அணுகுமுறையும் இப்போது எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 632, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**632—**

## வனவிலங்குகள் சரணாலயம் அமைத்தல்

***11474—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல்லில் வனவிலங்குகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் பகுதியை ஒட்டியுள்ள காப்புக் காடுகள் அனைத்தையும் வனவிலங்குகள் சரணாலயமாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி அறிவிப்பைச் செய்வதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை. அதற்கு இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 633, திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**633—**

**குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு விலை நிர்ணயம்**

***8581—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும் மார்க்கெட் விலையில் பத்திரப் பதிவு செய்து வழங்கப்படும் நிலையை மாற்றி பழைய விலையிலேயே விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் குறைந்த விலையில் ஏழை மக்களுக்கு விற்பனை செய்யும் குடியிருப்புகளுக்கு முத்திரைத் தீர்வைச் சலுகை ஏதும் இல்லாததை அரசு கவனத்தில் கொண்டு, ஏழை மக்கள் பயனடையும் வகையில் சலுகை அளிக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அரசாணை (நிலை) எண் 9, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 8-1-1998-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உத்தரவின் மூலம் சென்னையிலே நகர்ப்புறத் திட்டத்தின்கீழ் இருக்கின்ற குடிசைவாழ் மக்கள் 45,000 பேர்



பயனடைகிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பெரிய சலுகையை குடிசைவாழ் மக்களுக்கு அளித்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில், சமீபத்தில் சென்னை, சர்மா நகர், திரு.வி.க. நகர், சைதை மற்றும் கோவையில் சிங்காநல்லூர் போன்ற இடங்களில் நலிந்த தொழிலாளர்களுக்கு சற்றேறக்குறைய 4117 வீடுகள் கட்டப்பட்டன. அவைகள் பல ஆண்டுக் காலம் ஆகியும் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவில்லை. நம்முடைய தொழில் துறை முன்னாள் மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய பெரும் முயற்சியின் காரணமாக தமிழக முதலமைச்சர் அவர்கள் அதற்கு மனைப் பட்டாக்கள் எல்லாம் வழங்கினார்கள்; விலைப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. ஆனால், அந்தப் பத்திரங்கள் அத்தனையும் பதிவுத் துறை அலுவலகத்திலே இதுவரை பதிவு செய்யப்படாமலேயே இருக்கின்றன. அதற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். ரூ. 9600 என்று விலை நிர்ணயம் செய்து இன்னும் உத்தரவு வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. எனவே, அரசு இதன்மீது உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திலே, Economically Weaker Sections-க்கு முழு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், வீட்டு மனைகளுக்கும் சரி, வீடுகளுக்கும் சரி, பழைய விலையிலேயே முத்திரைத் தீர்வை வசூலிக்க வேண்டுமென்ற கோரிக்கை அடிப்படையில் சிட்கோ லேபர் காலனி, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சர்மா காலனி City Improvement Trust-ல் இருக்கக்கூடிய பல்வேறு வீட்டு மனைகள், சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய மயிலாப்பூர், கே.வி.பி. தோட்டம் இன்னும் பல்வேறு தொகுதிகளிலே ஏற்கெனவே வழங்கப்பட்ட அந்த இடங்களில் பழைய விலை நிர்ணயித்ததிலே—மாண்புமிகு உறுப்பினர் ரூ.9,600 என்று சொன்னாரே அந்த நிர்ணயத்திலே—முத்திரைத் தீர்வை பெறப்பட்டு, இன்றைக்கு பிரிவு 47(A)-ஐயும் இந்த அரசு வாபஸ் வாங்கிக் கொண்டது. எனவே, பழைய விலையினுடைய அடிப்படையிலே முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நான் மிகவும் நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணியை உடனடியாக, இந்த வாரத்திலேயே முடிப்பதற்கான உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏற்கெனவே உத்தரவிட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 634, திரு. அ. அசோகன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**634—**

## சார் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

***9737—திரு. அ. அசோகன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாரூர் தொகுதி, கீழ்வேளூரில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கீழ்வேளூரில் புதிய சார் பதிவகம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர் தொகுதியில் இருக்கிற கீழ்வேளூர் இப்போது வட்டத் தலைநகரமாக விளங்கி வருகிறது. அதைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கிற காரணத்தினால், பத்திரப் பதிவு செய்வது என்றாலும், வில்லங்கச் சான்றிதழ் பெற வேண்டும் என்றாலும், அந்தப் பகுதியிலிருந்து கீழ்வேளூருக்கு வந்து, அங்கேயிருந்து வேறு பேருந்தைப் பிடித்து நாகப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டும். ஆகவே, பொதுமக்கள் நலன் கருதி, கீழ்வேளூரிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகம் அமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்ய வாய்ப்பு உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சார் பதிவகம் தோற்றுவிக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 2000 ஆவணங்கள் அதற்குட்பட்ட இடங்களிலே இருந்து பதிவு ஆக வேண்டும். கீழ்வேளூரில் அதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை. ஆனால், அதற்கு மிக அருகாமையில் இருக்கக்கூடிய திருக்குவளையிலே சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, அதற்குரிய நடவடிக்கை எடுத்து, திருக்குவளையிலே விரைவிலே ஒரு புதிய சார் பதிவகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. அசோகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து இந்த ஆண்டிலேயே திருக்குவளையில் புதிய சார்பதிவகம் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமைச்சருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 635, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**635—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

***9187—திரு. அ. சுடலைமுத்து:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) போடிநாயக்கனூர், இராசிங்காபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1998 மே 27

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து, இருக்கையில் இல்லை.

வினா எண் 636, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**636—**

**கால்நடை மருந்தகம் அமைத்தல்**

***12611—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அலிவலம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலிவலம் ஒன்றியம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பாலத்தளி, உதயசூரியபுரம், கழுகுபுலிக்காடு, கொண்டிகுளம், நடுவிக்கோட்டை போன்ற கிராமங்களில் அதிகப்படியான கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றிற்கு சிகிச்சை அளிப்பதற்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பட்டுக்கோட்டைக்காவது, 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்சிற்றம்பலத்திற்காவது செல்ல வேண்டியிருப்பதால், அந்தப் பகுதியிலே கால்நடைக் கிளை பார்வை நிலையம் ஒன்றைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலிவலம் கிராமம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. பேராவூரணி ஊராட்சி



1998 மே 27]

ஒன்றியத்தின்கீழ் பேராவூரணி, திருச்சிற்றம்பலம், இடையாத்தி ஆகிய கால்நடை மருந்தகங்களும், அலமனம், குறிச்சி மற்றும் ஒட்டங்காடு ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அலிவலம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குறிச்சி கால்நடைக் கிளை நிலையத்திலும், 9 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்சிற்றம்பலம் கால்நடை மருந்தகத்திலும் சிகிச்சை பிரதி வாரம் வியாழக்கிழமைகளில் நடமாடும் கால்நடை மருந்தகம் வாயிலாக அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் பேராவூரணி ஒன்றியம், அலிவலம் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை, நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் ஆண்டுகளில் இது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 637, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**637—**

**ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்**

***2894—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம், செங்கம் தொகுதியில் மலைக் கிராமங்களில் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் செங்கம் தொகுதியில் 26 மலைக் கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) வினா எழ இடமில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கம் தொகுதியில் செயல்படுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் அங்கே சென்று பார்த்தால், சரியான உடை இல்லாமலும்—ருசியுள்ள உணவில்லாமலும், வசிப்பதற்கு சரியான குடியிருப்புகள் இல்லாமலும், நடப்பதற்கு சரியான பாதைகள் இல்லாமலும் ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்லுகின்ற பாதைகள் சரியாக செப்பனிடப்படாமலும் - தகுதியான கல்வியறிவு பெற முடியாமலும் வாழ்கின்ற அந்த மலைவாழ் மக்கள் சரியாக மேம்பாடு அடைய இன்னும் என்னென்ன திட்டங்களை அரசு செயல்படுத்துகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்ணின் மைந்தர்களான மலைவாழ் மக்களுக்கு மலையளவு செய்திட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பழங்குடியினர் துணைத் திட்டம் என்ற ஒன்றை வகுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின்கீழ், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மண் வளப் பாதுகாப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு போன்ற திட்டங்கள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்கு, மத்திய அரசு, மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், உதவி செய்து வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில், மைய அரசு நிதியாக 2½ கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது, மாநில அரசு 1½ கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. இவை தவிர, 16 பெரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் இப்பகுதியில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் இம்மக்களுக்குக் குறுகிய மற்றும் நீண்ட காலக் கடன்களை வட்டியின்றி வழங்கி வருகின்றன. இச்சங்கங்களில் தற்போது 33,890 குடும்பத்தினர் உறுப்பினர்களாக இருந்துகொண்டு பயனடைகின்றனர். இவை தவிர, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூபாய் 29,000 வீதம் பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மற்றும் அடிப்படை வசதிகள் அத்துணையும் இத்துறை மூலமாக பழமையான அந்த மக்களுக்கு புதுவிதமான திட்டங்களை நிறைவேற்றி, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனை திட்டங்கள் இருந்தபோதிலும், அங்கே சென்று பார்த்தால் அந்த மக்கள் சரியான முறையில் வார்த்தைகளால் பேச முடியாமல் இருக்கிறார்கள். எனவே அரசாங்கத்தின் மூலம், அவர்கள் சரியான முறையில் கல்வித் திறனைப் பெற, சிறந்த முறையில் மேம்பாடு அடைய அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் வருகின்ற ஜூன் மாதம் 27, 28 ஆகிய தேதிகளில் கோடை விழா நடக்க இருக்கின்றது. அந்தக் கோடை விழாவில் மண்ணின் மைந்தரான வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், ஆதிதிராவிட நலத் துறையின் அமைச்சராகிய நானும் கலந்துகொண்டு, அந்தப் பகுதியினுடைய திட்டங்களை தீவிரமாகச் செயல்படுத்த இருக்கிறோம். செங்கம் பகுதியில் உண்டு உறைவிடப் பள்ளிகள் மட்டும் மூன்று இயங்கி வருகின்றன. அந்த மாவட்டத்தில் 16 உண்டு உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. கல்வித் துறையிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்பதைத் தெளிவாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள சதுரகிரி மலையில் ஆதிவாசிகள் என்கின்ற மலைவாழ் மக்கள் எந்தவிதமான வசதிகளுமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரிடமிருந்து பரிந்துரை பெறப்படுமேயானால் அது தகுந்த முறையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

[1998 மே 27

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பழங்குடியினருக்குப் பாதுகாப்பு என்ற வகையில், பல்வேறு திட்டங்களை இந்த அரசு செய்து வருகின்றது. அது எந்த அளவுக்கு அங்கே சென்றடைகிறது என்பது கேள்விக்குறி. மேலும், பேரூராட்சிப் பகுதியில் வாழும் பழங்குடியின மக்களுக்கு இந்தத் திட்டங்கள் சென்றடைவதில்லை. அதற்கு விதி இல்லை என்று மறுக்கப்படுகிறது. அந்த விதியைத் தளர்த்தி, பேரூராட்சிப் பகுதியில் இருக்கின்ற பழங்குடியின மக்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்க, அவர்கள் இந்த உரிமைகளைப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து, அந்தந்தப் 'பகுதிகளுடைய பிரதிநிதிகள் நேரிடையாகக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அதில் கவனம் செலுத்த வேண்டும். அதேநேரத்தில் பேரூராட்சிப் பகுதியில், பழங்குடியினருக்கான திட்டங்கள் விரிவுபடுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இது குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

முற்பகல் 10-15

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் சற்று முன்னேற்றம் அடைந்த வேறு மாவட்டங்களுக்குக் குடியேறி விட்டால், அரசு அளிக்கிற சலுகைகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு சாதிச் சான்றுகள் வழங்கப்படுவது இல்லை. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில்தான் அவை வழங்கப்படும் என்று அறிவிக்கிறார்கள் இதனால் அவர்களுடைய முன்னேற்றம் தடைப்படுகிறது. அதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுக்கும் சாதிச் சான்றுகள் வழங்குவதில் நீண்ட தாமதம் ஏற்படுகிறது என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது; அதற்கு வேண்டிய நடவடிக்கைகளிலும் தீவிரமாக இறங்கி இருக்கிறது. தலைமைச் செயலாளர் மூலமாகவும், சம்பந்தப்பட்ட செயலாளர் மூலமாகவும் அந்த மலைவாழ் மக்களுக்கு சாதிச்



1998 மே 27]

சான்றுகளை–2 வாரங்களுக்குள்-மனுக்கள் கிடைத்த 2 வாரங்களுக்குள் வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கின்றது. ஆகவே, குறிப்பிட்ட எந்தப் பகுதியிலாவது தாமதம் ஏற்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தெரிவித்தால், அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் காட்டுநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல மாதங்களா சாதிச் சான்றிதழ்கள் பெற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி நான் ஏற்கெனவே வருவாய்த் துறைக்கும் பட்டியலின மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கும் தெரிவித்து இருந்தாலும்கூட, இன்னும் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சாதிச் சான்றிதழ்கள் பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு அவை உடனடியாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா? அதேபோல, புதிரை வண்ணான் என்று அழைக்கப்படக்கூடிய பட்டியல் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் சாதிச் சான்றிதழ்கள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். எனவே, இந்த இரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உடனடியாக சாதிச் சான்றிதழ்கள் கிடைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் மட்டுமல்ல, மற்றைய மாவட்டங்களிலும் வாழ்கின்ற காட்டுநாயக்கர் சமுதாய மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதில் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையில் தீவிரமாக இந்த அரசு ஈடுபட்டும் இருக்கிறது. காட்டுநாயக்கர் சமுதாயமாக வாழ்கின்ற அந்த மக்கள்கூட சான்றிதழ் வாங்க தாமதம் ஆகின்றது. ஏற்கெனவே காட்டுநாயக்கர் அல்லாதவர்களும் போலிச் சான்றிதழ்கள் வாங்கி இருக்கின்ற காரணத்தினால், அதில் கவனமாக தீவிர கண்காணிப்புடன் இருந்து அந்த சாதிச் சான்றிதழ்களை வழங்க வேண்டி இருக்கிறது. அதனால் சில வட்டங்களில் தாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும் விரைவாக, வேகமாக அதை வழங்குவதற்கு அரசு அத்துணை

முயற்சிகளையும் செய்து வருகிறது. அதைப்போலவே புதிரை வண்ணான் என்ற இனத்தைச் சார்ந்த மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதையும் அரசு கவனத்தில் கொண்டு வேகமாக நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 638, திரு. கு. மனோகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**638—**

### தருமபுரியில் சுற்றுலாப் பொருட்காட்சி

***1210—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் அரசு சுற்றுலாப் பொருட்காட்சி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தருமபுரியில் அரசு சுற்றுலாப் பொருட்காட்சி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் புத்தகங்களைப் படிப்பதைவிட ஒரு பொருட்காட்சிக்குச் சென்று வருவதே சிறந்தது என்று அறிஞர் பெருமக்கள் கூறி இருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தின் தலைநகராக உள்ள இடம் தருமபுரி. அந்த மாவட்டம் படிக்காதவர்கள் இருக்கும் கிராமப் பகுதிகள் நிறைந்த மாவட்டம் ஆகும். எந்தவித பொழுதுபோக்கு அம்சங்களும் இல்லாத தருமபுரி மாவட்டத்திலே, தருமபுரி மாவட்டத்தின் தலைநகரிலே உள்ள அந்த மக்கள் பொழுதுபோக்கை கண்டு களிக்கும் விதத்திலும், அரசின் செய்தி மற்றும் விளம்பரங்களையும், சலுகைகளையும் அறியும் விதத்திலும்—மாவட்டத்திற்கு ஒரு பொருட்காட்சி அமைக்க வேண்டும் என்ற பலருடைய கோரிக்கைகளை ஏற்று—தருமபுரி மாவட்டத்திலே பொருட்காட்சி அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை மூலமாக தற்போது சென்னையில் மட்டும்தான் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. மாநிலத்தின் பிற இடங்களில் பொருட்காட்சி நடத்துவதற்கான வாய்ப்பே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை அரசுத் துறை மூலமாக நடத்த இயலாவிட்டாலும், நகராட்சி மூலமாக நடத்த ஒப்புதல் கேட்டு வரப்பெற்றால், அதை அரசு பரிசீலித்து, அங்கு பொருட்காட்சி நடத்த அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 639, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**639—**

### பழையகாயல் ஆற்றுவழி முகத்துவாரத்தை ஆழப்படுத்துதல்

***7760—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவைகுண்டம் தொகுதியிலுள்ள பழையகாயல் ஆற்றுவழி முகத்துவாரத்தை ஆழப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவைகுண்டம் தொகுதியில் உள்ள பழையகாயல் ஆற்றுவழி முகத்துவாரத்தை ஆழப்படுத்தித் தர அரசு ஆவன செய்யும்.

முற்பகல் 10-20

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழையகாயலில் உள்ள முகத்துவாரத்தை

[1998 மே 27

ஆழப்படுத்தித் தருவதாக வாக்களித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல இதற்கு முன்பு அந்த முகத்துவாரத்தை ஆழப்படுத்தியதற்கு மானியம் வழங்கப்பட்டது. அந்த மானியம் 1990 முதல் 1996 வரையிலும் அந்தப் பகுதியிலுள்ள மீனவர்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை. கேட்டால் தாசில்தாரிடமிருந்து அதற்கான சான்றிதழைப் பெற்றுவர வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படி முகத்துவாரத்தை ஏற்கெனவே தூர் வாரி இருக்கின்றார்கள். எனவே, மானியம் கொடுக்கலாம் என்று உதவி இயக்குநர் அவர்கள், அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். இருந்தாலும், தாசில்தார் சர்டிபிகேட் என்பது கண்டிப்பாக இதில் கொடுப்பதற்கு வாய்ப்பே கிடையாது. ஏனென்று சொன்னால், வட்டாட்சியர்களுக்கும் அந்த முகத்துவாரத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அவர்கள் எங்களுக்குத் தெரியாது என்று மறுத்துவிடுகிறார்கள். எனவே, மீன்வளத் துறையின் உதவி இயக்குநருடைய பரிந்துரையைக் கொண்டு அந்தப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு முகத்துவாரத்தை ஆழப்படுத்தியதற்கான மானியத்தை உடனடியாக அரசு வழங்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முகத்துவாரத்தை ஆழப்படுத்த வேண்டுமென்றால் அந்தக் கிராமத்தில் உள்ளவர்களே பாதி நிதியைச் செலவிட வேண்டும். மீதி நிதிக்காக அவர்கள் ஒரு கருத்துருவை அரசுக்கு அனுப்ப வேண்டும். மீன்வளத் துறை உதவி இயக்குநருக்கு அந்தக் கருத்துரு அனுப்பப்பட்டு, அரசுக்கு வரப்பட வேண்டும். 1985-86 முதல் 1988-89 வரை அந்தக் கிராமத்திற்கு 10,000 ரூபாய் வழங்கப்பட்டது. அதன் பின் 1990-91, 1991-92, 1992-93, 1993-94 ஆகிய இந்தக் காலங்களில் அரசுக்குக் கருத்துருக்கள் வரப்பெற்றன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. 1994-95-ல் கருத்துருக்கள் ஏதும் வரப்பெறவில்லை. 1996-97 ஆம் ஆண்டிற்கு கருத்துருக்கள் வரப்பட்டுள்ளன. நிச்சயமாக கூடிய விரைவில் அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 640, திரு. மீ.அ. வைதியலிங்கம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.



1998 மே 27]

**640—**

**மோட்டார் படகுகளுக்கு டீசல் மானியம்**

***13981—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப்படகிற்கு அரசு டீசல் மானியம் தருவதுபோல் மோட்டார் பொருத்திய படகுகளுக்கும் டீசல் மானியம் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.

திருத்திய விடையைத் தங்கள் அனுமதியுடன் இங்கே வைக்கிறேன்.

(அ) விசைப்படகிற்கு அரசு டீசல் மானியம் தருவதுபோல, பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் இயந்திரம் பொருத்திய கட்டுமரம், வள்ளம் மற்றும் மரைன் பிளைவுட், கண்ணாடி நாரிழைப் படகுகள் போன்றவற்றிற்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியம் வழங்குவது சம்பந்தமான கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து மானியம் வழங்க முடிவு செய்துள்ளது.

(ஆ) இத்திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி செயல்படுத்தப்படும்போது எத்தனை மீனவர்கள் இதிலே பயன்பெறுகிறார்கள். அரசுக்கு அதன்மூலம், மானியம் அளிப்பதால் மேலும் எவ்வளவு செலவாகிறது? இதுவரையிலும் விசைப்படகுகளுக்கு நாம் மானியம் அளிப்பதால் அதன்மூலமாக அரசுக்கு எவ்வளவு செலவாகிறது என்பதனைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1998 மே 27

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் டீசல் விசைப் படகுகளுக்கு, 20 அடி கொண்ட விசைப்படகுகளுக்கு மட்டும் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கலால் வரியை நீக்கியது. அது சம்பந்தமாக 1990-91 முதல் மானியம் வழங்கப்பட்டது. இதில் மாநில அரசின் பங்காக 20 சதவீதமும், மத்திய அரசின் பங்காக 80 சதவீதமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விசைப்படகு மீனவர்களுக்கு 1991-92-ல், 10 இலட்சம் ரூபாயும், 1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளுக்கு--இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து 52.50 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. 1994-95 மற்றும் 1995-96 ஆகிய வருடங்களில் விற்பனை வரி விலக்கு அளிக்காத காரணத்தால், மத்திய அரசின் நிதியுதவி கிடைக்கவில்லை. நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 1996-97-ல் 75 இலட்சம் ரூபாய் இந்த மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல, இப்போது இந்த விசைப்படகு மீனவர்களுக்கான மானியத்தை, இந்த வரி விலக்கை நமது தமிழக அரசு 17 பைசாவாக உயர்த்தித் தந்திருக்கிறது. ஆனால், மத்திய அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் இன்னும் இதற்கென 27 பைசா மட்டுமே தந்துகொண்டிருக்கிறார்கள். நமது தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு மட்டும் இதற்காக வழங்கும் நிதி 36.55 இலட்சம் ரூபாய் ஆகும். பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் கட்டுமரத்திற்கு மண்ணெண்ணெய், டீசல் முதலியவை வழங்குவதற்காக 33,000 கட்டுமரங்கள் உள்ளதில், 20,000 கட்டுமரங்கள் எஞ்ஜின் பொருத்திய கட்டுமரங்களாக இருப்பதால் அந்த 20,000 கட்டுமரங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு மீனவர் கட்டுமரத்திற்கு 125 ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கு 1,500 ரூபாய் வழங்க இருக்கிறது. இதன்மூலம் அரசுக்கு 3 கோடி ரூபாய் செலவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1998 மே 27]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருப்பூர் நகரம் மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு பவானி ஆற்றுத் தண்ணீர் கொண்டு வருவதில் சிக்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. திருப்பூர் நகரம் மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தண்ணீர் அளவை மேட்டுப்பாளையம் பவானி ஆற்றிலிருந்து கொண்டு வருவதில் நிலவும் சிக்கல் குறித்து, திரு. கே. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து திருப்பூர் நகரத்திற்கும் தற்போது திருப்பூர் கிராமங்களுக்கும், ஆக சேர்த்து 29 எம்.எல்.டி. மற்றும் 13 எம்.எல்.டி.-யும் சேர்த்து 42 எம்.எல்.டி. தண்ணீர் திருப்பூருக்கு வரவேண்டும். ஆனால், அவ்வளவு தண்ணீர் வருவதில்லை என்று சொல்கிறார்கள், அதனால், ஜனங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும், அடிக்கடி அங்கே பம்புசெட் ரிப்பேர் ஆகிவிடுகிறது. அதேபோல, அங்கு மின் சப்ளையும் பாதிக்கப்படுகிறது. இத்தகைய பிரச்சினைகளால் குடிநீர் சப்ளை பிரச்சினை ஏற்பட்டு, பல்வேறு இடங்களில் சாலை மறியல் போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற 42 எம்.எல்.டி. தண்ணீரை திருப்பூருக்கு பம்பிங் செய்வதற்குரிய உத்தரவாதத்தை ஏற்படுத்துவதோடு, இடையில் புகளூரிலிருந்து திருப்பூருக்கு வருகிற தண்ணீரை எடுத்து வேறு ஊர்களுக்கு விநியோகிப்பதை நிறுத்திவிட்டு, அதற்குத் தனி ஸ்கீம் போடுவதற்குரிய முறையிலே பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மேலும், திருப்பூர் நகரத்திற்கு 29 எம்.எல்.டி. தண்ணீர் வேண்டி இருக்கிறது. இப்போது கிராமங்களுக்கும் விஸ்தரிப்பதன்மூலம் மேலும் 13 எம்.எல்.டி. தண்ணீர் தேவைப்படுகிறது. 42 எம்.எல்.டி. தண்ணீர் அங்கிருந்து வருவதே இல்லை என்று சம்பந்தப்பட்ட பொறியாளர்களே சொல்கிறார்கள். 42 எம்.எல்.டி. தண்ணீர் திருப்பூருக்கு பம்பிங் செய்து சப்ளை செய்யப்படவில்லை என்றால், கடுமையான சட்டம்-ஒழுங்கு

பிரச்சினை ஏற்பட்டுவிடக்கூடும் என்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொண்டு, எத்தகைய இடையூறுகளும் இல்லாமல் 42 எம்.எல்.டி. தண்ணீரை சப்ளை செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடர்ப்பாடுகள் குறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அவ்வளவும் உண்மை. துரதிர்ஷ்டவசமாக, இரண்டு முறை மாற்றப்பட்ட உபகரணங்கள் பழுதுபட்டு விட்டன. ஆனால், அதிலிருந்த மோட்டாரை இயக்குவதற்கு, எந்த கம்பெனியிலே ஏற்கெனவே வாங்கினோமோ, அந்தக் கம்பெனியில் மட்டும்தான் அந்த உபகரணங்கள் கிடைக்கிற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் கொஞ்சம் காலதாமதம் செய்துவிட்டார்கள். பிறகு, அதை மறுபடியும் மாட்டி ஓட்ட ஆரம்பித்தபிறகு, இன்னொன்று அதேபோலப் பழுதாகிவிட்டது. இதற்குப் பிறகு மறுபடியும் மணல் அரிப்பு ஏற்பட்டு அதில் மறுபடியும் நட்டம் ஏற்பட்டு, அது மறுபடியும் புனரமைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும்விட, இறுதியாக, அவர் குறிப்பிட்டதைபோல, கொடுக்கவேண்டிய அளவு தண்ணீர் என்பதைவிட, மக்கள் தொகை அதிகமாகி வருவதால், ஏறத்தாழ இன்றைக்கு, திருப்பூர் நகரத்தினுடைய கணக்கைப்பார்த்தால் கி.பி. 2001-ல்தான் 3 இலட்சம் மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து, திட்டமிட்டு, கணக்கிட்டு தண்ணீரை நாம் உற்பத்தி செய்தோம். ஆனால், இன்றைக்கே மக்கள் தொகை 3 இலட்சத்தை தாண்டி விட்டது. ஆகையினால், தண்ணீர் தடுத்துப் போகவில்லை, தண்ணீர் வந்து சேராமலும் இல்லை. ஆனால், மக்களுக்குத் தேவையான அளவு தண்ணீரைக் கொடுக்கிற அளவுக்கு அது இல்லை. ஆகையால், எது எப்படியிருந்தாலும், அந்தத் திட்டத்தில் இருக்கிற குறைபாடுகள் நிச்சயம் பரிசீலிக்கப்படும். இன்னும் சொல்கிறேன், அதே திட்டத்தை விரிவுபடுத்துவதாக இருந்தாலும். அல்லது அதோடு இணைந்து தனித்த ஒரு திட்டத்தை அந்தப் பகுதிக்குக் கொடுத்துவிட்டு இதைச் செய்வது என்றாலும், பரிசீலித்து தக்க முடிவு எடுக்கப்படும். எந்தக் காரணத்தைக் கொண்டும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை அங்கே வரக்கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். நான் குடிதண்ணீர் கொடுக்கிற பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.



## (ஆ) கோவை சிந்தாமணி ஊழியர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, கோவை சிந்தாமணியில் அனைத்து ஊழியர்களும் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. நடராசன். திரு. கே. சுப்பராயன். திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே, திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கின்ற சிந்தாமணியில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அங்கே கடந்த 14 ஆம் தேதியிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் சில சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்ற காரணத்தினால், மக்களுக்கு விநியோகிக்கப்படுகிற உணவுப் பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் பெரிதும் துன்பப்படுகிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

முற்பகல் 10-30

அதைப்போல, தொழிலாளர்கள், கடந்த 3 மாத காலமாக அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படாமல் இருப்பதால் மிகுந்த சிரமத்திலே இருக்கின்றார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். அதைப்போல, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் பல கோடி ரூபாய்களை, அந்த சிந்தாமணியின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கியிருந்தாலும், அவைகள் உரிய காலத்திலே கிடைக்காத காரணத்தினால், அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த சிந்தாமணிக்குச் சொந்தமான ஏ.டி.டி. காலனியில் உள்ள இடத்தை கூட்டுறவு ஒன்றியத்திற்கு விலைக்குக் கொடுத்தால், ஏறத்தாழ 7 கோடி ரூபாய் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம், சிந்தாமணி மொத்தச் சிறப்பங்காடிக்குக் கிடைக்கும். அதன்மூலம், அந்தச் சிறப்பங்காடியிலே இருக்கின்ற தொழிலாளர்கள் நல்ல முறையிலே பணியாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதைச் செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணி ஒரு காலத்திலே ஆசியாவிற்கே வழிகாட்டுகிற ஒரு கூட்டுறவு அங்காடியாக இருந்து வந்தது. இலாபகரமாக நடந்து வந்த அந்த அங்காடி இன்றைக்கு அநேகமாக உள்ளொடுங்கி, இருக்கிற இடமே தெரியாத அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு 4 மாத காலமாக சம்பளம் கொடுக்கவில்லை. வேலை செய்யும் ஊதியத்தையே கொடுக்கவில்லை என்பதற்காகக் கடந்த 16 ஆம் தேதியிலிருந்து அவர்கள் stay-in-strike-ஐ மேற்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பி.எஃப்., இ.எஸ்.ஐ., தொழிலாளர்கள் கூட்டுறவுக் கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய பணம், அதேபோல தொழிலாளர்களுடைய நலநிதி, இப்படிப் பல்வேறு வகைகளில் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட பணம் 2½ கோடி ரூபாயையும், நிர்வாகமே எடுத்துக் கொண்டது. சம்பந்தப்பட்ட துறைகளில் கட்டவில்லை. 4 மாத காலச் சம்பளம் கொடுக்கவில்லை என்பதோடு, 2½ கோடி ரூபாய் தொழிலாளர்களின் பணத்தையும் நிர்வாகம் எடுத்துக்கொண்டது. அதுமட்டுமல்லாமல், வி.ஆர்.எஸ்.-சின்கீழ் நீங்களே பணியினின்று நின்றுகொள்ளலாம் என்று அவர்களிடம் எழுதி வாங்கிக்கொண்டார்கள். 227 தொழிலாளர்கள் வி.ஆர்.எஸ்.-சின்கீழ் கையெழுத்திட்டிருக்கிறார்கள். வி.ஆர்.எஸ்-சின்கீழ் கையெழுத்திட்டிருக்கிற 227 தொழிலாளர்களுக்கு 4 கோடி ரூபாய் கொடுத்தால்தான் கணக்கு சட்டப்படி முடிக்கப்படும். அவர்களுக்கு 4 கோடி ரூபாய் கொடுக்கவில்லை; அவர்களுக்கு வேலையும் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இதுதான் மிக முக்கியமான பிரச்சினை. ஒன்று அவர்களே, வி.ஆர்.எஸ்.-சின்கீழ் கையெழுத்து வாங்கிக்கொண்டவர்கள், வி.ஆர்.எஸ்.-சின்படி கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்பி இருக்க வேண்டும். அனுப்பாதது மட்டுமல்ல, வி.ஆர்.எஸ். கணக்கு முடிக்கிற வரை தொடர்ந்து வேலை செய்யவும் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். 'குதிரை கீழ தள்ளி குழியும் பறித்து மூடிவிட்ட' மாதிரி இருக்கிறது இந்தக் கதை. இந்த நிலையை மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. இவைகளின் காரணமாகத்தான் அந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு stay-in-strike செய்து, தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துகிறார்கள். நான் மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, பிடித்தம் செய்த பணம் ரூ. 2½ கோடி, வி.ஆர்.எஸ்.-சின்கீழ் கையெழுத்திட்ட தொழிலாளர்களுக்குக்



கொடுக்கவேண்டியது ரூ. 4 கோடி, ஆக ரூ. 6½ கோடி. அதுபோக, 4 மாதத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் 1 கோடி ரூபாய். ஆக 7½ கோடி ரூபாய். அதுபோக, அந்த சிந்தாமணி நன்றாக நடக்க வேண்டும் என்றால், அதற்கு 2 கோடி ரூபாயாவது வேண்டும். இப்படி ஏறத்தாழ 10 கோடி ரூபாய் வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, அதில் அக்கறை செலுத்தி, பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதில் நான் 2 ஆலோசனைகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று, மதுபானக் கடைகளை அரசு நிர்ணயித்த விலைக்கு 29 சேல்ஸ் சொசைட்டிகளுக்குக் கொடுக்கவேண்டும். அப்படி சேல்ஸ் சொசைட்டிகளுக்குக் கொடுத்தால், தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், இலாபகரமாக நடத்துவதற்கும் வாய்ப்பு ஏற்படும். மாநில அரசுக்கு இந்த ஆண்டு கொஞ்சம் நல்ல வருமானம் வந்திருக்கிறது. வந்திருக்கிற வருமானத்தை இந்த மாநில அரசு ஒவ்வொரு சேல்ஸ் சொசைட்டிக்கும் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள், இந்த மதுபானக் கடைகளை எல்லா சேல்ஸ் சொசைட்டிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். இன்னொரு ஆலோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன். கோவை, ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் மத்திய கூட்டுறவு வங்கிகளில் 600 இடங்கள் காலியாக இருக்கின்றன. அப்படி காலியாக இருக்கிற 600 இடங்களில், கல்வித் தகுதியுள்ள இந்த வி.ஆர்.எஸ்.-சின்கீழ் கையெழுத்திட்டு இருக்கிற தொழிலாளர்களைத் தேர்வு செய்து அங்கே இணைத்துக்கொள்ளலாம். அதற்கு அரசு முன்வருமா? சிலுவையில் அறையுண்டது போல, இரத்தக் கசிவோடு இருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு, தயவுசெய்து அவர்களின் உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கு, மிகுந்த பரிவோடு மாநில அரசு கைகொடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு இரா. தாமரைக்கனி.

பிற்பகல் 10-35

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை, சிந்தாமணிக் கூட்டுறவு அங்காடி ஒரு காலத்தில் இந்தியாவுக்கு வழிகாட்டியாக, மதிப்பிற்குரிய தொழில் அதிபர் ஜி.ஆர்.டி. அவர்கள் இருக்கும்போது ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. பக்கத்தில்

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 மே 27

இருக்கின்ற மளிகைக் கடை வியாபாரிகள்கூட, இந்த சிந்தாமணி சிறப்பு அங்காடி, சிறப்பாகச் செயல்படுவதைக் கண்டு, மிரண்டு போய் இருந்தார்கள். பெரியவர் ஜி.ஆர்.டி. அவர்கள் இருக்கும் போது மிகவும் வெளிச்சமாக இருந்தது அந்த அங்காடி. இப்போது இருள் அடைந்து செயல்படாமல் இருப்பது மிகவும் வேதனை தாக்கூடியதாக இருக்கிறது.

இந்த சிந்தாமணி சிறப்பு அங்காடி செயல்படாததற்குக் காரணம், அங்கு வேலைபார்க்கிற தொழிலாளர்களா அல்லது இதற்கு முன்னால் இருந்த அதிகாரிகளா அல்லது இரண்டு பேரும் சேர்ந்து அதைச் செயல்படாமல் ஆக்கிவிட்டார்களா; யார் என்று கண்டறிய வேண்டும். ஆகவே, தவறு செய்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல், தொழிலாளர்களிடமிருந்து கட்டாயமாக எழுதி வாங்கி சுமார் 268 தொழிலாளர்களை விருப்ப ஓய்வில் அனுப்ப நிர்வாகம் முடிவு செய்துவிட்டது. ஆனால், பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. அதனால், சிலபேர் வேலைக்குத் திரும்பவும் வந்து சேரவேண்டும் என்று சொல்கிறார்கள். அதையும் ஏற்க மாட்டேன் என்று சொல்கிறது நிர்வாகம். கடைசியில் அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாக இருக்கிறது. இது முக்கியமான பிரச்சினை, தொழிலாளர்கள் பிரச்சினை. ஆகவே, தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய இ.எஸ்.ஐ., பி.எஃப்., தொழிலாளர் நல நிதி, சொசைட்டி கடன் போன்றவை 2½ கோடி ரூபாய் வரைக்கும் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இன்னும், 10 கோடி ரூபாய் கொடுத்தாலும், அந்த சிந்தாமணி சிறப்பு அங்காடி செயல்படுமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களுடைய நலன் கருதி, தொழிலாளர்கள் நலன் கருதி, எந்த வகையிலாவது அரசாங்கம் மானியமாக சுமார் 10 கோடி ரூபாய் கொடுத்து அந்தத் தொழிலாளர்கள் வாழ்வுக்கு வழி வகுக்கவும், தொழிலாளர்கள் பிரச்சினைக்கு இறுதி முடிவு கட்டவும், அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவும்--(மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.-- இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மானியம் ரூபாய் 10 கோடி வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1998 மே 27]

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கோவை சிந்தாமணியைப்பற்றி விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்கள். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசுகின்றபோது, பெரியவர் தொழில் அதிபர் ஜி.ஆர்.டி. அவர்கள் இருக்கின்றபோது உலகமே வியக்கும் வண்ணம் சிந்தாமணி இருந்தது. இப்போது இருள் அடைந்திருக்கிறது என்பதை இங்கே சொன்னார்கள். எந்தக் காலத்திலே அடைந்தது என்று சொன்னால், அவருக்குக் கொஞ்சம் எப்படி இருள் அடைந்தது என்று சொன்னால், அவருக்குக் கொஞ்சம் வருத்தமாக இருக்கும். ஒரு காலத்திலே கூட்டுறவுச் சங்கங்கள், 29 மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மிகச் சிறப்பாக நடந்தன. மக்கள் எல்லாம் அங்கேதான் சென்று பொருள்களை வாங்குகிற நிலையில் இருந்தது. அந்தச் சங்கங்களில் இடையிலே 16 ஆண்டு காலம் தொடர்ந்து தேர்தல் நடைபெறாமல், அதிகாரிகள்மூலமாக நிர்வாகம் நடந்ததால் அல்லது ஆட்சியில் இருந்தவர்கள் அதைத் தவறாகப் பயன்படுத்திய காரணத்தால், இன்றைக்கு மூன்றே மூன்றுச் சங்கங்களைத் தவிர, மற்ற அத்தனைச் சங்கங்களும் மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன.

இதைக் கருத்திற்கொண்டுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-வது முறையாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன், இன்றைக்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பராயன் அவர்களும், திரு. தாமரைக்கனி அவர்களும் சொல்கிறார்களே, அரசு மானியம் தரவேண்டும் என்று, கடந்த ஆண்டு 3 கோடி ரூபாய் அப்படி அரசு மானியம் தந்துதான், அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் தரப்பட்டது. சம்பளம் தரப்பட்டது மட்டுமல்ல, ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்து, கடந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டு, தொழிலாளர்களோடு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கூட்டுறவுத் துறை அதிகாரிகளும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்படி ஒரு நிலையை எடுத்தார்கள். இருக்கின்ற தலைமை வங்கியும், மத்திய கூட்டுறவு வங்கியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும் இணைந்து, ஒரு நிதியைத் தயார் செய்து, நலிவுற்ற சங்கங்களுக்கு உதவுவது என்ற வகையில் இன்றைக்கு ஒரு செயல்பாடு நடந்து கொண்டிருக்கிறது. அதிலே நபார்டு வங்கியானது ஒத்துக்கொள்ளாத காரணத்தால், இடையிலே கொஞ்சம் தாமதம். இல்லையென்றால், 25 கோடி ரூபாய் நிதியாக ஒதுக்கி நலிவுற்ற சங்கங்களுக்கு வழங்குவது என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

முதலில் 6 சங்கங்களை எடுத்துக்கொள்ளலாம் என்றும், கோவை சிந்தாமணி, திருச்சியில் அமராவதி, சிந்தாமணி போன்ற 6 சங்கங்களை எடுத்துக் கொண்டு உதவுவது என்றும் தீர்மானித்து, உடனடியாக, கோவை சிந்தாமணிக்குப் பணம் தரவேண்டும் என்று சொல்லி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற நிலங்களை சகோதரக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மாற்றி, சகோதரக் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து அவர்களுக்குப் பணம் தரவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, உடுமலைப்பேட்டையில் இருக்கின்ற கோவை சிந்தாமணிக்குச் சொந்தமான நிலத்தை 'டான்ஃபெட்'-க்கு விற்பனை செய்து, நேற்று ரூபாய் 78,46,074 தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், அதற்கு 2 கோடியே 57 இலட்சம் ரூபாய் அளவிற்கு உடனடியாகச் செலுத்தினால்தான், அங்கு ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்குப் பணம் வழங்கப்பட முடியும் என்பதை எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது 1 கோடியே, 80 இலட்சம் ரூபாய் இந்த வாரத்திலே அவர்களுக்குப் பணம் தரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து, விரைவில் இன்னும் ஒரு வார காலத்தில் விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்குப் பணம் வழங்கவும், தொடர்ந்து, அந்தச் சங்கங்களை நடத்துவதற்கும் அரசு பெரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இடையிலே நில மாற்றம் சம்பந்தமாக சட்டச் சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது. உடனடியாக இந்த அரசு, அந்தத் தொழிலாளர்களுக்கு, விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்குப் பணமும், தொடர்ந்து, அந்தச் சங்கத்தை நடத்துவதற்கு உரிய முயற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிறது. நிச்சயம் செய்வோம்.

முற்பகல் 10-40

ஆனால், அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு 4 மாத காலம் ஓர் இடத்திலே சம்பளம் இல்லை என்றால் அது சிரமம்தான். முன்னறிவிப்பு இல்லாமல உடனடியாக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இன்றைக்கு அதிலே பெரிய சங்கடத்தை உண்டு பண்ணி இருக்கிறார்கள். தொடர்ந்து, தொழிலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த அரசைப் பொறுத்தவரை, உங்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்படுகிற முதலமைச்சர், நிச்சயமாக உங்களைக் கைவிடமாட்டார் என்பதைச் சொல்லி, 'இந்த வேலை நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து வேலையிலே ஈடுபடுங்கள்; இன்னும் ஒரு



வார காலத்தில் உங்களுக்குத் தேவையானதை நாங்கள் செய்து தருகிறோம்' என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன விளக்கத்தில் இரண்டு விஷயங்களைக் கேட்க விரும்புகிறேன். அந்த 4 மாத காலச் சம்பளம் எப்பொழுது வழங்கப்படும்? வி.ஆர்.எஸ்.-லே செல்கின்றவர்களுக்கு 'பணம் கொடுக்கிறவரை, அவர்கள் தொடர்ந்து வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்களா? தொழிற்சங்கத்தில், குறிப்பாக, ஏ.ஐ.டி.யூ.சி.-யினுடைய தலைவராக இருந்த அசோகன் என்பவர்மீதும், செயலாளராக இருந்த இராமநாதன் என்பவர்மீதும் அதுவும் சட்டமன்றத்தில் நான் அந்த சிந்தாமணியினுடைய ஊழல் பிரச்சினையைக் கிளப்பிய காரணத்தால் அவர்கள் எனக்கு மெட்டீரியல் கொடுத்திருப்பார்கள் என்று கருதி உள்நோக்கத்தோடு எஸ்.ஓ. அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த இருவர் மீதான நடவடிக்கையையும் ரத்து செய்து, மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணியினுடைய பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 781. வருடாந்திரச் சம்பளம் ரூபாய் 268 இலட்சத்து 71 ஆயிரம். 1998 மார்ச் மாத மொத்தச் சம்பளம் ரூபாய் 25 இலட்சம். நிகரம் ரூபாய் 15 இலட்சம். இதிலே மொத்தம் நிகர நஷ்டம் ஓர் ஆண்டுக்கு 2 கோடியே 55 இலட்சம் ரூபாய்; இதுவரை அதிலே ஏற்பட்டிருக்கின்ற நஷ்டம் 16½ கோடி ரூபாய். அதனால்தான் இன்றைக்கு சகோதர நிறுவனங்களாக இருந்தால்கூட, அவர்களுக்குப் பணம் தர வேண்டுமென்று சொன்னால், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தர மறுக்கின்றன. ஏன் என்றால், மத்திய ரிசர்வ் வங்கி இன்றைக்கு ஒரு புதிய சட்டத்தை இயற்றியிருக்கிறது. தரப்பட்ட கடன்களை இன்றைக்கு வசூல் செய்தால்தான், வங்கியிலே நீங்கள் இலாபம் என்று காட்ட முடியும். இல்லை என்றால், இலாபம் என்று காட்டக் கூடாது என்று புதிய சட்டம் வந்திருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு வங்கிக்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பணம் தர மறுக்கின்றன. அவர்களுக்கு உரிய சம்பளத்தை உடனடியாகத் தர வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. இதிலே குறிப்பிட்ட தேதிக்குள்ளாக—சில சட்டச் சிக்கல்கள் இருப்பதால்—

நடார்டு வங்கியோடு அணுக வேண்டும்; அவர்களோடு பேச வேண்டும். இதிலே பெருமுயற்சி எடுத்து அதிகாரிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவிலே, 10 நாட்களுக்குள்ளாக அவர்களுக்கு அந்தப் பணத்தைத் தருவதற்குரிய பெருமுயற்சி எடுக்கப்படும்.

இங்கே உறுப்பினரவர்கள் மாண்புமிகு தொழிலாளர் தலைவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். உரிய முறையில் ஆராய்ந்து அது உண்மையாக இருக்குமானால், நிச்சயமாக மீண்டும் அவர்களுக்குப் பணி தரப்படும் என்ற உறுதியை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஒன்றியத்திலே ஏராளமான பணம் இருக்கிறது. ஏ.டி.டி. (A.T.T.) காலனியிலே இருக்கின்ற சிந்தாமணியினுடைய இடத்தை ஏறக்குறைய 7 கோடி ரூபாய் விலைக்கு கூட்டுறவுத் துறையிலே வாங்கி, அங்கே ஒரு காம்ப்ளக்ஸ் கட்டினால், கூட்டுறவு அலுவலகங்களையும் வைக்கலாம்; ஷாப்பிங் காம்ப்ளக்சும் வைக்கலாம். அதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டுறவு ஒன்றியத்தில் ஏராளமான பணம் இருக்கிறது என்று, இன்றைக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அத்தனை பேருமே சொல்கிறார்கள். ஒன்றும் அதிகமான பணம் இல்லை. 18 கோடி ரூபாய் அதிலே பணம் இருக்கிறது. அது பயிற்சிப் பள்ளியை நடத்திக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து, அந்த நிறுவனத்தையும் நாங்கள் நலிவடையச் செய்ய விரும்பவில்லை. நலிவடைந்த நிறுவனங்களைத் தொடர்ந்து செயல்படச் செய்வதற்கு ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுதுகூட கூட்டுறவு ஒன்றியத்திலேயிருந்துதான் ஒரு கோடி ரூபாய் பணம் தரப்பட்டிருக்கிறது கோவை சிந்தாமணிக்கு. தொடர்ந்து அந்த சிந்தாமணியை நல்ல முறையிலே நடத்துவதற்கு உரிய முயற்சி எடுத்து, வெகு விரைவிலே நல்லதொரு முடிவைக் காண்போம் என்ற உறுதியைத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை சிந்தாமணி சிறப்பு அங்காடிக்கு, நிறைய சொத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தச் சொத்துக்களை கூட்டுறவு





இணையத்திற்கு விற்று, சிந்தாமணி கூட்டுறவுச் சங்கம் செயல்படுவதற்கும், அந்தத் தொழிலாளர்களுக்குப் பணம் பட்டுவாடா நல்ல முறையில் செய்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, சொல்லியிருக்கிறேன். சகோதர நிறுவனங்களுக்கு அந்த அசையாச் சொத்துக்கள் மாற்றம் செய்யப்பட்டு, அந்த நிதியை கோவை சிந்தாமணிக்குத் தருவதற்குரிய முயற்சியை எடுத்த காரணத்தினாலேதான், உடுமலைப்பேட்டையில் இருக்கின்ற நிலம் டான்ஃபெட் நிறுவனத்திற்கு ரூபாய் *1,49,09,000*க்கு மாற்றப்பட்டு அந்நிறுவனம் டான்ஃபெட்டுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி ரூ. *70,62,926* போக மீதி அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த முயற்சியை எடுத்து—அசையாச் சொத்துக்கள், கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேலே மதிப்புள்ளவை கோவை சிந்தாமணிக்கு இருக்கின்றன—அதைத் தனியார் யாருக்கும் விற்காமல், சகோதர கூட்டுறவு நிறுவனங்களுக்கு அவற்றை மாற்றி, உரிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, நல்ல முறையிலே அந்த சிந்தாமணி நடைபெற, உரிய முயற்சிகள் விரைவில் நிச்சயமாக எடுக்கப்படும் என்ற உறுதியைக் கூறுகிறேன்.

## (இ) பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து மருத்துவமனைகள் நடத்திவரும் மருத்துவர்கள் மீது நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து மருத்துவமனைகள் நடத்திவரும் மருத்துவர்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் போலி மருத்துவர்களை ஒழிப்பதற்காக தமிழ்நாடு அரசு நல்ல நடவடிக்கை எடுத்து வருகின்ற காரணத்தினால், போலி மருத்துவர்கள் மத்தியிலே ஓரளவிற்கு பீதி ஏற்பட்டு, அது கட்டுப்பாட்டுக்குள் வந்துகொண்டிருக்கிறது. இந்தநேரத்தில், இந்தப் பிரச்சினை குறித்து, இந்த அவையின் மூலமாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன்.

இந்திய மருத்துவக் கவுன்சிலின் விதிமுறைகளின்படி, எந்த மருத்துவரும் விளம்பரம் கொடுத்து சிகிச்சை அளிக்கக் கூடாது. விளம்பரம் தேடக்கூடாது என்பது ஒரு விதிமுறை. அப்படியிருக்கின்றபோது, பக்கம் பக்கமாக, தொடர்ச்சியாகப் பலபேர் விளம்பரம் கொடுத்துவருகிறார்கள். குறிப்பாக, ஆண்மைக் குறைவு, வீரியம் இல்லாமை என்று வாரப் பத்திரிகையிலும், மாதப் பத்திரிகையிலும் விளம்பரம் கொடுக்கிறார்கள். இதில் என்ன விபரீதம் என்றால், அந்த மருந்துகளுடைய விலையைப் பாருங்கள், ஸ்பெஷல் செட் 3 ஆயிரம் ரூபாய், ஏ1 செட் 2 ஆயிரம் ரூபாய், பி1 செட் ஆயிரம் ரூபாய், ஏ குரூப் 450 ரூபாய். இதெல்லாம் என்ன? ஸ்பெஷல் செட் என்றால் என்ன, ஏ1 என்றால் என்ன, பி1 என்றால் என்ன என்பதெல்லாம் தெரியவில்லை. இதை நம்பி, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த மருந்துகளையெல்லாம் வாங்கி, இருக்கக்கூடிய ஆண்மையையும், இருக்கக்கூடிய வீரியத்தையும் இழந்திருக்கிறார்கள்.

அடுத்தது, இதேபோல இன்னொரு விளம்பரம். பல விளம்பரங்கள் வரும். 'நீங்கள் மொட்டைத் தலையா'? 'முடி இல்லையா'? அப்படியென்று விளம்பரம். அதைப்பற்றி ஏற்கெனவே சபையில் சொல்லியிருக்கிறார்கள். 'துக்ளக்' பத்திரிகையில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். வழக்கமாக எல்லா வாரப் பத்திரிகையிலும் வரும். அதுபோல, துக்ளக்கிலும் வரும். நானும் 30 வருடங்களாகப் பார்க்கிறேன். அதன் ஆசிரியர் சோ அவர்களுடைய தலையிலேகூட முடி வந்தது மாதிரி தெரியவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் என்ன சொல்கிறார். விளம்பரம் என்றுதான் சொல்கிறார்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதுபோல, அக்பர்கவுசர்கூட விளம்பரம் கொடுக்கிறார்கள். மருத்துவத்தில் கிளைம் அதிகமாகப் பண்ணிக்கொள்ளக்கூடாது. விளம்பரம் செய்தால் மோகம் ஏற்பட்டு, மக்கள் இதைக் கண்டு ஏமாறுவதற்கும், கோடிக்கணக்கான மக்களுடைய பணம் விரயமாவதற்கும்தான் பயன்படும். எனவே, உண்மையான போலி மருத்துவர்கள் யார் என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். இதுபோல, பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து சிகிச்சை அளிப்பதையும், மோசடி மருந்துகள் விற்பனை செய்வதையும் உடனடியாகத் தடை செய்ய நடவடிக்கை எடுத்தால்தான், உண்மையான



போலி மருத்துவர்களை ஒழிக்க முடியும் என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுதான் உண்மையான சுகாதாரத்திற்கு நாம் வழி வகுப்பதாக இருக்க முடியும். பல பேர், பல வைத்தியர்கள் இதுபோல் வந்திருக்கிறார்கள். எனவே, இனிமேல் தமிழ்நாட்டில் எந்தப் பத்திரிகையிலும் விளம்பரம் கொடுக்கக்கூடாது என்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? எடுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்து சில மருத்துவர்கள் தொழில் நடத்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பொதுவாக, இப்போது தமிழ்நாட்டிலுள்ள மக்களை யார் யாரோ ஏமாற்றி வருகிறார்கள். அதிலே ஒரு பகுதியாகத்தான் இந்திய மருத்துவர்கள் அல்ல; அலோபதி படித்த மருத்துவர்கள் அல்ல; இந்திய மருத்துவம் என்ற பெயராலே, ஹோமியோபதி என்ற பெயராலே மற்ற துறைகளிலே இருக்கக்கூடிய சிலர் அதைப் படிக்காமலேயேகூட, அந்தப் பட்டங்களைப் பெறாமலேயேகூட, லேகியங்கள் தயாரிப்பதாகவும், அந்த லேகியங்களைச் சாப்பிடுவதன் மூலம் ஆண்மைக் குறைவு போன்ற நோய்கள் எல்லாம் தீர்க்கப்படும் என்றும், அதன் பெயராலே ரூ. 1,000, ரூ. 2,000 என்று வசூல் செய்தும், இன்னும் சொல்லப்போனால் சில ஸ்டார் ஓட்டல்களிலேயே அவர்கள் அறை எடுத்துக்கொண்டு, இந்தத் தேதியில் சென்னை, இந்தத் தேதியில் கோயம்புத்தூர், இந்தத் தேதியில் பெங்களூர் என்றெல்லாம் ஏதோ வேற்றுலகத்திலேயிருந்து அவதரித்தவர்களைப் போல விளம்பரங்கள் எல்லாம் செய்வதை இந்த அரசு நன்றாக அறியும். இருந்தாலும்கூட, அதிலே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இப்படிப்பட்ட லேகியங்களை யார் வாங்கிச் சாப்பிடுகிறார்களோ அவர்களும் இதையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதுதான். ஆண்மைக் குறைவு என்றால் அதற்கு என்ன காரணம் என்று அலோபதி டாக்டர்களிடத்திலே போய் சோதனை செய்து, அதற்குரிய மருந்துகளை எடுத்துக்கொள்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால், போலி

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 27

மருந்துகளுக்கு எல்லாம் ஆயிரக்கணக்கான ரூபாய்களை இப்படிச் செலவு செய்து, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இருக்கின்ற ஆண்மையையும் இழந்து, தங்களுடைய உடலையும் கெடுத்துக்கொள்வது நல்லது அல்ல என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்தும்கூட. இருந்தாலும், நாட்டு மக்களுடைய நன்மையைக் கருதி இந்த விளம்பரங்களை எல்லாம் தடுக்க முடியுமா அல்லது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் கேட்டார்கள். ஏற்கெனவே, நம்முடைய அரசு தனியார் மருத்துவமனைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளிலே இன்று ஈடுபட்டு வருகிறது. இந்தநேரத்திலே சட்ட இலாக்காவோடும் கலந்துபேசி, இப்படி விளம்பரம் செய்வது குற்றம், அப்படி யாராவது விளம்பரம் செய்தால் அவர்களைத் தண்டிக்க முடியுமா என்பதையும் ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி சிறப்புக் கவன ஈர்ப்பிற்கான அறிவிப்புக் கொடுத்தார். அவர் பேசினார். (குறுக்கீடு) சரி, நீங்கள் பேசுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தனியார் மருத்துவமனைகளை ஒழுங்குப்படுத்தக்கூடிய சட்டத்தைபற்றியெல்லாம் சொன்னார்கள். ஏற்கெனவே அந்தச் சட்டம், டெல்லி, கல்கத்தா, மும்பை போன்ற இடங்களிலே அமலில் இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமல்படுத்தக்கூடிய அந்த மாநிலங்களிலே, அது எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கண்டறிய மாண்புமிகு அமைச்சரவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அனுப்பி, அச்சட்டம் whether it is in existence, whether it is being implemented or not என்பதைக் கண்டுபிடிப்பதற்கு வழி ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். இல்லையென்று சொன்னால், எல்லோருமே ஒரு கருப்புப் பூனையை இருட்டில் தேடுகிற மாதிரி இருக்கும். இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு. அதற்கு competent authority யார் என்றுகூட அரசு சொல்ல முடியவில்லை. Rules frame பண்ணவில்லை Rules frame பண்ணாத ஒரு சூழ்நிலையிலே அது அமலுக்கு வந்துவிட்டது என்று அமைச்சர் அன்றைக்கு அறிவித்துவிட்டார்கள். ஆனால், rules



1998 மே 27] [திரு. சி. ஞானசேகரன்]

frame ஆகவில்லை. ஆகவே, இதையெல்லாம் சரி செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு குழுவை நியமிப்பாரா? மற்ற மாநிலங்களுக்கு எங்களைப் போன்றவர்களை எல்லாம் அனுப்பி, மருத்துவர்கள், எம்.பி.பி.எஸ். படித்தவர்கள்கூட இருக்கிறார்கள்; சட்டம் படித்த லாயரை நீங்கள் அனுப்பியாக வேண்டும். இல்லையென்றால் அந்த law பற்றி தெரிந்துகொள்ள முடியாது; ஆகவே, நீங்கள் அனுப்புவீர்களா என்று அறிய விரும்புகிறேன். அதேபோன்று, அமைச்சரவர்கள் ஒன்று சொன்னார்கள். சித்தா டாக்டர்கள் ஊசியே போடக் கூடாது என்று அமைச்சரவர்கள் இங்கே அவையிலே சொன்னார்கள். ஆனால், சித்தா கல்லூரியினுடைய பிரின்சிபல் கூறுகிறார், 'ஏற்கெனவே நாங்கள் ஊசி போடுவதற்குத் தகுதி உடையவர்கள்'...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசி வரிசையில் இருக்கிறவர்கள் கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சித்தா போன்ற இந்திய மருந்துத் துறையிலே படித்தவர்கள் ஊசி போடக் கூடாது என்ற ஓர் அறிவுரையை இங்கே வழங்கினார்கள். ஆனால், சித்தா கல்லூரியினுடைய முதல்வரே சொல்கிறார்; 'நாங்கள் ஊசி போடுவதற்கான பயிற்சியை அளித்திருக்கிறோம்'. 'They are entitled even to administer injections' என்று அவர் கூறுகிறார். தயவுசெய்து அவர்களையும் தாங்கள் அழைத்துப்பேசி, யுனானி, சித்தா, ஆயுர்வேதிக், ஹோமியோபதி, அலோபதி என்று எல்லா டாக்டர்களையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அழைத்து ஒரு கான்ஃபரன்ஸ் கூட்டி, அதிலே யார், யாருக்கெல்லாம் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது, பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவதற்கான ஒரு கருத்தரங்கிற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊசி செலுத்துவதிலே, ஹோமியோபதி வைத்தியர்களும் போடலாம் என்று வைத்துக்கொள்ளலாம். பிரச்சினை அது அல்ல. அலோபதி வைத்தியர்கள் பயன்படுத்தக்கூடிய, குறிப்பாக, பென்சிலின் மருந்தை, அதனுடைய அடிப்படை கூடத் தெரியாமல் அந்த ஊசி

மட்டும் எப்படியோ போடுவதற்குக் கற்றுக்கொண்டு, அங்கே வரக்கூடிய மக்களுக்கு எல்லாம் பென்சிலின் ஊசி போடுவதன் மூலமாக அல்லது டொராமைசின் அல்லது பி.காம்ப்ளக்ஸ் ஊசியை விவரம் தெரியாமல் போடுவதன் காரணமாக, வரக்கூடிய விளைவுதான் இந்த அளவிற்கு வந்திருக்கிறது. ஹோமியோபதி மருந்தை ஊசியின் மூலமாகச் செலுத்துவதில் பிரச்சினை இல்லை. அலோபதி மருந்தை, அந்த வைத்தியமே தெரியாதவர்கள் ஊசி மூலம் போடுவதால் வருகிற பிரச்சினைதான், இப்போதைய பிரச்சினையே தவிர, ஹோமியோபதிக்கு உண்டான மருந்தை ஊசிகளின் மூலம் செலுத்துவது அல்ல பிரச்சினை. எனவே, அதைப் பற்றித் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். பொதுவாக, நாம் கொண்டு வந்த சட்டத்திற்கு சில அலோபதி டாக்டர்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தாலே அதை அமல்படுத்தாமல் இருந்தோம். அதற்குப் பிறகு, போலி டாக்டர்கள் தமிழகத்திலே ஏராளமாகப் பெருகி, அதனாலே பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற ஒரு நிலை வந்ததற்குப் பிறகு, இந்தச் சட்டம் அமல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தவுடன் அலோபதி டாக்டர்கள், டாக்டர் நஞ்சுண்டராவ் தலைமையிலும், அதைப் போல யுனானி, சித்தா போன்ற பிரிவுகளிலே இருக்கக்கூடிய டாக்டர்களும் 10-5-1998 அன்று என்னுடைய தலைமையிலே நடைபெற்ற கூட்டத்தில், தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதிலே, அலோபதி டாக்டர்கள், அவர்களுக்கு இருந்த அச்சத்தை வெளிப்படுத்தினார்கள். 'இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலே, இந்தச் சட்டத்தைத் தவறாக தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் பயன்படுத்தி, பணத்தைப் பறிக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது என்று எங்களுக்குச் சொல்லப்பட்ட காரணத்தாலே நாங்கள் அதை எதிர்த்தோம். ஆனால், இந்த





அரசாங்கம் இந்தச் சட்டத்தை அமல்படுத்துகின்ற நேரத்தில் அதற்காக அமைக்கப்படுகின்ற குழுவில் முழுக்க முழுக்க எம்.பி.பி.எஸ்., படித்த டாக்டர்களே இருப்பார்கள் என்று சொல்லிய காரணத்தாலே எங்களுடைய அச்சம் நீங்கியிருக்கிறது. எனவே, இதுகுறித்து கலந்துபேசி விரைவிலே அதற்கான விதிமுறைகளை எல்லாம் நாம் இயற்றி அதை அமல்படுத்தலாம்' என்று அவர்கள் ஒப்புதலும் தந்தார்கள். அதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் தலைமையிலே, அலோபதி டாக்டர்களும், இந்திய மருத்துவ டாக்டர்களும் கலந்து பேசி, அதற்கான விதிமுறைகளை இயற்றி, உடனடியாக அமல்படுத்துவதற்குத் அரசாங்கத்திற்குத் தரும்படிக் கேட்டிருக்கின்றோம். அது வந்தவுடனே, அந்த விதிமுறைகளை இந்த மன்றத்திற்கு அல்லது நாட்டிற்கு வெளிப்படுத்தி, அதை அமல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) ஆவடி நகராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பாக திரு. டி. சுதர்சனம் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஆவடி நகராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### விவர அறிக்கை

ஆவடி நகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, நாள் ஒன்றுக்கு புழல் ஏரியிலிருந்து 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர், 3 மேல் நிலைத் தொட்டிகள் மூலம் குடிநீராக வழங்கப்பட்டு

வருகிறது. மேலும், 326 இடங்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அடிபம்புகள் பொருத்தப்பட்டு உள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையினைப் போக்க கீழ்க்கண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :—

1. புழல் ஏரியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் தினசரி வழங்கப்பட்டு வருவதை அதிகரித்து, மேலும் 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் கூடுதலாகப் பெற்று, தினசரி காலை மற்றும் மாலை ஆகிய நேரங்களில் குடிநீர் வழங்க, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ள இடங்களிலும், குழாய் மூலம் தண்ணீர் வழங்காத பகுதிகளுக்கும், தற்போது நகராட்சி லாரிகள் இரண்டின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதை அதிகரித்து, வாடகை லாரிகள் மூலம் குடிநீர் வழங்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையினைப் போக்கும்பொருட்டு, நீர் ஆதாரத்தினைக் கண்டுபிடிக்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுகள் மேற்கொண்டதின்பேரில், ஆவடி நகராட்சிப் பகுதியில் குழாய்க் கிணறுகள் அமைக்கப் போதுமான குடிநீர் ஆதாரம் கிடையாது எனத் தீர்மானித்தபோதிலும், நகராட்சி எல்லைப் பகுதியின் அருகிலுள்ள ஆற்றுப் பகுதியில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கத் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளுமாறு மீண்டும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினிடம் கேட்கப்பட்டுள்ளது. மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம்மூலம், சென்னைக்கு அருகிலுள்ள 6 நகராட்சிகளில் குடிநீர் வழங்குவது குறித்து ஆவடி நகர்மன்றம் தீர்மானம் இயற்றி அதுவும் மேற்படி வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆவடி நகராட்சி என்பது ஒரு குட்டி இந்தியா போன்றது. ஆவடியில் பல்வேறுபட்ட மொழிகள் பேசுகின்ற மக்களும், இந்தியாவிலே இருக்கின்ற அத்தனைப் பிரிவு மக்களும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு, நாள் ஒன்றுக்கு 8.50 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இன்னும்



8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது எப்போது கொடுக்கப்படும்? அதிகமாகக் கொடுக்கப்படுகின்ற அந்த 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர், என்றிலிருந்து கொடுக்கப்படும்? அதேபோன்று, நாள் ஒன்றுக்கு, அங்கே வசிக்கின்ற 3 இலட்சம் மக்களுக்கு ஒரு கோடியே 60 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் தேவைப்படும். கிருஷ்ணா நதிநீர் வருகின்றபோது அந்தத் தேவை பூர்த்தி செய்யப்படும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், அப்படி வருகின்ற காலங்களில் 11 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட வேண்டும் என்று குடிநீர் வடிகால் வாரியம் சொல்கின்றது. அந்த 11 மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணியை இப்போதே ஆரம்பித்துவிட்டால்—கிருஷ்ணா நதிநீர் இன்னும் ஒரு ஆண்டோ அல்லது 6 மாதமோ, 3 மாதமோ கழித்து வருகின்றபோது—உடனடியாகக் குடிதண்ணீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டிவிட முடியாது கிருஷ்ணா நதிநீர் வருகின்றபோது—அந்த மேல்நிலைத் தொட்டிகளிலே அந்தத் தண்ணீரை ஏற்றி அத்தனை மக்களுக்கும், நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் இதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டதையொட்டித்தான், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இன்னும் கொஞ்சம் அதிக நாள், அதிக நேரம் இதிலே ஒதுக்கீடு செய்து, இன்னொரு 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீரைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இன்னும் அதற்குரிய நடவடிக்கையை ஆய்வு செய்து, அது முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி அரசுக்குத் தகவல் தெரிவிக்கவில்லை. இருந்தாலும், நேற்றையதினம்கூட இதுபற்றிப் பேசுவதற்கு, செயலாளர் அவர்களிடத்திலே தெரிவித்து இருக்கிறேன். விரைவாகக் கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறேன் இது நம்பர் ஒன்று. அதற்கு அடுத்தபடியாக, ஆவடியிலே குடிநீர் கொடுப்பதற்கான நீர் ஆதாரங்கள் கிடைப்பது துர்லபமாக இருக்கிறது. நிச்சயமாகக் கிடைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதற்கான ஆய்வுகள் எல்லாம் நடைபெற்று அங்கே கிடைக்காது என்ற முடிவை அவர்கள் அறிவித்துவிட்டார்கள். நகராட்சி எல்லைப் பகுதியின் அருகில் உள்ள

ஆற்றுப் பகுதியில் எடுத்தால், நிரந்தரமான நீர் ஆதாரம் கிடைக்கும் என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளது. அஃதன்னியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இது இப்படியே தொடர்ந்து போனால் பிரச்சினைகள் தீருமா என்பதைவிட, நம்முடைய சென்னைக்கு வருகிற கிருஷ்ணா நீரை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா என்ற பரிசீலனையும் செய்யப்பட்டது. ஆனால், அது இன்றைக்கு சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறுப்பில் இருக்கிற காரணத்தால், அவர்களையும் கலந்து இந்த முடிவுக்கு வரலாம் என்று முடிவு செய்து சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் சென்னைக்கு அருகில் உள்ள 6 நகராட்சிகளில் குடிநீர் வழங்குவது குறித்த ஒரு பிரச்சினையை அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறோம் அதிலே ஆவடி நகராட்சியையும் இணைத்து இருக்கிறோம். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு செய்யலாம்; அதற்கான தகுதிகள் உண்டு; கிருஷ்ணா வாட்டரையும் இதிலே பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அறிவிப்பார்களேயானால் அதையும் முயற்சிக்கலாம் என்ற காரணத்தால்தான், இந்தத் திட்டத்தில் தற்போது இப்படி இடைவெளி ஏற்படுவதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரேயொரு பைப் வழியாகத்தான் இந்த 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீரும் புழலேரியிலிருந்து ஆவடிக்கு வருகிறது. அதிலேயிருந்து ஹெவி வெகிகில்ஸ் ஃபேக்டரி, டியூப் புராடக்ட்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு எல்லாம் போய்க்கொண்டிருக்கிறது. சீராக இந்த 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர்கூட இன்றைக்குக் கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. வீல் வால்வுகளைப் போட்டு அந்தக் கம்பெனிகள் அதிகமான அளவிற்குத் தண்ணீரை எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும், குடிதண்ணீருக்கு தனியாகக் குழாய்களை அமைப்பதற்கும் அரசுக்கு எண்ணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன், ஒரு முடிவுக்கும் இன்னும் வரவில்லை. கூடுமான வரையில், இப்போது ஏற்பட்டு இருக்கிற தட்டுப்பாட்டை நிவர்த்தி



செய்வதற்கு தற்காலிக ஏற்பாடாகத்தான் இந்த 8.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுப்பது என முடிவு எடுக்கப்பட்டதே தவிர, இதுவே நிரந்தரம் என்று சொல்ல முடியாது. ஆனால், குழாய்களின் மூலம் இப்போது விடப்படுகிற தண்ணீர் 8.50 இலட்சம் லிட்டர் இந்த 8.50 இலட்சம் லிட்டரையும் சேர்த்து ஆக மொத்தம் 17 இலட்சம் லிட்டர் வருமா என்பதைப்போல ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். காலத்தையும் நேரத்தையும் கணக்கிட்டு ஒவ்வொரு முறையும் இத்தனை மணிக்கு இவ்வளவு என்ற அடிப்படையில்தான் அது விநியோகிக்கப்படும். அதனுடைய அடிப்படையில்தான் தண்ணீர் செலுத்த முடியும். அதோடுகூட குழாய்களுக்கு எவ்வளவு கொள்ளளவு உண்டோ அதை மீறி யாரும் தண்ணீரைச் செலுத்த முடியாது. ஆனாலும் இப்போது தற்காலிகமான முயற்சியிலே ஈடுபடுகிறோம். லாரி மூலம் தண்ணீர் கொடுப்பதற்காக நகராட்சியினுடைய 2 லாரிகள் இப்போது பணியில் அமர்த்தப்பட்டுவிட்டன. அதற்குத் தண்ணீர் கொடுக்கிற முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டு, கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கூடுமான வரையில், சென்னையில் இங்கே இருக்கிற குடிநீர் வடிகால் வாரியம் அதை எடுத்துக்கொள்வதா அல்லது அதேநேரத்தில் வேறு ஆற்றங்கரையிலிருந்து தண்ணீரை சேகரித்துக் கொடுப்பதா என்ற பரிசீலனை இப்போது நடந்து கொண்டிருக்கிறது. தெளிவாக முடிவு எடுத்த பிறகுதான் நான் உறுதியாகச் சொல்ல முடியும். இதிலே எது இலாபகரமாக இருக்குமோ, அதேநேரத்தில் உறுதி அளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்கக்கூடிய நிலை வருகிறதோ, அதை நிச்சயமாக இந்த அரசு ஏற்று நடவடிக்கையை எடுக்கும்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (இ) பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்து மருத்துவமனைகள் நடத்திவரும் மருத்துவர்கள்மீது நடவடிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் ஒரு திருத்தத்தை அறிவிப்பார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1998 மே 27

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது பதில் சொல்லிக் கொண்டிருந்தபோது, அலோபதி டாக்டர்களோடும், இந்திய மருத்துவ டாக்டர்களோடும் '10-5-1998 அன்று பேச்சுவார்த்தை நடத்தினேன்' என்று சொன்னேன், அதை '23-5-1998' என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) நாமக்கல் பகுதியில் இலட்சக்கணக்கில் கோழிகள் இறந்ததால் முட்டை உற்பத்தி பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 55ன்கீழ் அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி ஆகியோரில் ஒருவர், ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 'நாமக்கல் பகுதியில் 6 இலட்சம் கோழிகள் இறந்ததால் முட்டை உற்பத்தி குறைந்துள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது :-

### விவர அறிக்கை

(1) சேலம் மாவட்டம், நாமக்கல் பகுதியில் ஒரு கோடி கோழிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஏறத்தாழ ஒரு இலட்சம் கோழிகள் "வெப்பத்தாக்குதலினால்" பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாகத் தெரிய வருகிறது. இவை, மொத்தக் கோழி எண்ணிக்கையில் ஒரு விழுக்காடு மட்டுமே ஆகும். இவற்றில் 100 வாரங்களுக்கு மேல் வயதுள்ள கோழிகளே, இறந்த கோழிகளின் எண்ணிக்கையில்





அதிகமாகும். பெரிய பண்ணையாளர்கள் பராமரித்து வரும் பெரிய கோழிப் பண்ணைகளே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த இறப்பிற்கு முக்கியக் காரணம், கோழிகளின் நெரிசலே (over crowding) ஆகும். ஏழை, எளிய மக்கள் பராமரித்து வரும் சிறிய பண்ணைகள் பாதிக்கப்படவில்லை. மேலும் 100 வாரங்களுக்கு மேல் வயதுள்ள கோழிகளே அதிக அளவில் இறந்துள்ளதால், முட்டை உற்பத்தியில் அதிக அளவில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

(2) கோழிகள் இயல்பாகவே, வெப்பநிலை 370 செல்சியசுக்கு மேல் ஏற்பட்டால் அவைகளால் தாங்க முடியாது. இந்த நிலையில் வெப்பத் தாக்குதல் (Heat Stroke) ஏற்பட்டு, பெருமளவில் இறக்க அதிக வாய்ப்பு உண்டு. இத்தகைய நிலையைத் தவிர்க்க கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் செய்திகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

(3) மேலும் மூக்குச்சளி நோய் (Coryza) சாதாரணமாக கோழிகளைத் தாக்கும் ஒரு பாக்டீரியல் நோய் ஆகும். முக்கியமாக கோடைக் காலத்தில் ஏற்படும் எதிர்ப்புச் சக்தி குறைவினால் கோழிகள் அதிகம் பாதிக்கப்படும். இது கோழிகளைத் தொடர்ந்துத் தாக்கும் ஒரு சுவாச நோயாகும். ஆன்டிபயாடிக் சிகிச்சையினால் இந்நோயினைக் கட்டுப்படுத்த இயலும்.

(4) மேலும், கோழிகளைப் பராமரித்து வரும் விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட ஆலோசனைகள் வெப்பத் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள எடுத்துக்கூறப்பட்டுள்ளன:

கோழி வீடுகளின் கூரைகளின் மேல் குளிர்ந்தத் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

கோழி வீடுகளின் பக்கவாட்டில் தண்ணீரில் நனைந்த சாக்குகளைப் போட வேண்டும்.

வைட்டமின்களும், தாது உப்புகளும் நனைந்த தீவனம் (Wet Mash) கோழிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஆன்டிபயாடிக்ஸ் கலந்த சுத்தமான தண்ணீர் அதிக அளவில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) இத்தகைய நடவடிக்கைகள் மூலம் வெப்பத் தாக்குதலின் (Heat Stroke) விளைவுகளைப் பெருமளவில் குறைக்க வாய்ப்புண்டு. எனினும், வெப்ப அளவு இயல்புக்கு மேல் மிக அதிக அளவில் அதாவது, $40^0$ அல்லது $41^0$ செல்சியசுக்கு மேல் போய்விட்டால் இறப்புகளைத் தவிர்ப்பது மிகமிக அரிது.

முற்பகல் 11-05

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் கோழி வளர்ப்பை ஒரு தொழிலாகச் செய்து வருகிறார்கள். அதற்கு அவர்களுக்கு வேண்டிய கடனை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலேயிருந்து பெற்றிருக்கிறார்கள். கோழிகள் பெருமளவில் இறந்துவிட்டதால் அவர்கள் வாங்கிய கடன்களை எல்லாம் இரத்துச் செய்ய வேண்டும். மீண்டும் அவர்கள் கடன் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும். நாமக்கல்லில் மட்டும் பெரிய கோழிப் பண்ணைகள் 300 இருக்கின்றன. சிறிய கோழிப் பண்ணைகள் 3,000 இருக்கின்றன. அந்தப் பகுதியிலே 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கோழிகள் இறந்துவிட்டதாகத் தெரிகிறது. தடுப்பு ஊசி போடாத காரணத்தினால்தான் கோழிகள் இறந்துவிட்டன. வெப்பம் அதிகமாகி, 100 வாரங்கள் வயது கொண்ட கோழிகள், குழம்பு வைத்துச் சாப்பிட வேண்டிய அந்தக் கோழிகள் எல்லாம் இறந்து போய்விட்டன. அதனால் அந்தப் பகுதி விவசாயிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலேயிருந்து வாங்கிய கடன்களை இரத்துச் செய்து, அவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே வாங்கிய கடன்களை இரத்து செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். எப்போதும் நாமக்கல் கால்நடை மருத்துவமனையில் இதற்கான தடுப்பு ஊசி மருந்துகள் இருப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். இதுகுறித்து அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் பகுதியில் கோழி இறப்பு பற்றிய இந்தப் பிரச்சினை குறித்து, 14-5-1998 அன்றைய 'தினத்தந்தி' நாளிதழில், '6 இலட்சம் கோழிகள் சாவு' என்றும், 15-5-1998 அன்றைய 'தினகரன்' நாளிதழில், '25 இலட்சம் கோழிகள் பலி' என்றும், 15-5-1998 அன்றைய 'தினமணி' நாளிதழில், '2 இலட்சம் கோழிகள் பலி' என்றும், வெவ்வேறு தலைப்புகளில் வெவ்வேறு விதமாகச்



செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற நாமக்கல் கால்நடை இணை இயக்குநரை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பண்ணைகளை ஆய்ந்து விவர அறிக்கை தரும்படிக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், உண்மையில் 1 இலட்சம் கோழிகள்தான் அங்கே பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் அறிக்கை தந்திருக்கிறார். பொதுவாக கோழிப் பண்ணைகள், கோழி வளர்க்கின்ற கூடாரங்கள், 1 முட்டைக் கோழிக்கு, 2 சதுர அடிக்கு 2 சதுர அடி என்ற விகிதாச்சாரத்தில் அமைக்கப்பட்டு கோழிகளை வளர்க்க வேண்டும். ஆனால் அங்கு வளர்க்கப்பட்ட கோழிகள் 2 சதுர அடிக்கு 2 சதுர அடியில், 3 கோழிகள் என்ற அளவில் இருந்த காரணத்தால், கோழியின் சுவாசத்தின் தன்மைக்கு ஏற்ற நிலை இல்லாத காரணத்தால், கோழியைச் சுற்றி அதிகமான இறகுகள் இருந்ததால் வியர்வைச் சுரப்பிகள் சமநிலை அடைய முடியாத காரணத்தால் கோழிகளுக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டு, கோடை வெப்பத்தின் காரணமாக இந்த இறப்புகள் ஏற்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல அங்கே உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பகுதியிலே உள்ள கோழிப் பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்ச்சியை உருவாக்குகின்ற வகையில் வானொலி மூலமாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. சேலம், நாமக்கல் பகுதிகளிலிருந்து 5 கால்நடை உதவி இயக்குநர்கள் தலைமையில் 16 கால்நடை மருத்துவர்கள் கொண்ட குழு, 8 வாகனங்களில் சென்று தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. அதைப்போலவே, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய மூன்று இடங்களைச் சேர்ந்த மருத்துவர்கள், தேவையான முதல் உதவி வழங்கும் நோக்கத்தோடு, மருந்துகளோடு 6 கால்நடை உதவி இயக்குநர்களும், 30 கால்நடை மருத்துவர்களும், 6 வாகனங்களில் சென்று, தடுப்பு நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுவாகவே, ஒரு கோழி, முட்டை இடுகின்ற இயல்பு வயது 72 வாரங்கள் வரைதான். 72 வாரங்களுக்கு மேல் 100 வாரங்கள் வரை முட்டை இட வேண்டுமென்றால் சரியான தீவனமும், நல்ல பராமரிப்பும் தேவை. ஆனால், தற்போது இறந்த அந்தக் கோழிகளில் பெரும்பான்மையானவை 72 வாரங்களுக்கு மேல் முதிர்ச்சி அடைந்தவை என்று சொல்லப்படுகிறது. அங்கு தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மற்றொன்றைச் சொன்னார்கள். தேசிய வங்கிகளிலே அவர்கள் வாங்கியுள்ள கடனை இரத்துச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு கேள்வி கேட்டாகி விட்டது. ஏராளமான உறுப்பினர்கள் இன்னும் பேச வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலை நம்பி வாழ்கின்ற அந்தப் பண்ணை விவசாயிகள் எல்லாம் அதிகமாக சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அவர்களுக்குக் கடன் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். ஏற்கெனவே கால்நடை மருத்துவர்கள் எல்லாம் அங்கே போய் இருக்கிறார்கள். இன்னும் வெயில் அதிகமாக இருக்கிற காரணத்தால் கோழிச் சாவு இன்னும் இருக்கும். ஆகவே, அங்கே சென்றுள்ள கால்நடை மருத்துவர்கள், வெயில் அதிகமாக இருக்கிற காரணத்தால், வெயில் குறையும் வரையில், அங்கேயே தங்கி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே கால்நடைத் துறை மருத்துவர்கள் எல்லாம் சென்று, கோழி வளர்க்கின்ற பண்ணைகளின் கூடாரங்களின் மேல் தண்ணீர் தெளித்தும், பக்கச் சுவர்களில் தண்ணீரில் நனைத்த சாக்குகளைக் கொண்டு குளிர்ந்த காற்று வீசுகின்ற வகையிலே, வெப்பத் தன்மையைக் குறைக்கின்ற அளவிலே, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும், விழிப்புணர்ச்சியுடன் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அதேபோல் கோழிகளை வாங்குவதற்கு வங்கிகள் கொடுத்த கடனை இரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். வங்கிகளிலே கடன் பெற்று கோழிகள் வாங்குவது தனிப்பட்ட பண்ணையாளர்களுடைய நாணயத் தன்மையைப் பொறுத்து, வங்கிகள் கடன் வழங்குகின்றன. இந்த அரசு பரிந்துரை



செய்து, கடன் வழங்குவதில்லை. அதேநேரத்தில், கடன் வழங்குவது குறித்து கால்நடை மருத்துவர்கள் சான்றுகள் கொடுப்பார்களேயானால், அதன்பேரில் கடன் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்குத் துறைகள் குறிப்பிட்ட கால அளவிற்குள் விவர அறிக்கை அளித்தல்

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. டி. மணி:** ஒரு கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுசம்பந்தமாக இப்போது நான் ஓர் அறிவிப்புச் செய்கிறேன்.

ஏராளமான உறுப்பினர்கள் பல்வேறு கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து சரியான பதில்கள் வருவதில்லை. இதுசம்பந்தமாகப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55, உட்பிரிவு 3-ன்படி, கவன ஈர்ப்பு அறிவிப்புகள் அனுமதிக்கப்பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும். எனினும், சில துறைகளிடமிருந்து குறிப்பிட்ட கால அளவிற்குள் கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கான விவா அறிக்கைகள் வரப்பெறவில்லை. எனவே, அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகளை, 28-5-1998 அன்று பிற்பகல் ஒரு மணிக்குள், பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தங்களுடைய துறைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தும்படி, மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1998 மே 27

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட பல கிராமங்களில் வீடுகள் பலத்த சேதம் அடைந்திருக்கின்றன...(குறுக்கீடு) நான் ஒரு கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் சொல்கிறேன். நாளை எல்லாவற்றிற்கும் ஒரு மணிக்குள் பதில் வர வேண்டுமென்று சொல்லிவிட்டேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். திரு. சி.டி. தண்டபாணி, குழுவின் தலைவர்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 55 முதல் 58 வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) ஆளுநர் அளிக்கும் தேநீர் விருந்துக்குச் செல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மேதகு ஆளுநர் அவர்கள், இன்று 27-5-1998, மாலை 6-00 மணிக்கு, கிண்டி, ஆளுநர் மாளிகையில், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தேநீர் விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து, ராஜ்பவன் செல்ல, இன்று மாலை 4-45 மணி முதல் 5-30 மணி வரைக்கும், விருந்து



1998 மே 27] [பேரவைத் துணைத் தலைவர்]

முடிந்தபிறகு மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு வந்து சேருவதற்கும், பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்த (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்த (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்த (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1998 மே 27

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1998 மே 27]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-15 [1998 மே 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1998 மே 27]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனிவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1998 மே 27

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஒ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



1998 மே 27]

### (ஒ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஓ) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஓ) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஔ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.





## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஔ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

[1998 மே 27

## 8. தகவல் கோரல்

### சந்தனக் கடத்தல் விரப்பன் நால்வரைக் கடத்தியதாக செய்தி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான ........................................(குறுக்கீடு) திரு. டி. சுதர்சனம், அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பன் நான்கு பேரைக் கடத்திவிட்டதாக இன்றைக்குச் செய்தி வந்திருக்கிறது. பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது (குறுக்கீடு) பத்திரிகைச் செய்தி அல்ல, பி.டி.ஐ. ஏஜென்சி செய்தி நிறுவனம் சொல்லியிருக்கிறது. அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? யார் யாரைக் கடத்தியிருக்கிறார்கள் என்பது குறித்து அவைக்கு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்தச் செய்தி குறித்து எனக்கு வெகுவான விவரங்கள் ஏதும் தெரியவில்லை. ஆனால், சென்றவர்கள் யாரும், இந்த அரசாங்கமோ அல்லது வேறு யாரும் அனுப்பியோ சென்றவர்கள் அல்ல. எனவே, அதைப்பற்றி இப்போது ஏதும் சொல்ல இயலாது. நாங்கள் யாரையும் அங்கே அனுப்பவில்லை. ஏற்கெனவே, 2, 3 பேர் தூது போய் வந்தார்கள். அப்படித் தூது போனவர்கள், அவர்களாக பத்திரிகைகளுக்குச் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அது தவிர, அரசாங்கம் யாரையும் அனுப்பவில்லை. அப்படி அனுப்பப்பட்டவர்கள் எவரையும் வீரப்பன் பிடித்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு முதலமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.



1998 மே 27]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பேராசிரியர்கள் உட்பட 4 பேர்களைக் கடத்திக்கொண்டு போயிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுகுறித்து அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேராசிரியர் கடலூருக்குப் போயிருக்கிறார். அதனால்தான் இன்றைக்கு அவைக்கு வரவில்லை. (சிரிப்பு)

## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 38 - சாலைகளும் பாலங்களும்

### (ஆ) கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 38-சாலைகளும் பாலங்களும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 99 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும், தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 38 - சாலைகளும் பாலங்களும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.380,24,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2651, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேலூரில் சி.எம்.சி. ஆஸ்பத்திரி எதிரில் சுரங்கப் பாதை

தேசிய நெடுஞ்சாலையில் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.380,24,76,000/-ல் ரூ 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 207, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3187, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1707, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களை இணைக்கும் கோடியக்கரை முதல் தஞ்சாவூர் வரையிலான சாலையை தேசிய சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் 3937, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1058, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம்,— பவானி ஒன்றியம், வைரமங்கலம்—கேவானூர் சாலை மற்றும் குட்டிபாளையம், பவானி-கவுந்தபாடி சாலைகள் மிகமிக மோசமாக உள்ளதால் இந்த இரண்டு சாலைகளையும் நபார்டு திட்டம் மூலம் எடுத்து புதிதாகச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2492, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம் வெள்ளோடு முதல் அரச்சலூர் செல்லும் சாலையில் முகாசி அனுமன்பள்ளி கிராமம் குளத்தூர் என்ற இடத்தில் ஓடும் ஓடையைக் கடந்து செல்ல மேம்பாலம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3488, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் முதல் கே.ஆர்.புரம் செல்லும் சாலையை கருங்கல் தார்ச்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2288, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கடையால் பேரூராட்சி ஆறுகாணியிலிருந்து நிரப்பு வரை சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3585, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வத்தலகுண்டு - பெரியகுளம் சாலையில் பகல், இரவு நேரங்களில் ஏற்படும் நெரிசலைத் தவிர்க்கும் வகையில் பைபாஸ் ரோடு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 624, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon. Deputy Speaker, Sir, "To discuss the need to construct an overbridge over Kusasthala River at Punniyam", I move—

"That the allocation of Rs.380,24,76,000 under Demand No.38 - Roads & Bridges be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1335, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3817, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, கும்பகோணம்-ஈச்சங்குடி சாலையைச் செப்பனிட்டு அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2561, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " கோவில்பட்டி தொகுதி, திருவேங்கடம் - ஆவுடையார்புரம் சாலையில் உள்ள ஓடையில் புதிதாகப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2328, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாகை - திருத்துறைப்பூண்டி சாலை கடந்த வெள்ளத்தினால் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதை உடனடியாகச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2418, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தொகுதி, விஜயநாராயணம் - இட்டமொழி சாலையை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3345, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சின்னப்பம்பேட்டை ஊராட்சி, குறவன் ஓடை சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 918, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3306, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 598, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் திருவரங்கம்-மூங்கில் துறைப்பட்டு வரை செல்லும் சாலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு போக்குவரத்திற்கு லாயக்கற்றதாக உள்ளதால் அதனை உடனே செப்பனிடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2585, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, செந்தாமரைக்கண்—மனுக்கு முன்பின் பகுதியில் கோரையாற்றில் போக்குவரத்திற்கான பாலம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2842, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.380,24,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஆ) மானியக் கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 476,83,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டு தீர்மானம் எண் 182, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.476,83,32,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

[1998 மே 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3650, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1721, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கீரக்களூருக்கும் கீராந்திக்கும் இடையில் அடைப்பாற்றில் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.476,83,32,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3416, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 476,83,32,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3582, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வத்தலகுண்டு, திண்டுக்கல், நெடுஞ்சாலையில் லட்சுமிபுரம் அருகில் அடிக்கடி கார் விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தால் நெடுஞ்சாலை வளைவு இல்லாமல் அகலமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.476,83,32,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



1998 மே 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1324, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2320, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சாலைகளுக்குத் தார் பயன்படுத்துவதற்கு மாற்றாக ரப்பர் பயன்படுத்தி சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.476,83,32,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2794, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.476,83,32,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2117, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 234, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3382, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை முதல் தாணிப்பாடி செல்லும் சாலையை இரு வழிப்பாதை சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.476,83,32,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 185, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பகும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைகளும் பாலங்களும் மற்றும் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்தபின்னர், அவற்றுக்கான விளக்கங்களை என்னுடைய பதிலுரையில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் கடைசி நாள். பேரவை விதி 185, உட்பிரிவு 3ன்படி விவாதமும் பதிலுரையும் பிற்பகல் 1-30 மணிக்குள் முடிந்து, மானியக் கோரிக்கையின் மீதான வாக்கெடுப்பு முடித்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, விவாதத்தில் கலந்துகொள்கின்ற உறுப்பினர்கள் மிகவும் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் விவாதத்தைத் தொடங்கிவைக்க திரு. பா. வேல்துரை அவர்களை அழைக்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைமீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த

@431 முதல் 462 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



தங்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பவள விழா காணும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல உடல் பலமும், உள்ள பலமும் பெற்று நீண்ட காலம் இந்தத் தமிழக மக்களுக்கு நன்றாகப் பணியாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

நமது தமிழகத்திலே இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலைத் துறை மிக முக்கியமான ஒரு துறையாக இருக்கிறது. செங்கல்பட்டு வரை நான்கு வழிப் பாதையாக இருக்கிறது. திருச்சி வரை நிச்சயமாக இந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக உடனடியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விழுப்புரத்திலிருந்து திருச்சி வரையுள்ள சாலைகளிலே அதிகமான அளவில் விபத்துக்கள் நடைபெறுகின்றன. அதனால் சாலைகளிலே, போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதன் காரணமாக நெல்லையிலிருந்து நாங்கள் பஸ்ஸில் வந்தோம் என்று சொன்னால், குறிப்பிட்ட நேரத்திற்கு வர முடியவில்லை. ஆகவே, அந்தப் பகுதிகளில் ரோந்துப் பணிக்காக அதிகமாக காவல் துறையைச் சேர்ந்தவர்களை உடனடியாக நியமித்து, அங்கே போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அந்தப் பகுதியில் இரயில்வே லைன்கள் இருக்கின்றன. இப்போது அங்கே புதிய இரயில்வே லைன்கள் போடப்படுகின்றன. அதன் காரணமாக இரயில் போக்குவரத்து இல்லை. எனவே, உடனடியாக அங்கே மேம்பாலமோ அல்லது கீழ்ப்பாலமோ அமைக்கின்ற பணியைச் செய்தால்தான் போக்குவரத்து நெரிசலை மிகவும் குறைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அதேபோன்று, கிழக்குக் கடற்கரைச் சாலை கடந்த 1996 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த, இப்போது இருக்கின்ற மாண்புமிகு பொன்முடி அவர்கள் அன்றைக்கு கன்னியாகுமரியிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை போடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது இந்தச் சாலை சென்னையிலிருந்து போடப்படுகின்ற பணிதான் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, கன்னியாகுமரியிலிருந்தும் இந்தச் சாலையைப் போடுகின்ற பணியினை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருநெல்வேலி மாவட்டத்தில், பாபநாசம்-திருவனந்தபுரம் சாலை, மலைச் சாலை. ஏற்கெனவே இருந்த சாலை, பராமரிக்கப்படாமல் போக்குவரத்துக்குப் பயன்படாமல் இருந்த காரணத்தால் சாலை அப்படியே பழுதுபட்டுவிட்டது. அந்தச் சாலையை மீண்டும் அரசு எடுத்துப் போடுவதற்கு முன்வருமானால் திருநெல்வேலியிலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவிற்குள் திருவனந்தபுரம் செல்லுகின்ற ஒரு பெரிய வாய்ப்பு ஏற்படும். திருவனந்தபுரம் ஆஸ்பத்திரியில் இருதய ஆப்பரேஷன், கிட்னி ஆப்பரேஷன் போன்றவைகள் நடைபெறுகின்றன. தென் மாவட்ட மக்கள் சீக்கிரமாக திருவனந்தபுரம் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். மேலும் இன்டர்நேஷனல் ஏர்போர்ட் திருவனந்தபுரத்தில் இருக்கிறது. எனவே, அந்தச் சாலையைக் கண்டிப்பாக திருநெல்வேலி மலைச்சாலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாபநாசம்--காரையாறு சாலையிலே, 1992 ஆம் ஆண்டு ஒரு பாலம் இடிந்துவிட்டது. 1992-லிருந்து இன்றுவரை அந்தப் பாலம் சீர் செய்யப்படவில்லை. அந்தப் பாலத்தைச் சீர்செய்வதற்கு, எந்தத் திட்டத்திலாவது சேர்த்திருக்கிறார்களா என்றால் இல்லை; செயற்குறிப்பிலும் இல்லை. எனவே, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லையில் ஒரு பைபாஸ் சாலை அமைக்கும் பணி, ஏதோ நூறாண்டு காலத் திட்டம் போன்று நடந்துகொண்டிருக்கிறது. அந்த பைபாஸ் சாலையை உடனடியாக இந்த ஆண்டே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் அந்த பைபாஸ் சாலை ஊரின் நடுவே செல்கின்ற சாலையாக அமைந்துவிட்டது. எனவே, நெல்லையில் இன்னொரு பைபாஸ் சாலையை வெளிப்புறமாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் சாலைகள் போடுகிறார்கள். அதிலே தார்ச் சாலையாக மாற்றிப் போடப்படுகின்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தார்ச் சாலைகள் போடுவதில் வித்தியாசம் இருக்கிறது. சாலைகள் போடுகின்ற முறைகளைப் பார்த்தால், ஹைவேஸ் சாலைகளை consolidated thickness என்ற





முறையில் போடுகிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியன் சாலைகளை loose thickness என்ற முறையில் போடுகிறார்கள். ஜல்லி அளவு குறைவாக இருக்கிறது. இப்படிச் சாலைகள் போடப்பட்டால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. எனவே நெடுஞ்சாலை சாலைகளின் ஸ்டான்டர்டில் பஞ்சாயத்துச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அல்லது நெடுஞ்சாலைத் துறை மூலமாக அந்தச் சாலைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, Central Mixing Plants, Pavers மூலமாக இப்போது சாலைகள் போடப்பட்டு வருகின்றன. அப்படித்தான் போடவேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறை மூலம் ஓர் உத்திரவு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் Central Mixing Plants, Pavers வைத்திருப்பவர்கள் மிகவும் குறைவு. அப்படித்தான் போடவேண்டுமென்று சொன்னால் ஒருசில பெரிய கான்ட்ராக்டர்கள்தான் அந்தச் சாலைகளை எடுத்து வேலை செய்ய முடியும். அப்படி எடுத்துச் செய்கின்ற நிலை ஏற்பட்டால், போட்டி இருக்காது. ஒப்பந்தக்காரர்கள் போட்டி போட்டால்தான், டெண்டர் 'லெஸ்' - ஆக இருக்கும், அரசுக்கு லாபம் வரும். ஆனால் கான்ட்ராக்டர்களின் எண்ணிக்கை குறைகிறபோது, டெண்டரை அதிகமான ரேட் வைத்துக் கேட்கின்ற ஒரு நிலை ஏற்படும். அப்படிக் கேட்கின்றபோது பெரிய இழப்பு ஏற்படும். எனவே சாதாரண பிளான்ட் வைத்து வேலை செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று முக்கியமானது. பேக்கேஜ் முறையில் டெண்டர் விடுவது. பேக்கேஜ் முறையில் டெண்டர் விடுவதால் 1½ கோடி ரூபாய், 2½ கோடி ரூபாய், 3½ கோடி ரூபாய் என்று டெண்டர் விடப்படுகிறது. இப்படி டெண்டர் விடப்படுகிறது என்று சொன்னால், சாதாரண சிறிய கான்ட்ராக்டர்கள் வேலை செய்ய முடியாது. அந்தந்தப் பகுதியில் உள்ள கான்ட்ராக்டர்கள் வேலை செய்ய முடியாது. எங்கிருந்தோ வந்துதான் கான்ட்ராக்டர்கள் வேலை செய்வார்கள். அவர்கள் தரமான வேலைகளைச் செய்வார்களா என்பதில் நம்பிக்கை கிடையாது. இரண்டாவது, அவர்கள் 15%, 20% பேக்கேஜ் டெண்டரில் அதிகமாகக் கேட்கிறார்கள். ஆகவே, அந்த பேக்கேஜ் டெண்டர் முறையை மாற்றி, அந்தந்தப் பகுதியிலே உள்ள ஒப்பந்தக்காரர்கள் செய்கிற முறையிலே அந்த டெண்டரை அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. வேல்துரை]

முற்பகல் 11-35 [1998 மே 27

நெல்லை மாவட்டத்தில், பாளையங்கோட்டை-அம்பை-தென்காசி சாலை விரிவுபடுத்தும் பணியை ரோடு செக்டார் ப்ராஜக்ட் மூலமாக கடந்த ஆண்டே எடுத்தார்கள். ஆனால், இன்னமும் அதற்கு அரசு அனுமதி வழங்காததால் அந்த ரோடு செக்டார் ப்ராஜக்ட் மூலமாக நடைபெறவேண்டிய சாலையை அகலப்படுத்தும் பணி தொடங்கப்படவேயில்லை. எனவே, அந்தத் திட்டத்திற்கு அரசு உடனடியாக அனுமதி அளித்து விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே முக்கூடல்-வீரகனூரிலே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று நெடுங்காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டு இருக்கிறோம். கடந்த கூட்டத் தொடரிலேகூட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அங்கு ஒரு தரைப்பாலம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து தருவதாகச் சொன்னார்கள். அது ஹைவேஸ் சாலை இல்லை என்றும் சொன்னார்கள். ஆனால், அந்தப் பாலத்தைக் கட்டினால்தான், அது ஹைவேஸ் சாலையாக மாறும். ஆகவே, அந்த முக்கூடல் பாலத்தை கண்டிப்பாகக் கட்டித்தரவேண்டும். அதனால் அந்தப் பகுதியிலே 1-1/2 லட்சம் மக்கள் பயனடைவார்கள். எனவே, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சேரன்மகாதேவி தொகுதியிலே, சேரன்மகாதேவி ஆற்றுச் சாலை, கோபாலசமுத்திரம்-சுத்தமல்லி சாலை ஆகியவற்றை உடனடியாக பழுதுபார்த்துத் தரவேண்டும். அதேபோல திருநெல்வேலி—பொட்டல்புதூர் சாலையிலே, அரியநாயகிபுரத்திற்கும், முக்கூடலுக்கும் இடையில் ஒரு பயங்கர வளைவுப் பகுதி, விபத்துப் பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியையும் அகலப்படுத்தி, மேம்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) ஒரே ஒரு முக்கியமான விஷயம்.

தமிழ்நாட்டிலே திருநெல்வேலி, ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள்தான் பெரிய மாவட்டங்கள். அங்கு சுமார் 3000 கி.மீ.-க்கு மேல் சாலைகள் இருக்கின்றன. ஆனால், சிறிய மாவட்டங்களான கன்னியாகுமரி, தேனி போன்ற மாவட்டங்களில் 800 கி.மீ., 900 கி.மீ. சாலைகள்தான் இருக்கின்றன. ஆனால், நிதி ஒதுக்கும்போது மாவட்ட அளவில் நிதி ஒதுக்குகிறார்கள். அது எந்த



1998 மே 27] [திரு. பா. வேல்துரை]

வகையிலேயும் போதாது. எனவே கிலோ மீட்டர் அடிப்படையிலே நிதி ஒதுக்கப்பட வேண்டும். குறிப்பாக, நெல்லை மாவட்டத்திலே மாநிலச் சாலை 140 கி.மீ. இருக்கிறது; அதற்கு ரூ. 52 லட்சம்தான் ஒதுக்கி இருக்கிறார்கள். மாவட்டச் சாலை (எம்.டி.ஆர்.) 837 கி.மீ. இருக்கிறது; அதற்கு ரூ. 204 லட்சம்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதர மாவட்டச் சாலை (ஓ.டி.ஆர்.) 1811 கி.மீ இருக்கிறது; அதற்கு ரூ. 150 லட்சம்தான் ஒதுக்கி இருக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டர் சாலை போடுவதற்கு 4 இலட்சம் ரூபாய் வேண்டும். இப்போது ஒதுக்கி இருக்கிற தொகையை வைத்து வேலை செய்தால் 40 வருடங்களுக்கு ஒரு தடவை ஒரு கி.மீ. சாலை போடும் வேலைதான் வரும். 40 வருடங்கள் கழித்துத்தான் ஒரு சாலையை மேம்படுத்த முடியும். ஆகவே, ஓ.டி.ஆர். சாலைகளுக்கு அதிகமான நிதியை ஒதுக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டென்மார்க் நாட்டிலிருந்து பேவர்ஸ் மெஷின் ஒன்றை எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே வாங்கினார்கள். அதோடு ஒரு நடமாடும் பரிசோதனைக்கூடமும் வாங்கினார்கள். அந்த பேவர்ஸ் மெஷின் வேலை செய்கிறதா? அந்த நடமாடும் பரிசோதனைக்கூடம் எந்நிலையில் இருக்கிறது? பரிசோதனைகள் எல்லாம் அதன் மூலம் செய்கிறார்களா என்பதுபற்றியெல்லாம் உடனடியாக இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு முதலிலேயே சொல்லிவிட்டேன், இன்று 1½ மணிக்குள் அலுவல்கள் எல்லாம் முடிந்தாக வேண்டும். அதனால், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** முடித்துவிடுகிறேன். பில்ட்-அப் ஏரியா என்று சொல்வார்கள். அதாவது, ஊருக்குள் ரோடு போடுவது. ஊருக்குள் ரோடு போடும்போது, சாலைகளை ஹைவேஸ் போடுகிறது. அங்கு வாருகால் கட்டுவதை உள்ளாட்சித் துறை கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். உள்ளாட்சித் துறை வாருகாலைக் கட்ட தாமதப்படுத்தினால், சாலை போடும் பணி கெட்டுப்போகிறது. பல கோடி ரூபாய் ஒதுக்கி ரோடு போடும்போது, அங்கு வாருகால் கட்டாததனால், அந்தச் சாலை போடும் பணி கெட்டுப் போகிறது. எனவே, பில்ட்-அப்-ஏரியாவில் ரோடு போடும்போது, ஹைவேஸிருந்தே அந்த வாருகாலையும் கட்டிக் கொடுக்கவேண்டும். அப்போதுதான், சாலை போடும் பணி கெடாத அளவிற்கு ஒரு சிறப்பான நல்ல சாலையை உருவாக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பா. வேல்துரை] [1998 மே 27

நெல்லை மாவட்டத்தில் ஒரு பெரிய குறை இருக்கிறது. அதாவது ஓப்பன் டெண்டர் விடுகிறார்கள். டெண்டர் விட்டுவிட்டு, திருப்பி எஸ்டிமேட் ரேட்டிலிருந்து 5% வரை நெகோஷியேஷன்ஸ் எழுதி வாங்குகிறார்கள். இதனால் காண்ட்ராக்டர்கள் மிகுந்த வேதனைப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். டெண்டர் என்று வைத்த பிறகு அவர்கள் 'கோட்' பண்ணுகிற ரேட்டைக் கொடுக்க வேண்டியதுதானே? அதை நீங்கள் நெகோஷியேஷன்ஸ் என்ற அடிப்படையில் 5% வரைக்கும் குறைத்து வாங்குவது எந்தவிதத்திலும் நியாயமில்லை. எனவே, அவர்கள் 'கோட்' பண்ணுகிற ரேட்டுக்கே நீங்கள் டெண்டரை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே நிறைய கல் குவாரிகள் இல்லை. ஆனால், லிஸ்ட்டில் இருக்கிறது. நீங்கள் எஸ்டிமேட் தயார் பண்ணும்போது, அந்த கல் குவாரிகளை வைத்துத் தயார் செய்கிறீர்கள். ஆனால், அந்த கல் குவாரிகளுக்குப் போனால் அங்கு கல் குவாரியே இல்லை. அங்கு 30 வருடங்களுக்கு முன்பு கல் குவாரி இருந்தது; இப்போது அங்கு கல் குவாரி கிடையாது. ஆனாலும், அது இன்னும் குவாரி லிஸ்ட்டில் இருக்கிறது. அதை வைத்து நீங்கள் எஸ்டிமேட் போடுகிறீர்கள். அதனாலே காண்ட்ராக்டர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். 5 கி.மீ.-லே இருப்பதாகச் சொல்லி ரேட் கொடுக்கிறார்கள்; ஆனால் 25 கி.மீ.-க்கு அப்பால் இருந்துதான் ஜல்லிகளைக் கொண்டு வருகிறார்கள். அப்படி இருக்கும்போது எப்படித் தரமான வேலையை அவர்களிடம் வாங்க முடியும். எனவே, குவாரிகள் லிஸ்ட்டை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வள்ளியூர்-திருச்செந்தூர் சாலை, சாத்தான்குளம்-ஆழ்வார்திருநகரி-நாசரேத் வழியாகச் செல்லும் சாலை ஆகியவற்றை மேம்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. அமரமூர்த்தி அவர்களுடைய தொகுதியிலே திருமானூர்-பாளையப்பட்டி, சாலை 5 கிலோமீட்டர் கரும்பு அபிவிருத்தி சாலை இருக்கிறது. அதை உடனடியாகப் பராமரித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



998 மே 27]

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்.

**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைகளும் பாலங்களும் குறித்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருதுநகர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டத்தை, முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலேயிருந்து நிறைவேற்றப்படாமல் இருந்த அந்தத் திட்டத்தை, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு விருதுநகருக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்தபோது, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த இரயில்வே மேம்பாலத்தைக் கட்டித் தருவோம்' என்று கூறினார்கள். "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற தத்துவத்திற்கிணங்க, அந்த இரயில்வே மேம்பாலத் திட்டத்திறகு 13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதற்காக அரசாணை வெளியிடப்பட்டு அந்தப் பணிக்கென்று டெண்டர் விடப்பட்டிருப்பதற்கு எங்களது தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் மீண்டும் ஒருமுறை நன்றியைச் சொல்லிக்கொண்டு, அந்தத் திட்டத்தை விரைவில் முடித்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விருதுநகர் தொகுதியில் சிவகாசி பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட காளையார்குறிச்சிக்கும் எம்.புதுப்பட்டிக்கும் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த ஆற்றிலே மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும். அந்தச் சமயத்தில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல வேண்டுமானால் 25 கிலோ மீட்டர் சுற்றித்தான் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட இடத்தில் ஒரு பாலம் வேண்டுமென்பது அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்றது. அந்த ஆற்றிலே, கடந்த காலத்தில் அண்ணன் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு குழந்தைத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அந்த பஸ்சிலேயிருந்த குழந்தைத் தொழிலாளர்களெல்லாம் அன்று இறந்துவிட்டார்கள். அப்படிப்பட்ட

அந்த இடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)**

அதேபோன்று, விருதுநகர் பஞ்சாயத்து யூனியனிலே கன்னிசேரிக்கும், தியாகராஜபுரத்திற்கும் இடையிலே அர்ச்சுனா நதி என்று ஒன்று ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலேயும் – ஒரு பகுதியிலேயிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால் ஒரு தீவு போன்று இருக்கின்றது. – ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

விருதுநகரின் அருகிலே கவுசிகமா நதி என்ற ஒரு நதி ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த நதியைக் கடப்பதற்காக 4 ஆண்டுகளாக ஒரு பாலத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலத்தைக் கட்ட கட்டுமானக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் டெண்டர் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் டெண்டர் எடுத்து தனியாருக்கு மீண்டும் டெண்டர் விட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்குரிய முழுத் தொகையையும் கட்டுமானக் கழகம் பெற்றுக் கொண்டு தனியார் செய்த வேலைக்குப் பணம் கொடுக்காமல், உள்ளதால் முழு வேலையும் முடிவடையாமல் தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தை விரைவில் முடித்துக் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய விருதுநகர் தொகுதியிலே சாலைகளனைத்தும் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. அங்கே ஊராட்சி மன்றத்தின் மூலமாக, சாலைகளெல்லாம் மிகவும் விரைவாக, அனைத்துச் சாலைகளும் தார்ச் சாலைகளாகப் போடப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகச் செய்யப்படுகின்ற சாலைகள் மிகவும் குறைவாகவே செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விருதுநகர் தொகுதியிலே சாலைகள் மிகவும் மோசமாக இருப்பதால் விருதுநகர் தொகுதிக்கென்று அதிக நிதியினை ஒதுக்கித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதிலே முக்கியமாக ஆமத்தூர்-லட்சுமியாபுரம் சாலை மிகவும் மோசமாக இருக்கின்றது. பொதுவாக இன்னும் பல சாலைகள்



இருக்கின்றன. அந்தப் பட்டியல்களை எல்லாம் தலைமைப் பொறியாளரிடம் நான் நேரிலே கொடுத்து விடுகிறேன். அதற்கு அதிகமாக நிதியை ஒதுக்கி, சாலைகளைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோன்று, சென்னையிலிருந்து மதுரை வரையிலும் நான்கு வழிச் சாலைகளை துரிதப்படுத்திச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மீண்டும் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்ட போதிலும், அவர்களை வேலை வாங்கக்கூடிய ஆய்வாளர்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள். எனவே, ஆய்வாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகள் போட டெண்டர் விடுவதில், நமது அரசு, கடந்த கால ஆட்சியிலே நடந்த கொள்ளையைத் தடுத்து நிறுத்தியதை, நாங்கள் எல்லாம் வரவேற்கின்றோம். இப்போதுள்ள முறையில், டெண்டர் விடும்போது, ஒப்பந்தக்காரர்கள் 5 சதவிகிதம் அதிகமாகவோ அல்லது டெண்டர் ரேட்டிலோ டெண்டர் போடுகிறார்கள். ஆனால் அதிகாரிகளோ, டெண்டர் ரேட்டுக்கு டெண்டர் போடப்பட்டாலும் அவர்களை அழைத்து 5 சதவிகிதம் குறைவாக 'நெகோஷியேஷன்ஸ்' எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். அப்படி 5 சதவிகிதம் 'நெகோஷியேஷன்ஸ்' எழுதி வாங்கினால், அந்தச் சாலையினுடைய வேலைகள் மிகவும் குறைவாகவே இருக்கும். எனவே, எந்த ரேட்டிற்கு டெண்டர் போடுகிறார்களோ அந்த ரேட்டிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த ஆண்டு சாலைப் பணியாளர்களை நியமித்தபோதிலும், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலே முழுமையாகச் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை என்று அந்த மாவட்டங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூறுகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இரண்டு மாவட்டங்களிலும் கூடிய விரைவில் சாலைப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்] [1998 மே 27

அடுத்து, என்னுடைய தொகுதியினுடைய சில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான விருதுநகரிலே ஒவ்வொரு ஆண்டும் குடிநீர்ப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விருதுநகருக்கு என்று ஒரு தனித் திட்டத்தைத் தீட்டி, அங்கே எப்போதும் குடிநீர்ப் பிரச்சினை இல்லை என்று கூறுகின்ற அளவுக்கு, ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, வியாபாரிகளுக்கு என்று பல குறைகள் இருக்கின்றன. அங்கே 'செஸ்' கட்டுவதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. விருதுநகர் மார்க்கெட்டிங் கமிட்டியிலே உளுந்து, துவரம் பருப்பு, மல்லி இவைகளுக்கெல்லாம் செஸ் வசூலிக்கிறார்கள். ஆனால் அண்டை மாவட்டமான மதுரையிலே செஸ் விதிக்கும் முறை கிடையாது. அதேபோல திருநெல்வேலியிலும் கிடையாது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரே சட்டத்தை வகுத்து, செஸ் விதிக்கும் முறையை ஒழுங்குபடுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சுருக்கமாகச் சில விவரங்களைச் சொல்ல விழைகிறேன். முதலில் ஒப்பந்தக்காரர்களை எடுப்பதில் சில சிக்கல்கள், சிரமங்கள் உள்ளதாக பொதுவாகத் தெரிகின்றது. காரணம், நம்முடைய அரசு நிச்சயித்து இருக்கக்கூடிய—ஃபிக்ஸ் பண்ணி இருக்கக்கூடிய—விலை, செங்கல் ஆனாலும் சரி, முக்கால் இன்ச் ஜல்லி ஆனாலும் சரி, 1½ இன்ச் ஜல்லி ஆனாலும் சரி, சிமெண்ட் ஆனாலும் சரி, இந்தப் பொருட்களுக்குச் சந்தையிலே என்ன விலை இருக்கிறதோ, அந்த விலைக்கும் குறைவாகத்தான் அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிறது. இதனால் பல பகுதிகளிலே இந்த வேலைகள் நடப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இரண்டாவது, அந்த வேலைகள் தரமானவைகளாக இல்லை. ஒன்றிலே மட்டும்தான் விதிவிலக்கு இருக்கிறது. மணல்



1998 மே 27] [திரு. டி. மணி]

வாங்குவதைப் பொறுத்தவரை நாம் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கிறோம்; லோக்கல் மார்க்கெட்டைவிட கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கிறோம்; அவ்வளவுதான்.

அதேபோல கூலி ஆட்கள். நம்பர் 1, கொத்தனார் என்று சொல்லப்படுகிற ஆளுக்கு நம்முடைய நகருக்குள்ளேயே 180 ரூபாய் சம்பளம் இருக்கிறது. ஆனால், நாம் தீர்மானிப்பது அதைவிடக் குறைவான சம்பளம். அதேபோல, கையாள் என்று சொல்கின்ற ஒரு நபருக்கு நாம் கொடுப்பதைவிட, அதிகப்படியான சம்பளம் இருக்கிறது. இதனாலெல்லாம் இந்த வேலைகள் நடப்பதிலே சுணக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிலே இன்னொன்று. 10 இலட்சம் ரூபாய்க்கு ஒரு வேலை என்று ஒப்பந்தம் முடிக்கப்பட்டால், அதில் 5 சதவிகிதம் குறைக்க வேண்டுமென்ற ஒரு நிலை அரசாங்கத்தினுடைய பகுதியில் இருக்கிறது. அது சரியாக இருக்காது. ஏன் என்றால், விலைவாசியினுடைய உயர்வு பற்றி நான் முன்பே சொன்ன காரணங்கள் இதற்குப் பொருத்தமாக இருக்கும். அதேபோல் அந்த வேலை எவ்வளவு தரமானதாக இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது மிக முக்கியம். நம்முடைய பழைய சட்டமன்ற விடுதிக்கு முன்னால் ஒரு சாலை போடப்பட்டது. இரண்டு மாதத்திற்குள்ளே, அந்தச் சாலையிலே இப்போது நீங்கள் நடந்து பார்த்தாலே தெரியும், மேடு பள்ளங்கள் இருக்கின்றன. இப்போது சமீபத்திலேகூட மழை பெய்தது. அங்குள்ள வடிகாலைவிட சாலைகள் பள்ளமாக இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதை நம்முடைய அரசாங்கம் ஆய்வு செய்ய வேண்டும். நான் சொல்லக்கூடிய பகுதியை இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் யாராவது போய்ப் பார்த்தால் அங்கே தார்த்தளம் அமைத்ததிலே பெரிய சிக்கல் அல்லது குறைபாடு இருப்பது தெரியும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

[1998 மே 27

முற்பகல் 11-50 . . .

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வளாகத்திற்குள் போடப்படுகிற சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தது அல்ல. அதுமட்டுமல்ல, நெடுஞ்சாலைத் துறையினுடைய ரேட்டுகள் வேறு; அங்கே சாலைபோட செலவிடப்படுகிற ரேட்டுகள் வேறு. தரம் குறைந்து இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அது நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சாலை அல்ல.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இந்தத் துறையானாலும் சரி, அந்தத் துறையானாலும் சரி, அது சீராக இருக்க வேண்டும் என்ற காரணத்தாலே இதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளை வரையில் இருக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலை. அந்தத் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய போக்குவரத்து, மிக அதிகமாக இருக்கிறது. மிகுந்த நெரிசல் இருக்கக்கூடிய பகுதி. நான் கடந்த ஆண்டும் இதைப்பற்றி சம்பந்தப்பட்டவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பேட்ச் ஒர்க்தான் செய்தார்களே தவிர, அந்தச் சாலையை எடுத்துக் கொள்வதற்கு எந்த காண்ட்ராக்டரும் முன்வருவதற்குத் தயாராக இல்லை. அதற்கு மேலே வடிகால்கள். தேசிய நெடுஞ்சாலையிலே வடிகால்கள் இல்லை என்று சொன்னால், மழைக்காலங்களிலே சாலைகளிலே தண்ணீர் தேங்குகின்ற நிலை தொடருகின்றது. ஆகவே, அந்தச் சாலைக்கு நீங்கள் எப்படிப்பட்ட ரேட்டை வைத்திருக்கிறீர்களோ அந்த ரேட்டை எடுத்துச் செய்வதற்கு எந்த காண்ட்ராக்டர்களும் இப்போது தயாராக இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை எப்படிச் செய்ய முடியும் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். இது பெரிய பிரச்சினைக்குரிய விஷயம். 1997-லே இதேமாதிரி சொன்னேன். ஆனால் முடிவு ஏற்படவில்லை. களியக்காவிளையிலேயிருந்து நாங்கள் அந்தப் பக்கம் கால் வைத்தால்,



1998 மே 27] [திரு. டி. மணி]

ரோடு ரொம்ப சீராக உள்ளது. ஒரு பிரச்சினையும் கிடையாது. வடிகால் கூட ஒழுங்காக இருக்கிறது. சாதாரண மக்கள், 'அதையும் மத்திய அரசினுடைய உதவியுடன் செய்கிறீர்கள், இதையும் நீங்கள் மத்திய அரசினுடைய உதவியுடன் செய்கிறீர்கள்' அப்படி இருக்கும் போது ஏன் இந்தச் சாபக்கேடு என்றெல்லாம் கேட்கிறார்கள். எனவே, அந்தச் சாலைகளைப் பழுதுபார்க்கின்ற வேலையைச் சீராகவும் சிறப்பாகவும் செய்ய வேண்டும். ஆகவே, இந்த ஒரு சாலையினுடைய விஷயத்தை மட்டும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிறகு பாலங்கள். பாலங்களுடைய சமாச்சாரங்களைப் பற்றிச் சொல்லும்போது, அவைகள் இழுத்தடிக்கப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அதே தேசிய நெடுஞ்சாலையிலே குழித்துறையாற்றுப் பாலம். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, தேவையான பணத்தை எல்லாம் கொடுத்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அந்தப் பாலத்தினுடைய வேலையைச் செய்வதற்கு நாம் தயாராகாத சூழ்நிலை இருக்கிறது. இதிலே விமர்சனத்திற்கு முதலில் ஆளாகிறவர்கள், யார் என்றால் அந்தப் பகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர். இரண்டாவது என்னைக் கேட்பார்கள். நான் நடந்து போகிறவன், சைக்கிளிலே போகிறவன், பஸ்ஸிலே போகிறவன். இது பெரிய பிரச்சினைக்குரிய ஒரு பாலமாக இருக்கிறது. மேலும், வள்ளமலைப் பாலம் கட்டுவதற்கு கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்த பிறகு 60 லட்சம் ரூபாயை அவர்கள் அனுமதித்தார்கள். ஆனாலும் இன்னும் பணி என்ன என்றே அங்கே தொட்டுப்பார்க்கவே தயாராக இல்லை. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் ஒரு சிறிய பாலத்தைக்கூட கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். 30 அடி அகலம்தான் இருக்கிறது. அதைச் சரி செய்வதற்கு அந்த மாவட்டத்திலே காண்ட்ராக்டர்களே இல்லையா? வேறு ஊரிலேயிருந்துதான் ஆட்கள் வரவேண்டுமா? எனவேதான் சொல்கிறேன், இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறபோது, காலம் இழுத்தடிக்கப்படுகின்றது.

அடுத்து, இதேமாதிரி ஒரு மலைப்பாங்கான பகுதி, பழங்குடியினர் வாழுகின்ற பகுதி. கருப்பையாற்றின் குறுக்கே இருந்த பாலம் உடைந்து போய்விட்டது. 12 லட்சம் ரூபாய் அனுமதித்தாகிவிட்டது. அனுமதித்து 9 மாதங்கள் ஆகியும் இன்னும் பாலத்தினுடைய பணி ஆரம்பிக்கப்படவில்லை. மழைக்காலம் வருகின்றபோது சிக்கல் வந்துவிடும். ஆகவே, இந்த வேலைகள், அது பாலமானாலும் சரி, சாலையானாலும் சரி, தரமாகச் செய்து முடிக்கப்படவேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிக்கு ஏற்ப, பொருட்களினுடைய விலைக்கு ஏற்ப, ஊழியர்களுடைய, தொழிலாளர்களுடைய சம்பள விகிதங்களை எல்லாம் கணக்கிலே எடுத்து, அந்த அளவிற்கு நிதியை அதற்கு ஒதுக்கி, ஒப்பந்தக்காரர்களை வைத்து துரிதமாகச் செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதிலே நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது, கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளை வரையில் இருக்கிற தேசிய நெடுஞ்சாலை மற்றும் இந்தப் பாலம் குறித்து அரசு, உரிய நடவடிக்கை எடுத்து வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். பெரியசாமி.

***திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த பவள விழா காணும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் முதன் முதலாக தலைவர் கலைஞர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்குச் செய்த நலத் திட்டங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எங்கள் தொகுதியில் தாளமுத்து நகருக்குக் காவல் நிலையத்தையும், மாப்பிள்ளைபூரணி கிராமத்தில் கால்நடை மருத்துவமனையையும், எங்கள் மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய அளவிற்கு மருத்துவக் கல்லூரியையும். நீண்டநாள் கோரிக்கையாக இருந்து கொண்டிருந்த மீனளத் துறை சார்பாக வீரபாண்டிய பட்டணத்தில் மீன் பதப்படுத்தும் நிலையத்தையும், நீண்டநாள் கோரிக்கையான, மீனவர் பிரச்சினையாக இருந்த மண்ணெண்ணெய் வேண்டும் என்ற கோரிக்கையையும் நிறைவேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட



அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் புதியதாக 500 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கப்படும் என்று மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அந்த வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை. அவை நிச்சயமாக, துரிதமாக நடைபெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் உள்ள சாலைகள் எல்லாம் களிமண் தரையிலே போடப்பட்ட சாலைகள். அவை அடிக்கடி பழுதடைந்து போய்க்கொண்டிருக்கின்றன. ஆகையால் எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கும் நிதியைவிட எங்கள் மாவட்டத்திற்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கி நல்ல சாலைகளை அமைத்துத் தரவேண்டும். அங்கே பல தொழிற்சாலைகளும், துறைமுகமும் இருக்கிற காரணத்தால், கனரக வாகனங்கள் அடிக்கடி வருகின்ற காரணத்தால் சாலைகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகப்படியான நிதியை எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாலங்கள். கொங்கராகுறிச்சி-கருங்குளம் இணைப்புப் பாலம் குறித்து அங்கே நீண்டநாட்களாக மக்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலத்தை அமைத்துத் தரவேண்டும். அடுத்து ஆழ்வார்திருநகரி, ஆழ்வார்தோப்பு இணைப்புப் பாலம். நீண்டநாட்களாக அங்கேயுள்ள மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மழை வந்தால் அந்த ஊர்களுக்குச் செல்லமுடியாத அளவிற்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சரை நேரில் பார்த்து அடிக்கடி அந்தப் பாலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் நிச்சயமாக எங்களுக்குச் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு கேட்கிறேன். நிச்சயமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கிழக்குக் கடற்கரைச் சாலை இப்போது எங்கள் பகுதிக்கு வரவேண்டும். ஆனால் வரவில்லை, அதற்கு என்ன காரணம் என்று

[திரு. என். பெரியசாமி] [1998 மே 27

சொன்னால், கடலூரோடு அது நின்றுவிட்டது. அந்த வேலை தொடர்ந்து நடைபெறுமா என்ற சந்தேகத்திற்குரிய நிலைமையில் இப்போது நாங்கள் எல்லாம் இருந்துகொண்டிருக்கிறோம். அந்தச் சாலையை நிச்சயமாக அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகம் இந்தியாவிலேயே மிகப் பெரிய துறைமுகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் துறைமுகத்தின் விரிவாக்கப் பணிக்காக ரூ. 2,000 கோடி ஒதுக்கப்படுவதாக இங்கே குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த ரூ. 2,000 கோடியில் எங்கள் தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்திவிட்டு, அத்தோடு பயணிகள் செல்லக்கூடிய அளவிற்கு கப்பல் போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிக் கப்பல் போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால் தென் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் கப்பலில் போவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

பழையகாயலில் நீண்டநாட்களாக உள்ள மக்கள் குறைகள், மீனவர் குறைகள். மழைக்காலங்களிலே ஆற்றில் போகக்கூடிய தண்ணீர் கடலில் போய் கலக்கும்போது அங்கே முகத்துவாரத்தில் அடைப்பு இருக்கிறது. அது அடைபட்டு விடுவதால் ஆண்டாண்டுதோறும் அந்த மீனவ மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிரந்தரத் தீர்வு காணக்கூடிய அளவிற்குத் தடுப்புச் சுவர் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு புன்னகாயல் பாலத்திற்கும் தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீண்டநாட்களாக--மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்--நான் கேட்டுக் கொண்டிருக்கிற கோரிக்கை எங்கள் தொகுதிக்குட்பட்ட இடத்தில், தூத்துக்குடி மத்திய பகுதியில் பக்கில்ஓடை என்ற ஓடை ஒன்று இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பார்த்து இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் அழைத்துக் கொண்டுபோய் காண்பித்தேன். 1989 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறேன். இப்போதும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுப்பணித் துறை மந்திரியிடம் கேட்டால் அவர்கள் எங்களுக்கும், அந்த



1998 மே 27] [திரு. என். பெரியசாமி]

இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டால் அவர்களும் எங்களுக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் பல மனுக்களைக் கொடுத்திருக்கிறேன். இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறேன். அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக என் தொகுதிக்கு அந்த பக்கில்ஓடைக் கால்வாயை அமைத்துத்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளாற்றில் இருந்து வரக்கூடிய தண்ணீரை நம்பித்தான் தூத்துக்குடி நகர மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது பைப் லைன் போடக்கூடிய ஏற்பாடுகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் இதை முடித்துத்தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தூத்துக்குடி நகராட்சி வளர்ந்து கொண்டு இருக்கிற, மாவட்டத் தலைநகரமாக இருக்கிறது. பல தொழிற்சாலைகள் இருக்கிற காரணத்தினால் தூத்துக்குடி நகராட்சியில் ரோடுகள் போடக்கூடிய அளவிற்குப் பணம் பற்றாக்குறையாக இருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி நகரத்திற்குக் கொஞ்சம் அதிகப்படியான நிதியை ஒதுக்கி .ரோடு வசதிகள் செய்துதர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாயல்புரம்-பெருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இப்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், வேகமாக நடவடிக்கை எடுத்து, முடித்துத்தர வேண்டும். காரணம் எங்களுடைய தொகுதியில் ஏறத்தாழ 127 கிராம மக்கள் இப்போது குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதை வேமாக முடித்துத்தர வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையினுடைய கொள்கைக் குறிப்பில் பல்வேறு தனி அம்சங்களோடு சிறப்பான குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 1949 ஆம் ஆண்டிலேயே தனித் துறையாக ஆக்கப்பட்டு 1996 ஆம் ஆண்டு தலைமைச் செயலகத்திலே தனித் துறையாக நிர்வாகம் செய்து, இப்போது 1998 ஆம் ஆண்டிலே தனி அமைச்சர் பொறுப்பும் கொடுக்கப்பட்டிருப்பது பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது பாராட்டிற்குரிய ஒன்று. குறிப்பாக, பொருளாதார வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி இப்படி அன்றாட மக்களுடைய தேவைகளுக்காகப் பயன்படுவது நெடுஞ்சாலைத் துறை. இந்தத் துறையை நிர்வகிப்பதற்கான சிறப்பான முயற்சிகளை மேற்கொள்வதிலே தனியார் துறை ஊக்கப்படுத்தப்படும் என்ற கருத்து, கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அதுபற்றிய செய்திகூட இன்றையதினம் பத்திரிகையிலே விரிவாக வந்திருக்கிறது. குறிப்பாக, தனியார் துறையிலே கொடுக்கப்பட்டு இருக்கிற சாலைகள், பாலங்கள் இவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைப் பற்றி, முறைகளைப் பற்றி, அதிலே இருக்கிற முறைகேடுகளைப் பற்றிக் குறிப்பிட்டு, வெள்ளை அறிக்கை என்ற பெயராலே நெடுஞ்சாலைத் துறையினுடைய பொறியாளர்கள் அவர்களுடைய கருத்தை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அது இன்றையதினம் பத்திரிகையிலே செய்தியாக வந்திருக்கிறது. அதிலே ஏற்றத்தாழ்வு இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அதிலே பல பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றில் இப்படிப்பட்ட குறைபாடுகள், பிரச்சினைகள் வராத வண்ணம் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல் உலக வங்கித் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகிற பணிகள் பல மாவட்டங்களிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, திருவாரூர், மன்னார்குடி, கோட்டூர் போன்ற ஒன்றியப் பகுதிகளிலே சாலை மேம்பாட்டுப் பணிகளும், பாலம் அமைக்கிற பணிகளும் உலக வங்கித் திட்டத்தின் மூலமாக, வேளாண் துறை உலக வங்கித் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலேகூட இப்படிப்பட்ட குறைபாடுகளும்,



பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்கின்றன. சரியாக நிறைவேற்றப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள், விவசாயிகள் நேரிடையாக அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியும்கூட அவற்றையெல்லாம் கவனத்திலே கொள்ளாமல் அந்தப் பணிகளை எல்லாம் நிறைவு செய்திருக்கிறார்கள். பாலம் கட்டுகிற பணியும் விரிவான முறையிலே திட்டமிட்டு வேகமாக நடைபெறவிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து உரிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகள் அமைப்பதிலே போதுமான அளவிற்குக் கப்பிகள், போதுமான அளவிற்குத் தார் பயன்படுத்தவில்லை என்றாலும் அதற்குரிய அளவீட்டிலே அந்தச் சாலைகள் அகலப்படுத்தப்படவில்லை என்ற குறை நேரிடையாகச் சொல்லப்பட்டு ஒருசில இடங்களிலே மட்டும் திரும்பவும் அதைச் சீர்செய்வதற்குரிய முயற்சிகளை எடுத்தார்கள். முழுமையாகச் செய்யவில்லை என்ற குறை இருக்கிறது.

பிற்பகல் 12-05

அதேபோல, ஒரு பாலம் அமைக்கிற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பாலம் அமைப்பதற்கான குழியைத் தோண்டி அது நீரால் நிரம்பி--தண்ணீர் ஊற்றின் காரணமாக நீர் நிரம்பி விட்டது--திரும்பவும் அதை அவசரமாக இறைத்து உடனடியாக கான்கிரீட் போட்டு விட்டார்கள் என்று அந்தப் பகுதியில் சொன்னார்கள். முதல்நாள் நான்கூட சென்று பார்த்துவிட்டு வந்தேன். மறுநாள் ஒழுங்குபடுத்தி அதைச் சுத்தம் செய்து பின்னர் வேலை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டும்கூட உடனடியாக அவசரக் கோலத்தில் அந்தப் பால வேலைகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. பல தனியார் நிறுவனங்கள் அதைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக ராமநாதன் அண்டு கோ., அதேபோல் செல்வராணி, ஈஜிக் போன்ற நிறுவனங்கள் மூலமாக அந்தப் பகுதியில் செய்யப்பட்ட சாலைப் பணிகளிலும், பாலப் பணிகளிலும் அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதற்காக நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளம் தோண்டுகிறபோது தண்ணீர் வந்துவிட்டால் அதிலே எப்படி அவர்கள் கடைக்கால் போடுவார்கள்

என்று கேட்பது பழைய சித்தாந்தம். இப்போது கடலிலேயே பைல் பவுண்டேஷன் போட்டுக் கட்டுகிறார்கள். ஆகவே தண்ணீர் இருக்கிறபோது பவுண்டேஷன் போடுவது என்பது புதிய வளர்ந்து இருக்கிற டெக்னிக். ஆகவே, அதிலே ஒன்றும் பாதகம் இல்லை. அப்படியும் வேகமாக நடத்தியிருக்கிறார்களே என்று பாராட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாம்பன் பாலம் அப்படித் தான் கட்டப்பட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. புதிய நவீன முறையில் அப்படிப்பட்ட பாலம் அமைக்கப்பட்டு இருக்குமானால் எனக்கு ஆட்சேபணை இல்லை. பழைய பாணியில் அப்படிப்பட்ட பணி நடைபெற்றதாக அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் சொல்கிறார்கள். எனவே அதைப் பரிசீலிக்கவேண்டும்.

அடுத்து, மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டச் சாலைகள், பெரிய சாலைகள் பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே குறிப்பாக மாநில நெடுஞ்சாலைகள் கிலோ மீட்டர் அளவு அதனுடைய தேவைகளைக் கருதி குறிப்பாக, 1969 கிலோ மீட்டரில் 1776 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை செப்பனிடப்பட்டிருக்கிறது. இருவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் பெரிய மாவட்டச் சாலைகள் 14016 கிலோ மீட்டர் இருப்பதாகவும் அதிலே ஒருவழித் தடச் சாலைகள் 8443 கிலோ மீட்டர் இருப்பதாகவும், இதிலே இரு வழி, பல வழிச் சாலைத் திட்டங்கள் 5373 கிலோ மீட்டர் மட்டுமே பணி செய்யப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாவட்டச் சாலைகள், பெரிய சாலைகள் 8443 கிலோ மீட்டர் ஒரு வழிப் பாதையாக மட்டுமே இருப்பதை உடனடியாகச் சரி செய்வதற்கு, தொலைநோக்குப் ப்ார்வையோடு விரைவாகத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் விஷயத்திற்கு வருகிறேன். கொஞ்சம் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு 1½ மணிக்குள் அலுவல்களை முடிக்க வேண்டும்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஒன்றியச் சாலைகள் பற்றி எல்லாம் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதர மாவட்டச் சாலைகள் என்று வருகிறபோது ஒன்றியச் சாலைகள் 39,785 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் சுமார் 780 கிலோ மீட்டர் சாலைகள் மட்டுமே இரு வழிப் பாதைச் சாலைகளாக மாற்றப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. சுமார் 30 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் அப்படிப்பட்ட பணிகளுக்கு ஆயத்த நிலையில் இருக்கின்றனவா என்பது தெரியவில்லை. அதையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிழக்குக் கடற்கரைச் சாலை சென்னையிலிருந்து கடலூர் வரையிலே சிறப்பாக நிறைவேற்றப்பட்டு போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டு இருப்பது பாராட்டுக்குரிய ஒன்று. அதை மேலும் தூத்துக்குடி வரையிலும் விர்ரவான முறையிலே நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் சென்னை-கடலூர் கிழக்குக் கடற்கரைச் சாலையைப் போக்குவரத்திற்குரிய வகையில் திறந்து விட்டதோடு மட்டும் அல்லாமல் லாரி போக்குவரத்து அதில் அனுமதிக்கப்படுவது என்பது அபாயகரமான ஒன்று என்று கருதுகிறோம். அங்கே ஏராளமான லாரிகள் அனுமதிக்கப்படுவதால் பாதுகாப்பு குறைகிறது என்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்கிறேன்.

அதேபோல் இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் நான் விரைந்து கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமங்களை இணைக்கின்ற பகுதிக்கான முன்னுரிமை என்ற அடிப்படையில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தேசிய வங்கிக் கடன் உதவித் திட்டத்தில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே மன்னார்குடி தொகுதிக்கு உட்பட்ட சித்தமல்லை ஊராட்சி, நொச்சியூர் பாலகிருஷ்ணாபுரம்-சோத்திரியம் சாலையை மேம்படுத்துவதற்கான வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். பாளையூர்-மானம் காத்தான் கோட்டகம் சாலையை மேம்பாடு செய்யவேண்டும். அதேபோல்

தஞ்சை, நாகை, திருவாரூர் பகுதிகளுக்கான சாலைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லை. அந்த மண், எப்போதும் 6 மாத காலம் தண்ணீரில் இருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால் மற்ற மாவட்டங்களுக்கு வழங்குவதைப் போல் நிதியைத் தராமல் கூடுதலான நிதியை வழங்குவதற்குரிய முயற்சியை எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நிர்வாகப் பணிகளிலே பல்வேறு முறைகேடுகள் இருப்பதை நான் சென்ற முறை பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். இங்கே சபையில் மன்னார்குடி நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதன்மீது பரிசீலனை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

குறிப்பாக 'ஆஃபர் ஓர்க்' போடுவது என்ற அந்த முறை தமிழ்நாடு முழுமையும் இருக்கிறது. அது என்னுடைய தொகுதியில் நிறையவே இருக்கிறது. ஆயிரம் ரூபாய், 980 ரூபாய், 950 ரூபாய் என்ற அடிப்படையில் அந்த சப்-டிவிஷனுக்கு நிதி வருகிறபோது, அதை உடனடியாகப் போட்டு 'ஆஃபர் ஓர்க்' என்ற பெயரிலே எடுத்து விடுகிற போக்கு இருக்கிறது. எனவே இந்த 'ஆஃபர் ஓர்க்' போட விடாமல் தடுப்பதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் நான் பேசிய பிறகுதான் கான்ட்ராக்டர்களுக்கு மீதம் இருக்கிற தாரை வழங்கி அந்தக் காரியம் நடைபெற்றது மன்னார்குடியிலே. அதற்கு முன்னாலே இல்லை என்று சொன்னார்கள். நான் இங்கே சட்டசபையிலே பேசியதற்குப் பின்னாலேதான் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்ததாக, (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து ஒரேயொரு நிமிஷம். நெடுஞ்சாலைத் துறை பொன் விழா ஆண்டிலே — பொன் விழாவிலே — நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தை அறிவித்தார்கள். பல ஆண்டுகள் சாலைப் பராமரிப்புப் பணியிலே ஈடுபட்ட 2 ஆயிரம் சாலைப் பணியாளர்களை நியமனம் செய்வதாக அறிவிப்பு செய்து அது நிலுவையிலே இருக்கிறது.



அந்தத் துறையிலே இருக்கிற பதிவுரு எழுத்தர்கள் 20 ஆண்டுக் காலமாகப் பதவி உயர்வு பெற முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் ப்தவி உயர்வு அளிக்க வேண்டும்.

பகுதி நேர பி.ஈ. படித்தவர்களுக்கு நெடுஞ்சாலைத் துறையிலே உதவிப் பொறியாளர் பதவி தரப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 1990 ஆம் ஆண்டு அரசாணை 2337 மூலமாக அறிவிப்பே செய்தார்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு 18 ஆண்டுகளாகப் பணி வரன்முறை செய்யப்படவில்லை என்ற கோரிக்கை சொல்லப்பட்டிருக்கிறது. அதை கவனிக்க வேண்டும்.

புதிதாக நியமனம் செய்த சாலைப் பணியாளர்கள் மரணமுற்றால் அவர்களுக்குப் பாதுகாப்பு - குடும்ப நிதி அளிப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். 10,000 பேர் போட்டோம். இரண்டு பேர் இறந்துவிட்டார்கள் சாலையிலே. பல வேகமான சாலை விபத்துக்கள் நடைபெற்று வருகிறபொழுது அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்திலே 2, 3 (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து ஒன்றே ஒன்று. மற்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் ஒன்றிரண்டைச் சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் எல்லோர் சார்பிலேயும் பேச வேண்டியிருக்கிறது. அதனாலே சொல்லிவிடுகிறேன்.

சிவகங்கை மாவட்டத்திலே கண்ணப்பர் தெரு—கிருஷ்ணராயபுரம் பகுதியை இணைக்கிற குழாய்ப் பாலம் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (குறுக்கீடு) கண்ணார் தெரு—கிருஷ்ணராயபுரம் பகுதியை இணைக்கிற தரைப் பாலம் மதிப்பீடு தயாரித்து நிலுவையில் இருக்கிறது, வைகையாற்றிலே. அதுபோல மானாமதுரையிலே.

நெல்லை மாவட்டம் நாங்குனேரி பைபாஸ் ரோட்டிலே நிறைய சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே செந்தாமரைக்கண்-மண்ணக்குமண்டான் இணைப்பு கோரையாறுப் பாலம் கட்ட வேண்டுமென்ற அவசியம் இருக்கிறது. அதைக் குறித்து வெட்டுத் தீர்மானமும் கொடுத்திருக்கிறேன். தங்களிடம் நேரிலும் பேசியிருக்கிறேன். அதை நிறைவேற்றுவதற்கு உரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய எந்தப் பகுதிக்குச் சென்றாலும், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நீண்ட நெடுஞ்சாலைகள், பாலங்கள், மேம்பாலங்கள் ஆகிய இவைகளெல்லாம் கலைஞர் ஆட்சியிலே கட்டப்பட்டவை என்று அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் பெருமையோடு சொல்லக்கூடிய அளவில் இந்தத் துறையிலே தனக்கென்று ஒரு தனி முத்திரையைப் பதித்திருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வரவர்களுக்கு இந்த மானியத்திலே பேசுகின்ற நேரத்திலே என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள வாய்ப்புத்தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பொதுச் சொத்துக்களாகக் கருதப்பட வேண்டிய சாலைகள், ஆறுகள், குளங்கள், குட்டைகள் போன்றவைகளை நல்லமுறையிலே பராமரித்து, பாதுகாத்து அவற்றினுடைய முழுப் பயனையும் அனுபவிப்பதற்கு மிகப் பெரிய சவாலாக இருப்பது ஆக்கிரமிப்புகள் என்பதை நாம் அறிவோம். எனவே, இந்த ஆக்கிரமிப்புகள் முழுவதுமாக அகற்றப்பட்டு, சாலைகள், ஆறுகள், குளங்கள், குட்டைகள் பராமரிக்கப்பட்டால்தான் அதனுடைய முழுப் பயனும் மக்களைச் சென்றடையும் என்பதிலே ஐயமில்லை.

இன்றைக்கிருக்கின்ற சட்டத்தைக் கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றுவது என்பது இயலாத காரியம். காரணம், எந்தவொரு இடத்திலே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்றாலும், உடனடியாக ஆக்கிரமிப்பாளர் வழக்கு மன்றங்களுக்குச் சென்று ஒரு ஸ்டேயைப் பெற்றுவிடுகிறார். அந்த ஸ்டே, வழக்கு மன்றத்திலே நீண்டகாலம் நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினால் நாம் செய்ய வேண்டிய பணிகள் தாமதப்பட்டு, அதன் காரணமாக



விபத்துக்களை இன்றைக்கு நாம் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இப்படி ஆக்கிரமிப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே சாலைகளிலும், மற்றும் குளம் குட்டைகளிலும் ஏற்படுகின்ற விபத்துக்களின் காரணமாக விலை மதிக்க முடியாத உயிர்களையும், பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும் ஆண்டுதோறும் நாம் இழந்து வருகிறோம். எனவே, இதைக் கருத்திலே கொண்டு இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலமாக மிகச் சுலபமாக ஆக்கிரமிப்பாளர்களை அகற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டியது மிக மிக அவசியம்.

இந்த ஆக்கிரமிப்புகளைக் கடுமையான குற்றமாகக் கருதி, ஆக்கிரமிப்பாளர்கள் மீது வழக்குத் தொடரக்கூடிய அதிகாரத்தை துறை அதிகாரிகளுக்கு வழங்கிட வேண்டும். ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிற நிலங்களுக்கு குறைந்தபட்சக் குடக்கூலி நிர்ணயம் செய்வதும், ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற நேரத்தில் அகற்றுவதற்கு ஆகின்ற செலவை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தே வசூல் செய்யக்கூடிய அந்த உரிமையும் இந்தப் புதிய சட்டத் திருத்தத்தின் மூலமாகக் கொண்டுவரப்பட வேண்டும்.

பிற்பகல் 12-15

புதிய சாலைகளை அமைக்கின்றபோது 50, 60 ஆண்டுகாலத்திற்கு முன்னாலே என்ன அணுகுமுறை பின்பற்றப்பட்டதோ அதே அணுகுமுறையைத்தான் இன்னும் பின்பற்றுகிறார்கள். ஒரு புதிய சாலை அமைக்கின்ற நேரத்திலே 20 ஆண்டுகாலத்திற்குப் பின்னாலே என்ன போக்குவரத்து இருக்கும், எண்ணிக்கை எவ்வளவு இருக்கும், நெரிசல் எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட்டு அந்தச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. 50, 60 ஆண்டுகாலத்திற்கு முன்னாலே வேண்டுமானால் 20 ஆண்டுகாலத்திற்குப் பிறகு வரக்கூடிய போக்குவரத்து நெரிசல் குறைவாக இருந்திருக்கும். ஆனால், இப்போது 20 ஆண்டுகாலம் என்று நாம் கணக்கிட்டால், அந்த 20 ஆண்டு கால குறியீட்டை 5 ஆண்டு காலத்திலேயே நாம் அடைந்து விடுகிறோம். அந்த அளவிற்கு இன்றைக்குப் போக்குவரத்து நெரிசல் சாலைகளிலே ஏற்படுகின்றன, நெடுஞ்சாலைகளிலே ஏற்படுகின்றன.

அதைப்போலவே, கிராமச் சாலைகள் அமைக்கின்ற நேரத்தில், அதிலும் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னாலே என்ன அணுகுமுறை பின்பற்றப்பட்டதோ அதுதான் பின்பற்றப்படுகிறது. அன்றைக்குப் போக்குவரத்து வாகனங்களாக கட்டை வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. எனவே, அப்படிக் கட்டை வண்டிகள் பயன்படுத்தப்பட்ட காலத்தில், அவை செல்வதற்குத் தேவையான அளவிற்கு கிராமச் சாலைகளை உருவாக்கினார்கள். அதன் காரணமாகத்தான் கிராமச் சாலைகளுடைய அகலம் 3.75 மீட்டர் அல்லது 12 அடி என்று நிர்ணயம் செய்து, நெடுஞ்சாலைகளைப் போல் அவ்வளவு வலுவான சாலைகளாக இல்லாமல், கிராமச் சாலைகள் மிகக் குறுகலாக இருக்கின்றன. எனவே, இந்த நிலையை மாற்றியமைத்து கிராமச் சாலைகள் 5.5 மீட்டர் அல்லது 18 அடி அகலம் உள்ளதாகவும், நெடுஞ்சாலைகளைப் போல் நல்ல வலுவுள்ள சாலைகளாக அமைத்திட வேண்டியதும் மிக மிக அவசியம். காரணம், கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் விளைபொருட்களை எடுத்து வரவும், வேளாண் பொருட்களை எடுத்துச் செல்லவும் இன்றைக்கு அளவுக்கு அதிகமான பாரத்தை லாரியிலே ஏற்றுகிறார்கள். உங்களுக்குத் தெரியும். கரும்பை லாரியிலே ஏற்றிச் செல்கின்ற நேரத்தில் அல்லது மரவள்ளிக் கிழங்கு போன்ற வேளாண் பொருட்களை லாரியிலே ஏற்றிச் செல்கின்றபோது, அதிகபட்சமாக 15 டன் அல்லது 20 டன் வரையிலும் இன்றைக்கு பளு ஏற்றப்படுகிறது. அப்படி அதிக பாரத்தை ஏற்றி கிராமச் சாலைகளிலே வருகின்ற அந்த வாகனங்கள் எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிட முடியாத சூழ்நிலையின் காரணமாக பெரும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, கிராமச் சாலைகளுடைய அகலத்தையும், வலுவையும் கூடுதலாக ஆக்கக்கூடிய அந்த நிலையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக - தமிழகத்திலேயுள்ள மாவட்டங்களிலே ஈரோடு மிகப் பெரிய மாவட்டம் - நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பாலங்கள் கட்டுதல், நெடுஞ்சாலைகளை அமைத்தல் போன்ற பணிகளுக்காகப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பது மிகப் பெரிய குறையாக இருக்கிறது. அதுவும், என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில், அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருந்த 5 ஆண்டு காலத்தில் எந்த ஒரு புதிய சாலையும் என்னுடைய தொகுதியிலே



போடப்படவில்லை. காரணம் என்னவென்று கேட்ட நேரத்திலே எனக்கே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. அங்கேயிருக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்கள் சொன்னது, எந்தவொரு சாலைக்கும் அரசு நிதி ஒதுக்கி, ஒப்பந்தம் கோரினாலும், அந்தத் தொகுதியினுடைய முந்தைய அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக ஒப்பந்தக்காரர்களைச் சந்தித்து, அந்த எஸ்டிமேட்டிலே இவ்வளவு தொகை தனக்குக் கமிஷனாகக் கொடுத்தால்தான், அந்தப் பணியை மேற்கொள்ள முடியும் என்று வற்புறுத்தியதன் காரணமாக, எந்தவொரு ஒப்பந்தக்காரரும் என்னுடைய தொகுதியிலே புதிய சாலைகளை அமைக்கவோ, சாலைகளைப் பராமரிக்கவோ எந்த ஒப்பந்தமும் மேற்கொள்ளவில்லை என்ற உண்மையை அறிந்து ஆச்சரியப்பட்டேன். இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி, கூடுதலாக நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று பலமுறை நான் கேட்டிருக்கிறேன். எந்தெந்தச் சாலைகள் பராமரிக்கப்பட வேண்டும், செப்பனிடப்பட வேண்டுமென்ற பட்டியலைத் தயார் செய்து, அதற்கான மதிப்பீடுகளையும் தயார் செய்து, கோட்டப் பொறியாளர் மூலமாக, முதன்மைப் பொறியாளர் அவர்களுக்கு அந்தப் பட்டியல் அனுப்பப்பட்டது. நானும் பலமுறை முதன்மைப் பொறியாளரைச் சந்தித்துக் கேட்டும்கூட, நடந்து நடந்து கால்கள் தேய்ந்ததுதான் மிச்சமேயொழிய, இன்னும் எந்தவிதமான ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடும் இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, புதியதாக இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் குறைகளை மனதிலே கொண்டு, போதிய அளவில் நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, ஈரோட்டிலிருந்து கரூர் செல்லக்கூடிய சாலை ஒரு முக்கியமான சாலை. ஈரோடு, கரூர் மற்றும் திருச்சி, தஞ்சாவூர், மதுரை, நாகப்பட்டினம் போன்ற முக்கியமான நகரங்களை இணைக்கக்கூடிய அந்தச் சாலை, வயல்வெளிகளிலே அமைந்திருக்கிறது. வருடத்திலே 10 மாதங்களில் நீர்ப்பாசனம் நடைபெறுகின்ற அந்தப் பகுதியில் எவ்வளவுதான் பராமரிப்பு செய்தாலும், அந்தச் சாலை நல்லமுறையிலே இல்லை. அடிக்கடி பழுதுபடுகின்றது. எனவே, இந்த இரண்டு சாலைகளையும்—ஈரோட்டிலிருந்து கரூர் செல்கின்ற ஊஞ்சலூர் வழிச் சாலை மற்றும் ஈரோடு-கரூர் தாமரைப்பாளையம் வழிச் சாலை—நபார்டு திட்டத்தின்கீழ் நல்லமுறையிலே செப்பனிட்டுத்தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மூன்று முக்கிய பாலங்களை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். காவிரி ஆற்றின் குறுக்கே என்னுடைய தொகுதியிலே ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டும். அதைப்போல, நொய்யல் ஆற்றின் குறுக்காக ராசாம்பாளையம் தொப்பம்பட்டி என்ற இடத்திலே ஒரு பாலமும், சத்திரக்காட்டுவலசு மற்றும் முத்தூரை இணைக்கக்கூடிய வகையிலே ஒரு பாலமும் அமைத்துத்தர வேண்டும். வெள்ளோடு-அனுமன்பள்ளி நெடுஞ்சாலையில் குளத்தூர் என்ற இடத்திலே ஒரு ஓடையின் குறுக்காக ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை துறைக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் ஏற்று, பரிசீலித்து, விரைவிலே இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு, வாய்ப்புத் தந்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே என்னைப் பேச அனுமதித்ததற்காக நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இந்தத் துறையிலே, இந்த அரசு எண்ணற்ற மாற்றங்களை ஏற்படுத்தி நிரந்தர அமைப்பு முறையிலே சாலைகளைப் போடுகின்றது என்று சொன்னால், அது மிகையாகாது. குறிப்பாக, இப்போது போடப்படுகின்ற நாகை-தஞ்சை சாலையை அகலப்படுத்தி, இன்னும் முறையானபடி தரமான ஒரு சாலையாக இந்த அரசு அதை அமைத்துக் கொண்டிருக்கிறது.

அதுபோன்று, இன்று turn key basis முறையிலே பெரிய தொழில் நிறுவனங்களைக் கொண்டு, பெரிய கட்டுமானர்களைக் கொண்டு, அருமையான முறையிலே வடிவமைக்கப்பட்டு, தரமான, காலத்திற்கு ஏற்றவாறு பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு முறையான ரோடுகளை இந்த அரசு அமைத்துக்கொண்டிருக்கிறது. இதற்குப் பல்வேறு



இடைஞ்சல்கள் சிலரால், கடந்த காலங்களில் சம்பாதித்தவர்களால், சம்பாதிக்க நினைக்கக்கூடியவர்களால் வந்தாலும், அதுபற்றிக் கவலைப்படாமல் முறையான திட்டங்களின் அடிப்படையில் இந்த ரோடுகளைப் போடுவதற்கு மேலும் கவனம் செலுத்தி, இதேபோன்று அனைத்துச் சாலைகளையும், அந்தப் பாணியிலேயே அமைக்க வேண்டும் என்று இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, பெரிய சாலைகளை அமைக்கும்போது மழைக்காலங்களில், தண்ணீர் ஒரு புறத்திலேயிருந்து மறுபுறத்திற்குச் செல்லும்போது, அந்தச் சாலையில் அரிப்பு ஏற்படுகிறது. ஆகவே, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு குழாய்ப் பாலம்போட்டு - பஞ்சாபிலே இதுபோன்று செய்கின்றார்கள் - குழாய்களைப் பதித்துச் சாலைகளைப் போடுகின்ற காரணத்தால், அந்தப் பக்கம் உள்ள நீர் இந்தப் பக்கம் செல்லும்போது, ரோடுகளை அரிக்காமல் சென்றுவிடுகின்றது. அதற்கு மிகவும் அதிகமாகச் செலவு ஆகாது. ஆகவே, அதுபோன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போது பல நாடுகளிலே ரப்பர் தாரைப் பயன்படுத்தி ரோடுகளைப் போடுகின்றார்கள். அதனால், அந்தச் சாலையினுடைய தரம்கூடும் என்றும் குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, அந்த மாதிரி ரப்பர் தாரைப் பயன்படுத்தி நம்முடைய நாட்டிலேயும் சாலைகளைப் போடமுடியுமா என்பதை ஆராய வேண்டுகிறேன்.

அதைப்போல, எந்தச் சாலையைப் போடுவதாக இருந்தாலும்சரி, அதை மெஷினைக் கொண்டு போடவேண்டும் என்ற நிலையை மேற்கொண்டால் மிகவும் நன்றாக இருக்கும். பெரும்பாலும் ஆட்களை வைத்துப் போடப்படுகின்ற சாலைகள் தரமான சாலைகளாக இருக்காது. ஆகவே, அதை மாற்றியமைக்க வேண்டுகிறேன்.

அதேபோன்று, பராமரிப்பிற்காக நமது அரசு இந்த ஆண்டு 254 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றது. அப்படி ஒதுக்கப்படுகின்ற பணம் bit bit-ஆக 25,000 ரூபாய், 30,000 ரூபாய் என்று sponsor செய்யப்படுகின்றன. பராமரிப்புப் பணி செய்யாமலே பில்கள் (Bills) போடப்படுகின்றன. பல ஆண்டுகாலமாக இந்தக் குறைபாடு நடந்து வருகிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரம் சாலையை ஒரு நிறுவனத்திற்கு ஒப்படைத்து இத்தனை ஆண்டுகளுக்கு நீங்கள் இதனைப் பராமரிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே கொடுத்தால்,

நாம் சென்று பரிசோதனை செய்வதற்கும், ரோடு சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கும் வசதியாக இருக்கும். இல்லையென்றால், சிறு சிறு காண்ட்ராக்டர்களுக்கு, அங்கே இருக்கின்ற டி.ஈ.ஈ.-க்களோ அல்லது அதிகாரிகளோ பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதற்கான காசோலையைக் கொடுத்துவிட்டு, அந்தச் சாலையைப் போடாமலேயே பில் பாஸ் செய்துவிடுகிறார்கள். ஆகவே, இந்தப் பெரிய நிதியைக் கொண்டு 10 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தூரச் சாலையை ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து அந்தச் சாலைகளை நிரந்தரமாகப் பராமரிப்பதற்கான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பெங்களூரிலிருந்து வரும்போதோ அல்லது பெங்களூருக்குச் செல்லும்போதோ, சேலம், தொப்பூரிலே அந்தப் பாதையிலே, எப்போது பார்த்தாலும் traffic jam ஆகிவிடுகிறது. கிட்டத்தட்ட 5,000, 6,000 லாரிகள், பஸ்கள் வரிசையாக நின்றுகொண்டிருக்கும். அது கிளியர் ஆவதற்கு 8 மணிநேரம், 9 மணிநேரம் ஆகின்றது. பெங்களூர் போகிற வழியிலே தொப்பூரிலே எப்போது பார்த்தாலும் 8 மணிநேரம் 9 மணிநேரம் traffic jam ஆகிவிடுகிறது. இதனாலே, பெரும்பாலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நம் நாட்டிலே உற்பத்தியாகின்ற பொருட்கள் வட மாநிலங்களுக்கு அந்தப் பாதை வழியாகத்தான் சென்று கொண்டிருக்கின்றன. இதனாலே அந்தப் பொருட்கள் எல்லாம் அங்கே தேங்கி நிற்பதால்....

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மை. கடந்த காலத்திலே அந்த மாதிரி நிலைமை இருந்தது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, சில மாதங்களுக்குள்ளாகவே அந்தப் பகுதிக்கு நேரிலே வந்து பார்வையிட்டு, நடவடிக்கை எடுத்ததால், இப்போது அந்தப் பாதை அகலப்படுத்தப்பட்டு மிகவும் ஒழுங்காக, சீராக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இப்போது அதைப்போன்ற நெரிசலே இல்லை. அந்தச் சாலை மிகவும் அகலமாக, தேசிய நெடுஞ்சாலை என்று அழைக்கக்கூடிய முழுத் தகுதியையும் பெற்று, இந்த அரசாங்கத்தால்



அது சீர்செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை வழியாகத்தான் நான் கடந்த மாதம் சென்றேன். கிட்டத்தட்ட 8 மணி நேரம், அந்தச் சாலையிலே traffic jam-ஆல் நான் பாதிக்கப்பட்டு காத்திருந்தேன். அந்தச் சாலையை நான்கு வழிகள் கொண்ட சாலையாக மாற்ற வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. ஆகவே, அதை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற பெரும்பாலான பொருட்கள் அந்த வழியாகத்தான் வடநாட்டுக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். ஓரளவு இந்தச் சாலை சரி செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மை. இருப்பினும், தேசிய நெடுஞ்சாலை என்ற காரணத்தால், அதை நான்கு வழிப் பாதையாக ஆக்க வேண்டுமென்பதற்காக 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கு அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அனுமதிக்கப்பட்டவுடன் இந்த 25 கோடி ரூபாயில் அந்தச் சாலை நான்கு வழிப் பாதையாக மாற்றப்படும்போது தொப்பூர் பகுதிச் சாலையும் அகலப்படுத்தப்படும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. நாகை-வேளாங்கண்ணி சாலையில் மிகவும் அதிகமாக டூரிஸ்டுகள் வருவதால், போக்குவரத்து நெரிசல் இருக்கிறது. அங்கே இரயில்வே கேட் ஒன்று இருக்கிறது. இரயில் செல்கிற நேரத்தில் கேட்டை மூடி விடுவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அந்தப் பகுதியிலே இரயில்வே மேம்பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நாகூர் பாலம் கேட்டேன். நாகூர் வெட்டாற்றின் குறுக்கே பாலம் கேட்டேன்.

அமைச்சர் அவர்கள் தருவதாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கீழையூர் ஒன்றியத்திலே, முதலியப்பன்கண்டி என்ற இடம் இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தீவிலே வசிப்பதுபோல் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் வேதாரண்யம் கால்வாய் இருக்கிறது. அந்தப் பகுதி தீவு போன்று காட்சி அளிக்கிறது. அதனால், முதலியப்பன்கண்டி வேதாரண்யம் கால்வாயில் ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சடையன்கோட்டம் பாலம். கடந்த ஆண்டு மழையிலும் சரி, அதற்கு முந்தைய ஆண்டு மழையிலும் சரி, அந்தப் பகுதியை கலெக்டர் சென்று பார்க்க வேண்டுமென்றால், படகில்தான் செல்ல வேண்டிய நிலைமை. அப்படி ஒரு தீவு மாதிரி காட்சி அளிக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலும் ஒரு பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அரிச்சந்திரம் நதியில் ஒரு பாலத்தை அமைத்தால், கீழையூர் வேட்டைக்காரன் குப்பத்திலே உள்ள மக்கள் மாவட்டத் தலைநகருக்கு விரைவாக வருவார்கள். ஆகவே, அதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கீழையூர் ஒன்றியம் புதுப்பள்ளியில், செருதூர் இணைப்புச் சாலையில் சக்கிலியன்கால்வாய் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே அதிகமான மீன்பிடிப் படகுகள் உள்ள பகுதி அக்கரப்பேட்டை. சுமார் 1,000 படகுகள் இருக்கின்றன. அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு மிகவும் குறுகிய பாலம் ஒன்று இருக்கிறது. அந்தப் பாலத்தை கொஞ்சம் விரிவுபடுத்தித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அது முக்கியமான பாலம்.

அதைப்போல, கிழக்குக் கடற்கரைச் சாலை. கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரை சாலை அமைப்பதற்கு ஆசியா வங்கி நிதியைத்தர மறுத்துவிட்டதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. இதனால், இந்தச் சாலையை அமைக்க முடியாதோ என்ற ஐயப்பாடும் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அமைச்சர் அவர்கள் அதுகுறித்தும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடி, கூத்தாநல்லூர், பாய்காரத் தெருவிலுள்ள வண்டிப் பாலத்தினை போக்குவரத்துப் பாலமாக மாற்றி செய்ய வேண்டும். நாகை-திருத்துறைப்பூண்டி சாலை பழுதடைந்துள்ளது. அதை



ஒழுங்குபடுத்தித்தர வேண்டும். அதைப்போல நாகூர்-நாகை, நாகை-வேளாங்கண்ணி, நாகூர்-கங்கலாஞ்சேரி, நாகூர்-காரைக்கால், நாகூர்-திட்டச்சேரி ரோடுகள் கடந்த மழையால் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே, அதையும் மாற்றித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு கடலாண்மை பயிற்சிக் கழகத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. அதை நாகையில் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, நாகையிலே துறைமுகம் இருக்கிறது. அதைப்போலவே, கப்பல் உடைக்கும் தளமும் நாகையிலே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கப்பல் துறைமுகத்தைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருப்பதால், அதுகுறித்தும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே நாகை துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்காக, அதன் ஆய்வுப் பணிகளுக்காக 7½ இலட்ச ரூபாயை ஒதுக்கி இருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறைமுகம் மிகவும் பழமையானது. வரலாற்றுச் சிறப்பு உடையது. கடந்த காலங்களிலே, பெரிய அளவிலே, ஏற்றுமதி-இறக்குமதி செய்யப்பட்டு தமிழ்நாட்டுக்கு அதிக வருவாயைத் தந்துள்ளது. இப்போது இந்தத் துறைமுகம் அதிக முக்கியத்துவம் பெற்றுவிட்டது. ஐ.எஸ்.ஓ. தரம் பெற்ற திருச்சி, பெல் நிறுவனமும், திருச்சி, இரயில்வே ஸ்பேர் பார்ட்ஸ் உற்பத்தி நிறுவனமும் ஏற்றுமதி செய்வதற்கு சென்னைக்குப் பொருள்களை எடுத்துச்செல்ல வேண்டுமென்றால் 359 கிலோ மீட்டர் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. நாகை துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்தால் 120 கிலோ மீட்டர்மட்டும் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அதனால், போக்குவரத்து நெரிசலும் குறையும். நமது அரசுக்கு வருவாயும் அதிகமாகக் கிடைக்கும். அதோடு, ஐ.பி.பி., எம்.ஆர்.எல்., கைல், ஓ.என்.ஜி.சி. போன்ற பெரிய நிறுவனங்களைக் கொண்ட பெட்ரோ காம்ப்ளக்ஸ் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இவற்றை கவனத்தில் கொண்டு, இந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்தும் பணியை விரைந்து, இவ்வாண்டே செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம், திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற சோழ மண்டல மாவட்டங்கள் பயன்பெறும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியத்தின்மீது எனக்குப் பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்பு அமைவதற்குக் காரணமாக இருந்த என்னுடைய தலைவர் பவளவிழா காணும் தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களை வாழ்த்த வயது இல்லாத காரணத்தால் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 12-30

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு இவை மூன்றும், மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். இந்த அடிப்படைத் தேவைகளை, மனித சமுதாயம் குறைவின்றிப்பெற வேண்டுமானால், பல பகுதிகளோடு சாலை வசதி ஏற்படுத்தித் தரவேண்டியது, மிக மிக அவசியமாகும். இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொண்ட காரணத்தினால்தான், கடந்த ஐந்தாண்டுகளாக, இருண்ட ஆட்சியிலே கேட்பாரற்றுக் கிடந்த சாலைகளையெல்லாம், இராணுவ வேகத்தில் சீர்செய்து, போக்குவரத்து சீராக்கப்பட்டது. ஐந்தாண்டுக் கால அவல ஆட்சியிலே, கேவலமான சாலைகள், 1996 மற்றும் 1997 டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழையால், மேலும் மோசமாக்கப்பட்டு, நடக்கக்கூட முடியாத ஒரு நிலையிலே இருந்த அந்தச் சாலைகளையெல்லாம், நம்முடைய அரசு, நவீன கருவிகள் மூலமாக- மைய தார் கலவை இயந்திரம், தார் கலவையைப் பரப்பும் இயந்திரம் போன்ற நவீன கருவிகளைக் கொண்டு தரமான சாலைகளாகப் போடப்பட்டிருப்பதைப் பொதுமக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். ஓர் இக்கட்டான சூழ்நிலையிலே, கடந்த இரண்டு ஆண்டுகளாக, திறம்படச் செயலாற்றிய எங்கள் மாவட்டச் செயலாளர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் டாக்டர் பொன்முடி அவர்களின் பெருமுயற்சியால், கீழ்பெரும்பாக்கம் இரயில்வே சுரங்கப்பாதை மற்றும் திண்டிவனம் மேம்பாலம், இவற்றை எல்லாம் பல கோடி ரூபாய் அளவிலே எங்களுடைய மாவட்டத்திற்குக் கொடுத்தமைக்காக, அண்ணன் அவர்களுக்கு எங்களுடைய மாவட்டத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றிகலந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருகிவரும் மக்கள் தொகை, அதற்கு இணையாகப் பெருகும் வாகனங்கள், இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, இன்றைக்கு



ஒருவழிச் சாலைகள் எல்லாம் இருவழிச் சாலைகளாகவும், இருவழிச் சாலைகள் எல்லாம் 4 வழிச் சாலைகளாகவும் மாற்ற நடவடிக்கை எடுக்கும்போது, மரங்கள் அழிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. சாலைகள் விரிவுபடுத்தப்படுகின்றபோது, மரங்கள் எல்லாம் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்வதோடு, இருவழிச் சாலைகளாக இருந்தாலும், நடுவில் ஒரு தடுப்புச் சுவர் இருக்குமேயானால், விபத்துக்கள் பெருமளவில் குறைய அது ஏதுவாக இருக்கும் என்ற கருத்தினை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

உளுந்தூர்பேட்டை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளையும் இணைக்கின்ற ஒரு மையப் பகுதி. சென்னையிலிருந்து புறப்பட்டாலும், கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டாலும், சேலத்திலேயிருந்து புறப்பட்டாலும், எல்லா வாகனங்களும் அந்தப் பகுதி வழியாகத்தான் வரவேண்டும். இந்தக் காரணத்தினால், அந்தப் பகுதியிலே அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பல மணி நேரங்கள் வாகனங்கள் காத்துக் கிடக்கின்ற நிலை ஏற்படுவதோடு, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் நடந்துகூடச் செல்ல முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், உளுந்தூர்பேட்டையிலே உள்ள இரயில்வே கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதாலும், அங்கே நெரிசல் மிக அதிகமாக ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உளுந்தூர்பேட்டையில், இரயில்வே கிராஸிங்கில் ஒரு மேம்பாலத்தையும், நகரத்தைக் கடந்து செல்வதற்கு, உளுந்தூர்பேட்டையில் புறவழிச் சாலையும் அமைத்துத்தர வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள, நல்லூர் ஒன்றியத்தின் பொதுமக்களுடைய ஜீவாதாரமான, 'சென்சிடிவ்' பிரச்சினை என்னவென்றால், அந்தப் பகுதியிலே உள்ள மணிமுத்தாறுக்குக் குறுக்கே, நல்லூர், இளங்கியனூருக்கும் இடையே ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று நீண்டகாலமாக, 1991 ஆம் ஆண்டிலிருந்து ஒரு குறைபாடு இருந்துவருகிறது. நான் சமீபத்திலேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர் அவர்களிடத்திலேயும் மனு கொடுத்திருந்தேன். இதுசம்பந்தமாக,

ஆய்வுகள் செய்து, அந்தப் பகுதியிலே ஒரு பாலம் அமைய ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பாலம் அமைந்தால், கிட்டத்தட்ட அது இரண்டு தொகுதிகளையும், அதாவது உளுந்தூர்பேட்டை, விருத்தாசலம் ஆகிய இரண்டு தொகுதிகளையும் இணைப்பதோடு, பல கிராமங்களையும்—குறிப்பாக 40 அல்லது 50 கிராமங்களையும்— இணைக்கின்ற ஒரு பாலமாகவும், விவசாயிகளுக்கு போக்குவரத்திற்குப் பயன்படுகின்ற வகையிலே ஒரு முக்கிய பாலமாகவும் இருக்கும் என்ற காரணத்தினால், அந்தப் பாலத்தை நீங்கள் அமைத்துத்தர வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

தியாகதுர்கம் ஒன்றியத்தில் உள்ள சாலைகள், மிகக் குறுகலாக உள்ளன. காரணம், ஆக்கிரமிப்புகள். இன்றைக்குத் தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்புகள், இருந்தாலும்கூட, அது மிக அதிகமாக இருக்கின்ற அந்தப் பகுதியிலே ஒரு வாகனம்கூடச் செல்வதற்கு இடம் இல்லாத காரணத்தினால், அங்கே ஒரு புறவழிச் சாலையை அமைத்துத்தர வேண்டும் என்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அடுத்து, நான் ஏற்கெனவே கூறியதைப்போல உளுந்தூர்பேட்டையில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, அங்குள்ள மக்கள் அதிகமான சிரமத்திற்கு ஆளாகின்ற நிலை இருக்கிறது. அதற்கு மேலாக, அந்தப் பகுதியிலே ஆக்கிரமிப்புகள் மிக அதிகமாக இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் புராதனமானது. அது எந்தநேரத்திலும் இடிந்து விழக்கூடிய ஒரு சூழலில் இருக்கிறது. அந்தக் கட்டடம் சம்பந்தமாக 1994-95-ல் ஒரு முன்மொழிவும் பின்னர் 1995-96-ல் திருத்திய மதிப்பீடும் அனுப்பப்பட்டுள்ளன. (மணியடிக்கப்பெற்றது) எனவே, இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுத்து அந்தக் கட்டடத்தைக் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மன்றாடி கேட்டுக்கொள்கின்றேன். காரணம், அந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் ஆங்கிலேயர்கள் காலத்தில்



கட்டப்பட்ட கட்டடம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் பேருந்துகள் நிற்பதற்கு அதிக வசதி இல்லாத காரணத்தால், பேருந்துகள் எல்லாம் சாலைகளின் இருபுறங்களிலும் கிட்டத்தட்ட 1, 2 கி.மீ. தூரத்திற்கு நிற்க வேண்டிய சூழல் அடிக்கடி ஏற்படுகிறது. எனவே, உளுந்தூர்பேட்டையில் இடவசதி மிகுதியாக உள்ள இடத்தில் ஒரு பேருந்து நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பேசுகின்ற வாய்ப்பு அதிகமாகக் கிடைக்காத காரணத்தினாலே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியில், உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே உள்ளது. அங்கே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டி மனு செய்யப்பட்டு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. இதுசம்பந்தமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்ததிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கல்வராயன் மலைப் பகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்குள்ள கல்படை ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலமும், சாலை வசதியும் செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். பெல் to பெல் சாலை என்று அழைக்கப்படும் திருச்சி - இராணிப்பேட்டை சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதி சம்பந்தமாக சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைகள், பாலங்கள் குறித்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் மொத்தம் ஒரு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐநூற்று அறுபது கி.மீ. சாலைகள் உள்ளன. இந்தியாவிலேயே, தமிழகத்தில் தான் அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த

விபத்துக்களைத் தடுப்பதற்கு சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலும், மதுரையிலிருந்து தென்காசி வரையிலும் உள்ள நான்கு வழிச் சாலைகளிலும், இருவழிச் சாலைகளிலும் மையமாக மூன்று அடி அகலத்தில், இரண்டு அடி உயரத்தில் ஒரு தடுப்புச் சுவர் இருந்தால், அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். எதிரெதிரே வரக்கூடிய வாகனங்களான லாரிகள், பஸ்கள் மோதிக்கொள்வதால் நிறைய உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 2711 கி.மீ. சாலைகள் இருக்கின்றன. அதில் தேசிய நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள், கிராமப்புற நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. அதற்கு ஒவ்வொரு துறைக்கும் தனியாக ஒரு எஸ்.இ. என்ற அளவில் மூன்று எஸ்.இ.க்கள் இருக்கிறார்கள். அப்படியில்லாமல், மாவட்ட நெடுஞ்சாலைத் துறையினுடைய கண்காணிப்பாளர் அல்லது மாவட்ட என்ஜினீயர் என்று ஒரு பதவியைக் கொடுத்து, அவருக்குக் கீழே அந்தப் பொறுப்புகளை எல்லாம் ஒப்படைத்தால், அது சரியாக இருக்கும். எப்படி மாவட்டத்திலிருக்கக்கூடிய பல்வேறு துறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கவனித்துக் கொள்கிறாரோ, அதைப்போல மூன்று எஸ்.இ.க்கள் என்றில்லாமல், மாவட்டத்திற்கு ஓர் என்ஜினியர் என்று அறிவித்தால், நிர்வாகத்தை நடத்த ஏதுவாக இருக்கும். இப்படி ஒவ்வொரு துறைக்கும், தனித் தனியாக அதிகாரிகள் இருப்பதால், தேசிய நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள், கிராமப்புற நெடுஞ் சாலைகள் ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளுக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று, நான்கு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தத் துறையினருக்குத் தேவையான கட்டட வசதிகளும் இல்லை. அங்கே இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறை டி.இ. அவர்கள், எஸ்.இ.யுடன், சி.இ.-யுடன் தொடர்பு கொண்டு பேசுவதற்கு உண்டான வயர்லெஸ் வசதி இருக்க வேண்டும். இப்போது ஆர்.டி.ஓ.-விற்கு அந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது, தாசில்தாருக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். அவ்வாறு நெடுஞ்சாலைத் துறையினருக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

அடுத்து, சாலைப் பணியாளர்களை எடுத்துக்கொண்டால், நெல்லை மாவட்டத்தில் மொத்தம் 742 சாலைப் பணியாளர்கள் இருக்க



வேண்டும். அதில், இப்போது நியமனம் செய்யப்பட்டு இருப்பவர்கள் 526 பேர். இன்னும் 216 பேர் நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள். அந்த 216 இடங்களும் தற்போது காலியாக இருந்து கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய தொகுதியில், சிவகிரி தாலுகா, சங்கரன்கோவில் தாலுகாவுக்கு என்று ஒரு நெடுஞ்சாலைத் துறை ஏ.டி. அலுவலகம் இருக்கிறது. அதிலே தேர்வு செய்யப்பட்ட சாலைப் பணியாளர்கள் 89 பேர். அந்த 89 பேர்போக இன்னும் 43 இடங்கள் காலியாக இருக்கின்றன. இந்தத் தேர்வு முறையில், குலுக்கல் முறையை ஏற்பாடு செய்தது ஒரு பெரிய தவறாகும். போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு அமைச்சராக இருந்த முன்னாள் அமைச்சர் அவர்கள், அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, அந்தக் குலுக்கல் முறையை செய்திருந்தால், அது சரியான முறையில் இருந்திருக்கும். தீபாவளி முதல்நாள் எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் அதிகாரிகளை தவறான முறையில் பயன்படுத்தி-சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த மாவட்டத்தில் கலந்துகொள்ளவில்லை—அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி தவறான முறையில் அந்தக் குலுக்கலை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை நீங்கள் முழுமையாக இரத்து செய்து, மீண்டும் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமனம் செய்து, சாலைப் பணியாளர்களை தேர்வு செய்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட தவறுகள் அங்கே நடந்திருக்கின்றன.

தற்போதைய போக்குவரத்துத் துறை அமைச்சர், முன்பு நெடுஞ்சாலைத் துறைக்கும் அமைச்சராக பொறுப்பில் இருந்தபோது, நான் அவரிடம் நேரடியாக, இரண்டு, மூன்று கட்டங்களில் இது குறித்து சொல்லியிருக்கிறேன். என்னுடைய தொகுதியில், மொத்தம் எவ்வளவு பதவிகள் இருக்கின்றன என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகளை ஏற்று, அவர்களை அந்தக் குழுவில் நியமனம் செய்யவேண்டுமென்றும், இல்லையென்றால், அவர்கள் கொடுத்திருப்பதை பரிசீலனை செய்து நியாயமான முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இரண்டு, மூன்று முறை வலியுறுத்திச் சொல்லியும்கூட, சரி, சரி என்று சொல்லிவிட்டு, சரியான முறையில், பொறுப்பான முறையில் நடந்துகொள்ளாத காரணத்தால் தமிழகம் முழுவதுமாக இதில் பல்வேறு குறைபாடுகள் உருவாகியுள்ளன.

அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதுபோன்ற நிலைமை இருக்கும் என்று நான் கருதுகிறேன். யார், யாரோ, சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் பதவிகளை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட நிதியைப் பெற்றுக்கொண்டு, தவறான முறை கையாளப்பட்டிருக்கிறது. எனவே, மீதம் இருக்கக்கூடிய பதவிகளை நிரப்பும்போது, உடனடியாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினரைக் கலந்துகொண்டு நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களைப் போடும்போது சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்துதான் போடவேண்டுமென்று எங்கே இருக்கிறது ? உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினரை கலந்துகொண்டு போடவேண்டுமென்று சொல்லுகிறார். ஒரு முறையை அமைத்துக் கொண்டு, குலுக்கல் சீட்டு முறையில் போட்டிருக்கிறார்கள். தவறு இருந்தால் சொல்லுங்கள். சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டுதான் போடவேண்டுமென்று எப்படி நிர்ணயிக்கமுடியும் ? எப்படி வலியுறுத்த முடியும்?

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடத்திலே மனு கொடுக்கும்போது, 'நீங்கள் என்னிடம் கொடுங்கள், அதிகாரிகளிடம்கூட கொடுக்க வேண்டாம்' என்று நேரடியாக சொன்னீர்கள். உங்களை நம்பி நேரடியாகக் கொடுத்த காரணத்தினால் 'அவர். மந்திரியிடம்தானே கொடுத்தார். அதிகாரிகள்' நாங்கள் விருப்பப்படி செய்கிறோம்' என்று சொல்லி அதற்கு ஒரு மரியாதை இல்லாதபடி நெல்லை மாவட்டத்தில் நடந்துகொண்டார்கள். அதைத்தான் உங்களுடைய கவனத்திற்குச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் 20, 30 பேருக்கு பரிந்துரை செய்து கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கப்பட்ட அனைத்தும் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிறது. அவர்கள் உரிய முறையில், குலுக்கல் சீட்டு முறையில் தேர்வு செய்திருக்கிறார்கள். அதில் கிடைத்தும் இருக்கலாம், கிடைக்காமலும் போயிருக்கலாம், குலுக்கல் சீட்டு என்கிறபோது கிடைக்காமல் இருந்திருக்கலாம். அதிலே எந்தக் குறையும் இருப்பதாக நான் கருதவில்லை. ஒவ்வொருவரும் பரிந்துரை செய்துகொண்டிருக்கிறார்கள். அதை அனுப்புகிறோம். ஆகவே, அவர் பரிந்துரை செய்கிறார், பரிந்துரை ஏதும் செய்யாமல், "நாங்கள்



எங்கும் அணுகவேயில்லை, இதிலே தவறு நடந்திருக்கிறது" என்று சொன்னால், அதில் நியாயம் இருக்கிறது என்று அர்த்தம். அவர்கள் 20 பேருக்குக் கொடுக்கிறார்கள், அதில் இரண்டு பேருக்குக் கிடைக்கிறது. 18 பேருக்குக் கிடைக்காது. இதைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் பதவிகள், ஒரு இலட்சம் பேர் விண்ணப்பித்திருந்தார்கள். கொடுத்ததில் 2, 3 பேருக்குக் கிடைத்திருக்கலாம், குலுக்கல் முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1/3-தான் கொடுத்திருக்கிறோம். குலுக்கலில் வந்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். தகுதி உள்ளவர்களுக்குக் கிடைத்திருக்கும். அதுதான் வாய்ப்பு.

பிற்பகல் *12-45*

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியானால் அந்த மாவட்டத்தில் குலுக்கல் நடக்கும்போது அந்த மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும். அந்த மாதிரி இல்லாத வரையில், அதிகாரிகளை வைத்தே நீங்கள் செய்யும்போது, எங்களுக்குக் கிடைத்த தகவல், அமைச்சர் அவர்களுடைய டைரக்ஷன் காரணமாக, தவறான முறையில் அது கையாளப்பட்டு இருக்கின்றது என்று பரவலாகப் பேசப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான முறையிலே என்றால் எந்த முறையிலே, என்ன டைரக்ஷன் கொடுத்து இருக்கிறோம். அதுபற்றிச் சொல்லுங்கள். பேசக்கூடியவர்கள் சொல்வார்கள். குலுக்கல் நடந்திருக்கின்றது என்பதை நீங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். குலுக்கல் தீபாவளிக்கு முதல் நாள் நடந்திருக்கிறது என்று ஒத்துக்கொள்கிறீர்கள். எனவே, குலுக்கல் நடந்திருக்கிறது. பிறகு தவறான முறையில் நடந்திருக்கிறது என்று சொல்வதிலே என்ன இருக்கிறது. நீங்கள் கொடுத்தது வரவில்லை என்பதாலே இந்த மாதிரி சொல்லிக்கொண்டு இருந்தால், என்ன பிரயோஜனம்? அது வரவில்லை என்கின்ற கோபத்தில் பேசினால் என்ன செய்யமுடியும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தான் கொடுத்த அந்தப் பரிந்துரை வரவில்லை என்று சொன்னார்கள். அதுபோலவே ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.-க்களும் பல பேர் கொடுத்தது வரவில்லை என்ற புகாரும் முதலமைச்சர் வரையிலே வந்திருக்கிறது. எனவே, அதற்கு ஒரு நடைமுறையை எப்படி வைக்கலாம் என்பது குறித்து

இன்றையதினம், தமிழகம் எங்கும் இருக்கின்ற மக்களுக்கு 40 லிட்டருக்குக் குறையாத அளவு குடிதண்ணீர் கிடைக்க வேண்டுமென்ற உணர்வோடு, அத்தனை கிராமங்களுக்கு—குடிநீர் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையில்—நிதி ஒதுக்கீடு செய்து அத்தனை கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கின்ற கழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இன்றையதினம் ரூ.100 கோடிக்கு மேல் நெல்லை மாவட்டத்திற்கு குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்ற இந்த அரசுக்கு நெல்லை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சில கோரிக்கைகளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-50

இன்றையதினம் நெடுஞ்சாலைத் துறை சார்பாக நடக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றுகின்ற இந்தச் சூழ்நிலையில், எனது தொகுதி அம்பாசமுத்திரத்திலிருந்து தென்காசிவரை செல்கின்ற சாலையானது, ஒரு தீவுபோல ஒதுக்கப்பட்டு, அது ஒரு வழிப் பாதையாக இருந்து கொண்டிருக்கிறது. மேற்கே இருக்கக்கூடிய தென்காசி தொகுதியானாலும் சரி, கிழக்கே இருக்கக்கூடிய சேரன்மகாதேவி தொகுதியானாலும் சரி, அங்கேயெல்லாம் ரோடு அகலமாக இருக்கின்ற நிலையில், அம்பாசமுத்திரத்தில் மட்டும், அம்பாசமுத்திரத்திலிருந்து கடையம்வரை இருக்கக்கூடிய அந்தப் பாதை ஒரு வழிப் பாதையாக, குறுகிய பாதையாக இருக்கிற நிலை இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது . . .

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டுமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** அந்தச் சாலையை இரு வழிச் சாலையாக, உடனடியாக மாற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

அதேபோன்று, இன்றையதினம் அம்பாசமுத்திரத்திலிருந்து தென்காசி செல்லும் சாலை குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தினாலும், அம்பாசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி, கடையம் போன்ற ஊர்களின் நடுப்பகுதி வழியாகச் செல்கின்ற காரணத்தாலும், அந்தக் கிராமங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அம்பாசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி, கடையம் போன்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு புறவழிச் சாலை அமைத்துத்தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க நான் விரும்புகின்றேன். அதை அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெரிசல் இருக்காது என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, காரையார் பகுதிக்குச் செல்லக்கூடிய சாலையில் இருக்கின்ற பாலமானது 1992 ஆம் ஆண்டு வெள்ளத்தால் சேதமடைந்தது. 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்தப் பாலம் பேணப்படாத நிலையில், அங்கே தரை வழிப் பாலம் ஒன்று அமைக்கப்பட்டு, இன்றையதினம் அந்தப் பகுதியில் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1992-க்குப் பின்னால், அப்போதிருந்த ஆட்சியாளர்கள் அதை ஏறெடுத்துப் பார்க்காத நிலையில், புறக்கணிக்கப்பட்ட நிலையில், அந்தப் பகுதியில் தரை வழிப் பாலம் வழியாகப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, நல்லாட்சி நடத்துகின்ற இன்றைய ஆட்சியில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தந்து, போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

காரையாரைப் பொறுத்தவரையில், அது சுற்றுலாத் தலமாக இருக்கின்ற சூழ்நிலையில், அங்கே அதிகமான மக்கள் வந்து போகக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 1992 ஆம் ஆண்டிற்குப் பின்னர், பேணப்படாத பிரம்மதேசம் என்ற கிராமத்தில் இருக்கக்கூடிய சாலையானது, குண்டும் குழியுமாக இருந்து கொண்டிருக்கிறது. பஸ் போக்குவரத்து நடைபெற வேண்டுமென்றால், அந்தச் சாலை புறக்கணிக்கப்பட்ட நிலையில் சுருக்கமாகச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 27

மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நல்லது; அல்லது வேறு பிரச்சினைகளுக்குச் செல்வது நல்லது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. இதோடு நீங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள். திரு. இரா. ஆவுடையப்பன் (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்வதெல்லாம் அந்த மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து நடத்தியிருந்தால், எந்தப் பிராப்ளமும் இருந்திருக்காது. மேலும் இந்தமாதிரியான தவறான தகவலுக்கு இடம் இருந்திருக்காது என்பதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

அடுத்து, மதுரையிலிருந்து தென்காசிவரை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ராஜபாளையத்திலிருந்து நெல்லைவரை ஒரு வழிச்சாலையாக இருக்கிறது. அதை இருவழிச் சாலையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். புளியங்குடி, சங்கரன்கோவில், இவை இரண்டும் நகராட்சிகளாக இருக்கின்றன. இந்த இரண்டு நகராட்சிகளிலும் சுமார் 75,000 ஜனத்தொகை இருக்கிறது. ஆகவே, புளியங்குடியிலிருந்து சங்கரன் கோவில்வரை இருவழிச் சாலையாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன் (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. ரா. ஈஸ்வரன்:** தொகுதி குறித்துப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை முதலிலேயே பேசி இருக்க வேண்டும். திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு எங்கும் சாதனை என்றால், அதை கழக அரசால்தான் ஏற்படுத்த முடியும்..



1998 மே 27]

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன Point of order.

**திரு. பா. வேல்துரை:** என்னுடைய நெல்லை மாவட்டத்தில் இரவு 11-30 மணிக்கு குலுக்கல் நடந்திருக்கிறது. இது யாரையும் வைத்து நடைபெறவில்லை. யாருக்காவது தகவல் கொடுத்து இருக்கலாம். என்னுடைய பரிந்துரையைப் போடவேண்டுமென்று அவசியமே கிடையாது. எல்லாவற்றையும் சேர்த்து குலுக்கி இருக்க வேண்டும். அது யார், எங்கே குலுக்கினார்கள் என்பது யாருக்குத் தெரியும்? எப்படி நடந்தது என்று யாருக்குத் தெரியும்? இரவு 11-30 மணிக்கு குலுக்க வேண்டிய அவசியம் எப்படி வந்தது? அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதனை என்றால் அது கழக அரசால்தான் முடியும். கழக அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதை இன்றையதினம் தமிழ்நாடு எங்கும் மக்கள் பாராட்டுகின்ற வகையில், நல்லாட்சி நடத்துகின்ற தமிழினத் தலைவர், தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்களை, பல துறைகள் மூலமாக அறிவித்திருந்தபோதிலும், குறிப்பாகச் சொல்லப்போனால், நெல்லை மாவட்டத்தில், நாங்குநேரி தொகுதியில் இன்றையதினம் 7000 கோடிககு தொழில் பூங்காவிற்கு அனுமதி வழங்கிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நெல்லை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைய தினம் நெல்லை மாவட்டத்தில் பச்சையாறு அணை, நம்பியாறு அணை, கொடுமுடியாறு அணை, கடானா அணை விரிவாக்கத் திட்டம், அதேபோன்று, மணிமுத்தாறு பெருங்கால் பாசனத் திட்டம், நதியுண்ணிக்கால் மற்றும் அதேபோல கோடைமேல் அழகியன்கால் போன்றவற்றைப் பேணுவதற்காக நிதி ஒதுக்கீடு போன்ற பல சாதனைகளை இன்றையதினம் கழக அரசு செய்து தந்தமைக்கு நெல்லை மாவட்ட மக்கள் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருக்கிறது. அந்தச் சாலையையும் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு 50 கிலோ மீட்டரில் செல்லக்கூடிய சாலை ஒன்று இருக்கிறது. அந்தச் சாலை, பழங்காலத்தில் போடப்பட்ட சாலை. அதைப் பேணாமல் விட்டுவிட்ட காரணத்தால், இன்றையதினம் அந்தச் சாலை, குண்டும் குழியுமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தச் சாலையைப் புதுப்பித்தால், 35 கிலோ மீட்டரிலேயே திருவனந்தபுரத்தைச் சென்றடைய முடியும். அந்தப் பாதையைப் புதுப்பித்தால், திருவனந்தபுரத்திற்கு விரைவாகச் செல்ல முடியும் என்பதால், அந்தச் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதினை நீக்கித் தந்து, அங்கே போக்குவரத்தை உடனடியாகத் தொடங்குவதற்கு அரசு உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** இன்னும் மூன்று பேர் பேச வேண்டும். தயவு செய்து உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். இன்னும் அரை நிமிடத்திற்குள் உரையைப் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்கள் நியமனம்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சாலைப் பணியாளர்களைப் போட்ட காரணத்தால்தான், இன்றையதினம் சாலைகள் எல்லாம் சரியாக பேணி காக்கக்கூடிய நிலையில்—நீண்ட காலமாக பேணிக்காக்கப்படாமல் இருந்த ஒரு சில சாலைகள்கூட சரியான முறையிலே, பள்ளங்களில் நிறைய மண் அள்ளிப்போடப்பட்டு சரியாக—பணிகள் செய்யப்படுகின்ற நிலை இருக்கிறது என்பதை நான் நன்றியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். (குறுக்கீடு) இன்னும் மூன்று பேர் பேச வேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். எனவே, தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். திரு. எஸ். கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாலைகளும், பாலங்களும் குறித்த மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் மாண்புமிகு தமிழக



முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக வரலாற்றிலேயே முதன்முதலாக போக்குவரத்துக்கு அத்தியாவசியமான பாலங்களைக் கண்டறிந்து, 106 பாலங்களை ஒரே சமயத்தில் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்து, டெண்டர்கள் விடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய வேதாரண்யம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான செம்போடை, புட்பவனம் உப்பனாற்றுப் பாலத்தை இந்த ஆண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கட்டுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, மக்கள் தொகை அடிப்படையில்தான் சாலைகள் எல்லாம் போடப்படுகின்றன. எனவே, திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக உள்ளனர். விவசாய நிலங்களை அடிப்படையாகக் கொண்டு, அங்காடி அதனுடைய பரப்பளவை அடிப்படையாகக் கொண்டு, அங்காடி சாலைகள் என்ற திட்டத்திலே சாலைகள் போடப்பட்டு வந்தன. ஆனால், தற்போது அந்தப் பணிகளெல்லாம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. எனவே, புதிதாக எந்தச் சாலைகளும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எனவே, விவசாய நிலங்களை அடிப்படையாகக் கொண்டு போடப்படுகின்ற அங்காடி சாலைகளை, நெடுஞ்சாலைத் துறை மூலமாக அல்லது கிராமச் சாலை திட்டத்தின் மூலமாக போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய தலைஞாயிறு ஒன்றியத்திலுள்ள சாக்கை என்ற கிராமத்திலே சுமார் 3500 ஏக்கர் விளைச்சல் நிலம் இருக்கிறது. ஆனால், அங்கே தேவையான மக்கள் தொகை இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள அடப்பாற்றின் குறுக்கே பாலம் இல்லாத காரணத்தால் 3500 ஏக்கரில் விளைகின்ற விளைபொருட்களை, இடுபொருட்களை, ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டருடைய நடைபாதையில், தலையில் தூக்கிச் செல்ல வேண்டிய ஒரு நிலை உள்ளது. எனவே சாக்கை, துளசாபுரம் சாலைப் பாலத்தை உடனடியாக கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

D
V24,3'N98
N98.57.2

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அடுத்தபடியாக, 1000 பேர் மக்கள் தொகை கொண்ட அனைத்துக்கிராமங்களுக்கும், இந்த ஆண்டு இறுதிக்குள் இணைப்புச் சாலைகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் என்னுடைய வேதாரண்யம் தொகுதியில், தென்னடார் கிராமம், 1500 பேர் மக்கள் தொகுதி கொண்ட கிராமம். எனவே, அங்கே ஓர் இணைப்புச் சாலை, கிராமச்சாலை திட்டத்தின்கீழ் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, வேதாரண்யம் ஒன்றியத்தில் மிக நீளமான சாலையான ஆதனூர், கோவில்தாவு, கடினல்வயல், பன்னாள், ஆயக்காரன்புலம், பஞ்சநதிக்குளம், தகட்டூர் வரை செல்கின்ற அந்த நீளமான சாலை தற்போது மண் சாலையாகவும், சில கிராமங்களில் கருங்கல் ஜல்லி சாலையாகவும் இருக்கிறது. அந்தச் சாலையை 'நபார்டு' திட்டத்தில் சேர்த்து செப்பனிட்டுதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, உள்ளாட்சிக்குச் சொந்தமான சாலைகளில் குறுக்கிடுகின்ற ஆறுகளில் பாலம் கட்டுவதற்கு உள்ளாட்சித் துறையின் நிதி போதுமானதாக இல்லை. விதிமுறைகளும் இடம் கொடுக்கவில்லை. எனவே, இதுபோன்ற சாலைகளை, பாலங்களைக் கண்டறிந்து கிராமச் சாலை திட்டத்தின்கீழ் அல்லது 'நபார்ட்' திட்டத்தின்கீழ் அவற்றைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இப்போது சாலைகள் பெருமளவில் தமிழ்நாட்டில் போடப்பட்டு வருகின்றன. உள்ளாட்சித் துறை மூலம், கிராமச் சாலை திட்டத்தின் மூலம், நெடுஞ்சாலைத் துறை மூலம், தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலம் பல்வேறு சாலைப் பணிகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. ஆனால், அந்தச் சாலைகளில் தார் போடுகின்ற வேலைகள் மழைக் காலங்களில் செய்யப்படுவதால், தார் போடப்பட்ட 10, 15 நாட்களுக்குள் சிரழிந்துவிடுகின்ற ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே மழைக் காலங்களில் அதாவது செப்டம்பர் அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் தார் போடுகின்ற வேலையைத் தடை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அடுத்தபடியாக, சாலைப் பணியாளர்கள் பெருமளவில் போடப்பட்டு, இப்போது சாலைகள் எல்லாம் பழுது



பார்க்கப்படுகின்றன. அந்தச் சாலைப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் 50 மரக் கன்றுகளையாவது நட்டு அதை வளர்க்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டுமென்று வேண்டுகிறேன். அந்தவகையிலே சுமார் 15 அல்லது 20 இலட்சம் மரக் கன்றுகள் கூடுதலாக நடப்பட ஒரு வாய்ப்பு உள்ளது.

அதேபோல, வேதாரண்யம்-வேளாங்கன்னி சாலை மிகத் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளதால், அந்தப் பகுதி மழைக் காலங்களில் போக்குவரத்துக்கு லாயக்கற்றதாகி மாவட்டத்தினுடைய தலைநகரத்திலிருந்து துண்டிக்கப்பட்டுவிடுகிறது. சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லுகின்ற கிழக்குக் கடற்கரைச் சாலை, ஏற்கெனவே வேதாரண்யம் வழியாகச் செல்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதற்கான வழிமுறையை மாற்றி திருத்துறைப்பூண்டி வழியாகக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஏற்கெனவே அங்கு எல்லைக் கற்கள் எல்லாம் போடப்பட்டுள்ளன. ஈ.சி.ஆர். என்ற எல்லைக் கற்கள் எல்லாம் அங்கே போடப்பட்டுள்ளன. எனவே, அந்தத் திட்டத்தை மீண்டும் மாற்றி வேதாரண்யம் வழியாக அந்தச் சாலை செல்ல வேண்டும். ஏனென்றால், வேதாரண்யம் அடிக்கடி மழைக் காலங்களில் துண்டிக்கப்படுகின்ற பகுதி. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அந்தப் பகுதிக்கு வெள்ளக் காலங்களில் வந்து பார்வையிட்டார்கள். படகிலே சென்றுதான் வேதாரண்யம் தாலுகா அலுவலகத்தை அப்போது அடைய முடிந்தது.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே கிழக்குக் கடற்கரைச் சாலை அமைந்து இருக்கிறது. அந்தச் சாலையினுடைய உயரம் உயர்த்தப்பட்டு தரமானதாக ஆக்கப்படும்போது, இந்தப் பிரச்சினை தீரும். எனவே, மழைக் காலங்களில் அந்தப் பகுதியினுடைய மக்களின் இன்னல்களைப் போக்குகின்ற விதத்தில் அந்தச் சாலை அமைத்துத் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலை வேதாரண்யம் வழியாகச் செல்ல வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று அதற்கு புறவழிச் சாலையாக புஷ்பவனம், நாலுவேதபுரி ஆகிய கிராமங்களை இணைத்து கிராமச்சாலைத் திட்டத்திலே—இப்போது நபார்டு மூலமாக 13 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச்சாலைகள் அமைக்கப்படுகின்றன; அங்கு

இடையிலே ஒரு பாலம் இல்லாத காரணத்தினாலே, அந்த இணைப்பு முழுமை பெறவில்லை; எனவே, நாலுவேதபுரியிலே 55 அடைப்பாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதேபோன்று வடுவூர், மணக்குடி என்ற கிராமங்களிலே 3000 மக்கள் தொகை இருக்கிறது. அங்கு ஏற்கெனவே உள்ளாட்சித் துறை மூலம் சாலை போடப்பட்டுவிட்டது. ஆனால், உள்ளாட்சித் துறை மூலம் பாலம் கட்டுவதற்கு வசதி இல்லாத காரணத்தினால் அந்தச் சாலை, போக்குவரத்துக்கு லாயக்கு இல்லாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. எனவே, உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அந்த நல்லாற்றின் குறுக்கே பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலிருந்து தாம்பரம் செல்கின்றபோது பெருமளவில் அங்கே போக்குவரத்து நெரிசல் காரணமாக ரோட்டில் வாகனங்கள் 20, 30 நிமிடங்கள் தேங்கி நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, தாம்பரத்தில் ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிழக்குக் கடற்கரைச் சாலையிலே, இங்கிருந்து 77-வது கிலோ மீட்டரில் கூவத்தூர் என்ற இடத்திலே சாலையினுடைய நடு மையத்திலே சிமெண்ட்டால் செய்யப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலை உள்ளது. பெருமளவில் விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையில் அது இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக முடிவு செய்து அந்தச் சிலையை வேறு இடத்திற்கு மாற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. சுந்தரம்.

***திரு. ந. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை எண் 38-ன் மீது பேச வாய்ப்பு அளித்த எங்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும், எங்களது நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிதம்பரம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால ஆட்சியில் இந்தத் துறையில்



ஒப்பந்தம் கோருவதே கிடையாது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முறைப்படி ஒப்பந்த அடிப்படையில் வேலை கொடுக்கப்பட்டு விரைவாக வேலை நடைபெறுகிறது. சாலைப் பணியாளர்கள் ஓய்வு பெற்றபோது காலியான இடங்கள் நிரப்பப்படாமல் பல இடங்கள் இருந்தன. இப்போது சாலைப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதற்கட்டமாக பணியாற்றி வருகிறார்கள். இன்னும் காலியாக உள்ள இடங்களில் இரண்டாவது கட்டமாக சாலைப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் சாலைகளில் வருமானம் வரக்கூடிய அளவுக்கு புளிய மரம், வேப்ப மரம் போன்ற மரங்களை வைத்து பராமரித்ததால், இன்று அரசுக்கு அதன்மூலம் வருமானம் வருகிறது. அதேபோல், மீண்டும் அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி பகுதியில் உள்ள சாலைகளை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராமேஸ்வரத்திற்கு வட நாட்டவரும் வந்து செல்கின்றனர். திருச்சியிலிருந்து புதுக்கோட்டை, திருமயம், காரைக்குடி வழியாகச் செல்லும் சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளன. எனவே, அந்தச் சாலைகளை மாநில நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டுமென்று வேண்டி கேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே, இந்த ஆண்டு இப்பணியை முடித்துத் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

காரைக்குடியிலிருந்து அறந்தாங்கி செல்லும் சாலையை அகலப்படுத்தி இருவழிச் சாலையாக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலிருந்து காரைக்குடி வழியாக இராமேஸ்வரம் செல்லும் பாதையில் நமனசமுத்திரம், கோட்டையூர் ஆகிய இடங்களில் இரயில்வே கேட் அமைந்திருப்பதால் அடிக்கடி இரயில்வே கேட் மூடப்படுகிறது. இதனால் பயணிகள் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்ல

[திரு. ந. சுந்தரம்] [1998 மே 27

முடியவில்லை. எனவே, அந்த இடங்களில் மேம்பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

கடந்த காலத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக பயணிகள் தங்கும் விடுதி கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால், தற்பொழுது நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணிகள் விடுதி அமைக்கப்படவில்லை. எனவே, தாலுகாக்களின் தலைநகரத்தில் சாலையோரங்களில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணிகள் விடுதி கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

காரைக்குடியிலிருந்து மானகிரி-மதகுப்பட்டி சாலை, கல்லல் காளையார்கோவில் சாலை, சூரக்குடி-கானாடுகாத்தான் சாலை, கோவிலூர்-குன்றக்குடி சாலை, சிறுகவயல்-நெம்மேனி சாலை, பீர்க்கலைக்காடு-திருப்பனங்குடி சாலை, காரைக்குடியிலிருந்து கல்லூர்வரை செல்லும் சாலை போன்றவற்றை அகலப்படுத்தி மேம்படுத்த வேண்டுகிறேன்.

வேப்பங்குளம், இராமநாயக்கன் ஏந்தல் சாலையில் உள்ள மணிமுத்தாற்றில் பாலம் கட்டவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள் நடுவதற்காக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சேலம் மாவட்டம் ஓமலூர், டேனிஷ்பேட்டை-பொம்மிடி சாலையைச் செப்பனிட வேண்டுகின்றேன்.

ஓமலூரில் இந்த ஆண்டு இரயில்வே மேம்பாலம் ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

தொண்டி துறைமுக வேலையையும் உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தக் கோரிக்கைகளை திருவாடானை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. கே.ஆர். இராமசாமி அவர்களின் சார்பாக இந்த அவையின்முன் வைக்கின்றேன்.



1998 மே 27] [திரு. ந. சுந்தரம்]

கரும்பு உற்பத்தி அபிவிருத்திச் சாலைகள் தமிழ்நாட்டில் சுமார் 1300 கிலோ மீட்டர் நீளம் இருப்பதாக அறிகின்றேன். இந்தச் சாலைகள் இதுவரை மேம்படுத்தப்படவில்லை. மிகவும் மோசமாக உள்ளன. இந்தச் சாலைகள் உடனடியாக நெடுஞ்சாலைத் துறையின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு செப்பனிடப்பட வேண்டும். மேலும் கரும்பு உற்பத்தி அபிவிருத்திச் சாலைகளுக்காக உள்ள அதிகாரிகளை எடுத்து நெடுஞ்சாலைத் துறையில் சேர்த்து சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. அமரமூர்த்தி அவர்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மதுரை, பெரியார் பஸ் ஸ்டாண்ட் பக்கமுள்ள இரயில்வே மேம்பாலம் டிபி. ரோடு எல்லிஸ் நகர் பக்கம் நேராக ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எ. தெய்வநாயகம் அவர்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர்-மானாமதுரை சாலையை மேம்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

திருவண்ணாமலை-தானிப்பாடி செல்லும் சாலையில் கொளமஞ்சலூர் அருகே தென்பெண்ணை ஆற்றின்மீது மேம்பாலம் அமைத்துத் தந்திட வேண்டும் அல்லது தரைப் பாலமாவது அமைத்துத் தந்தால்தான் அந்தப் பகுதியிலிருக்கும் இரண்டு இலட்சம் மக்கள் மழைக்காலங்களில் வெளியுலகத் தொடர்பில்லாமல் இருப்பதைத் தவிர்க்க முடியும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பாபநாசம் தொகுதியில் நீரத்தநல்லூர் - மதனூத்தூர் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு தஞ்சை கோட்டப் பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது 'அடுத்த ஆண்டு பார்ப்போம்' என்று சொன்னார்கள். இந்தப் பாலம் அமைவதால் கும்பகோணம் - சென்னை செல்லும் தூரம் 50 கிலோ மீட்டர் குறைய வாய்ப்புள்ளது என்றும், அணைக்கரைப் பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மாற்றுப் பாலம் தேவை என்பதை உணர்ந்து வரும் ஆண்டில் சேர்த்துக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. சுந்தரம்] [1998 மே 27

திருக்கோவிலூர் ஒன்றியத்தில் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் போடப்பட்ட பழங்கூர், நத்தாமூர் சாலையையும், தகடி கூவனூர் சாலையையும் சீரமைத்துத் தர வேண்டுகின்றேன்.

தேனி மாவட்டத்தில் உள்ள பெரியாற்றின் குறுக்கே குச்சனூர் - சீலையம்பட்டி கிராமங்களை இணைக்கும் வகையில் ஒரு பாலம் கட்டப்படுமானால் கம்பம், பாளையம், கோம்பை, தேவாரம், போடி சின்னமனூர் ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் தென் மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், சிவகாசி, இராஜபாளையம் ஆகிய பகுதிகளுக்குச் செல்கிறபோது சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் குறையும். ஆகவே, குச்சனூர்-சீலையம்பட்டி இணைப்புப் பாலம் கட்டப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, என்னுடைய தொகுதியிலே, புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் பிரிவிலே திரு. ஏ. நாராயணன் என்பவர் சாலைப் பணியாளராகப் பணிபுரிந்து 1993 ஆம் ஆண்டிலே இறந்துவிட்டார். அவருடைய குடும்பத்தினர் நிரந்தர வருமானம் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய வாரிசுக்கு ஒரு நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பேராவூரணி தொகுதியில் அம்புளி ஆற்றில், ஆதனூர்-நெல்லியடிப் பாலத்தினை இந்த நிதி ஆண்டில் நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

இந்த வாய்ப்பினைக் கொடுத்த நமது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (க) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உணவு அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நெடுஞ்சாலைத் துறையின் மானியக் கோரிக்கையை முன்னிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்துள்ளார்கள். சட்டமன்றப் பிளாசாவில் உணவு வழங்கப்படவுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் உணவருந்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 38—சாலைகளும், பாலங்களும்—தொடர்ச்சி.

### (ஆ) கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக, அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பதிலுரை வழங்குகிற வாய்ப்பைத் தந்த என்னுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைப்பிரசவ வேதனையிலே நிற்கிறேன். 1.30 மணிக்குள்ளாகச் சுகப்பிரசவம் ஆக வேண்டும். இல்லையென்றால், ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். சுகப் பிரசவமாக இந்தக் குழந்தை பிறக்க வேண்டும், சுகமான பிரசவமாக அமைய வேண்டுமென்று நான், பவள விழா காணும் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

தடம் புரண்ட தமிழர்களை எல்லாம் தலைநிமிர்ந்து நடக்க வைத்து, இனமானப் புலிகளாக்கிய தென்னாட்டு போஸ், தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, சரளைக் கற்களைச் சிற்பங்களாக்கிய பெருமையும், மரக்கட்டைகளை மகரயாழ்களாக ஆக்கிய பெருமையும், விறகுக் கட்டைகளைக்கூட வீணைகளாக்கிய பெருமையும் உண்டு. பூமிக்குள் புதைந்து கிடக்கிற இரும்புப் படிவங்களை வெட்டி எடுத்து, உருக்கி, எஃகு ஆக்கி, ஆயுதங்களாக வடித்தெடுப்பதைப்போல, எங்கோ சிதறிக் கிடந்த என்னைப் போன்றவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து உருக்கி, ஆயுதங்களாக வடித்து எடுத்தவர், தலைவர் கலைஞர் அவர்கள். அந்தப் பெருமைக்கு உரிய தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆயுதமாக, போர் வாளாக நான் இருக்கிறேன் என்ற பெருமை மட்டும்தான் எனக்கு உண்டு.

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1998 மே 27

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் Infrastructure facilities--அவசியம். இதை உணர்ந்துதான் நம்முடைய தமிழகத்தில் அடிப்படைக் கட்டமைப்புகளை விரிவுபடுத்திட, தலைவர் கலைஞர் அவர்கள், Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development (TACID) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்கள். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் சாலைப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து போன்றவைகள் முதலிடம் பெறுகின்றன. எனவேதான், தலைவர் கலைஞர் அவர்கள் சாலைப் போக்குவரத்துக்கு கட்டமைப்புகளை விரைந்து செயல்படுத்திட நெடுஞ்சாலைத் துறையைத் தனித் துறையாக்கி, அதற்கென்று தலைமைச் செயலகத்தில் ஒரு செயலாளரை 1-8-1996 முதல் உருவாக்கி, அதனைத் தொடர்ந்து தனியாக ஓர் அமைச்சரையும், 26-3-1998 முதல் நியமிக்க ஆணை பிறப்பித்து, அந்தப் பொறுப்பை எனக்களித்து, என்னைப் பெருமைப்படுத்தி உள்ளார்கள். எனவே, தமிழக முதல்வர், எனது இதய வேந்தர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியினை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எனது அரசியல் வாழ்வில் எனக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அளித்த பெருமைகளுக்கெல்லாம் கிரீடம் வைத்ததைப்போன்று, இந்தப் பெருமையை எனக்கு அளித்துள்ள வாய்ப்பு குறித்து இந்த மாமன்றத்தில் தெரியப்படுத்தி, மாமன்ற நிகழ்ச்சிக் குறிப்பில் ஏற்றுவது என்னுடைய கடமையாகும்.

இனி நெடுஞ்சாலைத் துறை குறித்த மானியக் கோரிக்கைபற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்துள்ள கருத்துகளின் அடிப்படையில் சில விளக்கங்களை மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். நல்ல கருத்துகளை, விளக்கமான, தெளிவான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, என்னுடைய முதல் பணியைத் தொடர்ந்து இருக்கிறேன். அவற்றை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றித் தருவேன் என்பதை மட்டும் இந்தநேரத்திலே நான் உறுதியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிற நேரத்தில் மட்டும்,



1998 மே 27] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.]

நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இந்தத் துறைக்குச் செலவழிக்கப்படுகிறது. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது மட்டும் எப்படி இவ்வளவு தொகை வருகிறது என்பது ஒருபுறம் இருக்க, இவ்வளவு தொகை செலவழித்து சாலைகள் அமைக்கப்படுகின்றன என்பது இன்னொரு வகையான ஆச்சரியம். கடந்தகால ஆட்சியில் நாம் இதைக் காண முடியவில்லை. எனவே அவர், நான் அறிவிப்பதற்கு முன்பே நிதிநிலை அறிக்கையில் இந்த நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் ஏராளமான திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள்; அதை நான் பட்டியலிட்டுச் சொன்னாலே போதும். சென்ற ஆண்டு ரூ. 83.49 கோடியில் 216 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன; இந்த ஆண்டில் 301 கிராமங்களுக்கு, 101.73 கோடி ரூபாயில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட உள்ளன. இதன்மூலம் ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் சாலை வசதி கிடைத்து விடும். அடுத்த கட்டமாக, 500 முதல் 1000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. என்ற அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இரண்டாவதாக, அதிக அளவில் போக்குவரத்து உள்ள 350 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகளை உலக வங்கி உதவியுடன் ரூ. 750 கோடியில் செயல்படுத்தும் திட்டத்தையும், 'ஹட்கோ' மற்றும் 'நபார்டு' பகுதி-2 திட்டம் ஆகியவற்றின் உதவியுடன் ரூ.360 கோடியில் 106 பாலங்கள் கட்டப்படும் என்ற திட்டத்தையும் அறிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்போது செயல்படத் துவங்கியிருக்கிறது. இந்தநேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1967 முதல் 1996 வரை, கடந்த 30 ஆண்டுகளில் சுமார் 195 பெரிய பாலங்கள், ரூ.171 கோடி அளவிலேதான் எடுத்துச் செய்யப்பட்டன. ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 106 பாலங்களை 360 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்குத் திட்டமிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

மூன்றாவதாக, 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாமண்டூரிலிருந்து திண்டிவனம் வரையில், தேசிய நெடுஞ்சாலையில் 55 கிலோ மீட்டர் தூரம் 4 வழிப்பாதை அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் இதுபற்றி இங்கே சொன்னார்கள். நிச்சயமாக 55

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1998 மே 27

கிலோ மீட்டர் தூரத்திற்கு 4 வழிப்பாதை மாமண்டூரிலிருந்து திண்டிவனம் வரையில் அமைக்கின்ற அந்தத் திட்டம் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

நான்காவதாக, 250 கோடி ரூபாயில், கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் வரையில் 61 கிலோ மீட்டர் தூரத்திற்கு 4 வழிப்பாதை அமைக்கின்ற திட்டத்தையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

ஐந்தாவதாக, 92 கோடி ரூபாயில் கோவையில் புறவழிச் சாலை அமைக்கின்ற திட்டம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல் 20 கோடி ரூபாயில் காரனோடையில் புதிய பாலம் கட்டுகிற பணி இன்னும் சில நாட்களில் துவங்க இருக்கின்றது. அதையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள்.

தாம்பரத்திலிருந்து மதுரவாயில் வரையில் 19 கிலோ மீட்டர் சென்னை புறவழிச்சாலை 43 கோடி ரூபாயில் அமைப்பதற்கான திட்டம் இப்போது நடைமுறையில் இருக்கிறது. விரைவிலே அந்த வேலையும் துவங்கும். இதையும் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதைப்போலவே, மதுரையிலே புறவழிச்சாலை அமைப்பதற்கு 36 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, இரண்டு வாரங்களுக்கு முன்னாலேதான் அந்தப் பணியை நானும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களும் துவக்கி வைத்தோம் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், கரூர் நகரில், அமராவதி ஆற்றில் 12 கோடி ரூபாயில் பாலம் கட்டும் பணியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலச் சாலைகள் பராமரிப்புக்கு சென்ற ஆண்டு 228 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். இந்த ஆண்டு 254 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் அவர்கள், தனக்குப் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்று சொல்லி,



1998 மே 27] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

என்னிடத்திலே ஒரு சில கோரிக்கைகளைத் தந்தார்கள். அவர்கள் அந்தக் கோரிக்கையிலே, சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளை இரு வழிச் சாலையாக, 4 வழிச் சாலையாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சென்னை மாநகரத்தை நோக்கி வருகின்ற மாநிலச் சாலைகளையும், அவற்றை இணைக்கின்ற குறுக்குச் சாலைகளையும் சுமார் 50 கிலோ மீட்டர் அரைவிட்டப் பரப்பிற்குள் ரேடியல் ரோட்ஸ், தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு விரிவாக்கி வலுப்படுத்துவதற்காக ஹட்கோ நிறுவனத்திடமிருந்து சுமார் 213 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்று, சுமார் 252 கிலோ மீட்டர் தூரமுள்ள 8 சாலைகளை மேம்படுத்த மாபெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இதிலே சென்னை-மகாபலிபுரம் சாலை, வாலாஜாபாத்–முடிச்சூர்–தாம்பரம்–மேடவாக்கம் சாலை, சென்னை வண்டலூர்–கேளம்பாக்கம் சாலை; செங்குன்றம், ஆவடி, பூந்தமல்லி, குன்றத்தூர், பல்லாவரம் ஆகிய இந்தப் பகுதிகளை இணைக்கின்ற சாலை; அதைப்போலவே கோடம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சாலை; புதுவாயில், பெரியபாளையம், தாமரைப்பாக்கம், திண்ணனூர், கொரட்டூர் சாலை; செங்குன்றம் திருவள்ளூர் சாலை; இந்தச் சாலைகள் எல்லாம் ரேடியல் ரோட்ஸ் என்ற திட்டத்திலே செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த கட்டமாக மதுரை மாநகருக்கு 25 கிலோ மீட்டர் அரைவிட்ட பரப்பிற்குள், ரேடியல் சாலைகள் அமைப்பதற்கும் சுமார் 150 கோடி ரூபாய் செலவில் 60 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்துவதற்கான திட்டமும் இப்போது பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிற காலத்திலே எல்லாம் ஏராளமாக நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், 1991-92 ஆம் ஆண்டு சாலை மேம்பாட்டிற்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 163.91 கோடி. ஆனால் 1997-98-ல் ரூ. 503.39 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது,

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1998 மே 27

1998-99 ஆம் ஆண்டிற்கு 671.59 கோடி ரூபாய் சாலை மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றபின் தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்தி, சுமார் 385 கோடிக்கு 14 திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுக்கு, இந்த மாத ஆரம்பத்திலே அனுமதிக்காக அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு இந்தத் திட்டங்களுக்கு அனுமதியளித்தால், தேசிய நெடுஞ்சாலைகளில் எல்லாப் பகுதிகளிலும் கணிசமான அளவிற்குப் பணிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த டெண்டர் விடுவதிலே 5 சதவீதம் குறைவாக இருக்கவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள், அதனால் தரம் குறைகிறது என்றுகூட பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தரம் குறையாமல் பார்த்துக்கொள்கிற பணியை எங்களுடைய அதிகாரிகள் பார்த்துக் கொள்கிறார்கள். ஆனால், இதிலே ஓர் உண்மையை நான் தெரிவிக்க வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் 3 ஆயிரம் பணிகள் ஒப்புவிக்கப்பட்டு, அதன்மூலம் சுமார் 34 கோடி ரூபாய், இந்த ஒப்பந்தப்புள்ளி கோருவதிலேமட்டும், அரசாங்கத்திற்கு சேமிப்பாகக் கிடைத்திருக்கிறது. கடந்த ஆட்சியில் 20 சதவீதம், 25 சதவீதம் என்று மதிப்பீட்டிற்கு அதிகமாக வைத்துத்தான் கொடுத்தார்கள். அதிலே நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம். ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்கள் பொறுப்பேற்று இருந்த அந்தக் காலகட்டத்தில் ரூ. 34 கோடி தமிழ்நாடு அரசுக்கு சேமிப்பாகக் கிடைத்திருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நிறைய கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற கோரிக்கைகளை எல்லாம் நான் நிச்சயமாகக் கவனிப்பேன் என்ற



1998 மே 27] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.]

உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பாலம் கேட்டிருக்கிறார்கள். அது நபார்டு திட்டத்திலே சேர்க்கப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள், சிவகாசி-கழுகுமலை சாலை கேட்டிருக்கிறார்கள். அதிலே ஏற்கெனவே 3 பாலங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 106 பாலங்களிலே 3 பாலங்கள் அந்தச் சாலையிலேதான் வருகின்றன. அத்தோடு இணைத்து ஹட்கோ திட்டத்தின் மூலமாக அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கும் இங்கே நான் அவருக்கு உறுதியளிக்கிறேன்.

அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே வேறுபல உறுப்பினர்களும் என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். ஒவ்வொருவர் பெயரையும் சொல்லவில்லை என்று வருத்தப்பட வேண்டாம். எனவே, என்னுடைய இறுதிப் பகுதியாக சில அறிவிப்புகளை இங்கே நான் தெரிவித்துவிட்டால் என்னுடைய கடமை முடியும் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, நான் சென்னையிலேயிருந்து துவங்கவேண்டும். நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், இரவு பகலாக இந்த சென்னை மாநகரத்தை சிங்காரச் சென்னையாக மாற்றுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் 1996 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை வெளியிட்டபோது, அந்த அறிக்கையிலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறது. உடனுக்குடன் போதிய கவனம் செலுத்தாத காரணத்தால் அமைதியாக இருந்த சென்னை மாநகரம், போக்குவரத்து நெருக்கடி மிகுந்து அலங்கோல நகரமாகிவிட்டது. இதனை மாற்றியமைக்க ஒரு வல்லுநர் குழு அமைத்து, உடனடியாக சீராக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட அந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்காக இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஓர் அறிக்கை இதுகுறித்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை சி.எம்.டி.ஏ. மூலமாக RITES—Rail India Technical & Economic Services, Pallavan Transport Consultancy Services Limited and Kirloskar

Consuitancy Limited என்ற மூன்று நிறுவனங்களும் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டபிறகு டாக்டர் சீனிவாசன் அவர்களுடைய தலைமையில் இன்னொரு கமிட்டியை நியமித்தார்கள். இரண்டு குழுக்களும் இந்த அறிக்கையைத் தந்திருக்கின்றது. இந்த இரண்டு அறிக்கைகளையும் உடனடியாக 6 வார காலத்திற்குள்ளாகப் பரிசீலித்து அரசுக்கு ஆலோசனை சொல்ல வேண்டுமென்று ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தக் குழுவில் 'ஹோம் செக்கரட்டரி'- உள்துறைச் செயலாளர்–இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியிருக்கிறார்கள். அதைப் போலவே, மாநகராட்சியின் மூலமாக ஓர் உறுப்பினர் இருக்க வேண்டும். அதைப்போல நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, இப்படிப் பல்வேறு துறைகளின் சார்பில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவிற்கே அதிகாரம் தரப்பட்டு, வேறு யாராவது எக்ஸ்பர்ட்ஸ். . . (குறுக்கீடு) உள் துறைச் செயலாளரைச் சொன்ன காரணத்தினால் காவல் துறையை விட்டுவிட்டேன். எனவே, காவல் துறையின் சார்பிலே ஓர் உறுப்பினர் இருப்பார். அந்த உறுப்பினர்கள் தேவைப்பட்டால் வேறு எக்ஸ்பர்ட்டுகளை அவர்களே நியமித்துக்கொள்வதற்கும் அந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் குழு மற்ற குழுக்களைப்போல அல்ல. 6 வார காலம், அதிகபட்சம் போனால் 8 வார காலத்திற்குள்ளாக- இரண்டு மாதத்திற்குள்ளாக– அரசுக்கு அறிக்கை தர வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, சென்னை மாநகரத்திற்கு இன்னொன்று. அண்ணா சாலையை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டின் தொடக்கத்திலேயே நமது மாநில அரசு அண்ணா சாலை, (முத்துசாமி பாலத்திலிருந்து தாம்பரம் வரையில், சுமார் 28 கிலோ மீட்டர் நீளத்திற்கு சிமென்டாலான கான்கிரீட் சாலை அமைக்கப்படும் என அறிவித்திருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனைத் தொடர்ந்து இந்தச் சாலை அமைக்கும் பணிக்கு ஆய்வு அறிக்கை தயார் செய்யவும், எவ்வளவு மதிப்பீடு ஆகும் என்பதைக் கணிக்கவும் 'கடியால் இன்ஜினியரிங் குரூப்' என்ற நிறுவனத்திடத்திலே ஒப்படைத்து, அந்த நிறுவனம் ஜூலை இறுதிக்குள்ளாக அறிக்கை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.





திட்டம் தயாரிக்க, ஒத்துழைப்பு நல்க ஓர் ஒருங்கிணைப்புக் கமிட்டி விரைவில் அமைக்கப்பட உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்து, தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்பின் நீளம் 1,42,560 கிலோ மீட்டராக உயர்ந்திருக்கிறது. அதைப்போலவே, போக்குவரத்து நெரிசலும் அதிகமாக இருக்கிறது. இதனால், வாகனங்களின் செரிவு சாலைகளில் அதிகமாகக் காணப்படுவதால், சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்த எண்ணற்ற திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. இருப்பினும், பெருத்த முதலீடு தேவைப்படுவதால், அரசின் வரவு செலவுத் திட்டத்திற்குள் தேவையான நிதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைந்துவிடுகின்றன. எனவே, தனியார் துறையிலிருந்து நிதி உதவியைப் பெற்று கட்டுதல், இயக்குதல், பின் ஒப்புவித்தல்—built, operate and transfer–முறையில் செயல்படுத்திட மைய அரசு ஊக்கம் அளித்து வருகிறது. எனவே, நமது மாநில அரசும் இம்முறையைப் பின்பற்றி பல்வேறு சாலைப் பணித் திட்டங்களைச் செயல்படுத்திட முனைந்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டுதான் உள்கட்டமைப்பு வசதிகளில் ஒன்றான சாலை வசதிகளைப் பெருமளவில் பெருக்குவதற்கு வழிவகுப்பதுடன், 1851 ஆம் ஆண்டு இந்திய சுங்க வரிச் சட்டத்தைப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்து, 18-7-1997 அன்று இந்தத் திருத்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது நம்முடைய அரசு. எனவே, பல்வேறு தனியார் நிறுவனங்கள் சாலைப் பணிகளிலும், பாலப் பணிகளிலும் தங்களது நிதி ஆதாரங்களை முதலீடு செய்திட ஆர்வம் காட்டி வருகின்றன. Infrastructure Leasing and Financial Services என்னும் அந்த உள்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி ஆதாரச் சேவை நிறுவனம், வர்த்தக அடிப்படையில் நிதி ஆதாரங்களைத் திரட்டி போக்குவரத்துச் செரிவு மிகுந்த முதல்கட்ட 4 சாலைகளைத் தெரிந்தெடுத்து, கட்டுதல், இயக்குதல், பின் ஒப்புவித்தல் முறையில் செயல்படுத்திட இசைவு தெரிவித்துள்ளது இதன் அடிப்படையில் மொத்தம் 512 கிலோ மீட்டர் அளவுக்கு மதுரை-தூத்துக்குடி சாலை, திரு. பெரியசாமி அவர்கள் கேட்டார்கள் — 131.60 கிலோ மீட்டர்; கோவை-திண்டுக்கல் சாலை; 158.40 கிலோ மீட்டர், தோப்பூர்-மேட்டூர்–பவானி சாலை, 80.60 கிலோ மீட்டர்; திருச்செந்தூர்-பாளையங்கோட்டை சாலை மற்றும் 131.40 கிலோ மீட்டர், திருநெல்வேலி-செங்கோட்டை சாலை ஆகியவற்றை மேம்பாடு செய்யும் பணியினை மேற்கொள்ள மாநில அரசுடன் ஒரு கொள்கை உடன்பாடு

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.] [1998 மே 27

செய்துகொள்ள விரைவில் ஒப்புதல் அளிக்கப்படவிருக்கிறது. இந்த நிறுவனம் மேற்கூறிய சாலைகளைத் தனியார் நிதி முதலீட்டின் அடிப்படையில் மேம்படுத்தி அதற்காகும் செலவுத் தொகையை வட்டியுடன் கணக்கிட்டு, சுங்கவரி மூலம் செலவை ஈடுகட்ட திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே மாநிலச் சாலைகள். நம்முடைய தமிழகத்திலுள்ள 15 மாநில நெடுஞ்சாலைகளுடைய மொத்த நீளம் 1969 கிலோ மீட்டர். இதில் 348 கிலோ மீட்டர் மொத்த நீளமுள்ள இரண்டு மாநில நெடுஞ்சாலைகளை மைய அரசு தேசிய நெடுஞ்சாலைகளாக 9-2-1998 அன்று மாற்றி அறிவித்திருக்கிறது. தற்போது 13 மாநில நெடுஞ் சாலைகளின் மொத்த நீளம் 1,621 கிலோ மீட்டராகக் குறைந்துள்ளது. கடந்த 47 வருடங்களாக மாநில நெடுஞ்சாலைகளின் வகைப்பாட்டில் கூடுதலாக மாநில நெடுஞ்சாலைகள் சேர்க்கப்படாததால் நம்முடைய மாநில நெடுஞ்சாலைகளின் அடர்த்தியும்கூட மிகக் குறைந்த விழுக்காடே உள்ளது. எனவே, இந்தக் குறைபாட்டை ஈடு செய்யும் வகையில் 2001 ஆம் ஆண்டு முடிவில் செயல்படுத்த வேண்டிய சாலை வளர்ச்சித் திட்டத்தில், தமிழகத்தில் 5,200 கிலோ மீட்டர் மாநில சாலைகள் இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் 87 பெரிய மாவட்டச் சாலைகளை 32 மாநிலச் சாலைகளாகத் தொகுத்து மாநில நெடுஞ்சாலை வகைப்பாட்டில் மொத்தம் 3,328.80 கிலோ மீட்டர் நீள நெடுஞ்சாலைகளைக் கூடுதலாகச் சேர்த்திட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். இதனால் மாநில நெடுஞ்சாலைகளினுடைய மொத்த நீளம் 4,949.80 கிலோ மீட்டராக அதிகரிக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள் சென்ற முறை பேசுகிறபோது இராமநாதபுரம் மாவட்டத்தில் மாநிலச் சாலைகளே இல்லை என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதையும் நான கவனத்திலே எடுத்துக்கொண்டு, அவர்களுடைய மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஏறத்தாழ 500 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் மாநிலச் சாலைகளாக மாறும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசு தமிழகத்திலுள்ள பல்வேறு சாலை, வலைப் பின்னல்களின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதில் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் தரமாக்கப்பட்ட சாலைகள் தொகுப்பு அளவில் குறைந்து, குறைந்தது ஆயிரம் கிலோ மீட்டர் நீள சாலைகள் கூடிக் கொண்டே வருகிறது.



1998 மே 27] [திரு. பசும்பொன் தா கிருட்டிணன்]

மேலும் நபார்டு, ஹட்கோ, உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் வசதி பெற்று கிராமச் சாலைகளிலிருந்து மாநில நெடுஞ்சாலைகள்வரை சாலைகளை மேம்படுத்தும் பணியும், பாலங்கள் கட்டும் பணியும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. எனவே, துறையின் நிர்வாகத் திறனை மேம்படுத்தி பணிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதில் தீவிரமான கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டியுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிப் பிரிவில் சர்க்கிள்—இப்போது 4 பிரிவுகள்தான் இருக்கின்றன.—அதை 7 வட்டங்களாகப் பிரித்து சாலைப் பணிகளை மேலும் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஏற்கெனவே உள்ள சென்னை, கோவை, திருநெல்வேலி மற்றும் திருச்சி வட்டங்களைத் தவிர கூடுதலாக 3 வட்டங்களை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நேரம் 1-30 மணி, கில்லட்டின் நேரம். எனவே, விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 38—சாலைகளும் பாலங்களும்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38-சாலைகளும் பாலங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன். திரு. சி. ஞானசேகரன். இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன். இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.



**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சாலைகளும், பாலங்களும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.380,24,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.



**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 476,83,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ங) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (க) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ச) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1988-89 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

### Message

"In pursuance of clause (1) of Article 205, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1988-89 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

## 9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1988-89 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1988-89 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-5-1998 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1988-89 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## நிறைவேற்றப்பெற்ற 1988-89-ஆம் ஆண்டிற்கான 'மிகைச் செலவிற்கான' மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு— | | |
| 17 | கல்வி | 2,04,45,817 |
| 18 | மருத்துவம் | 1,80,76,394 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 5,49,90,675 |
| 20 | வேளாண்மை | 1,53,27,004 |
| 37 | பொதுப் பணிகள்-கட்டிடங்கள் | 71,78,431 |
| 39. | சாலைகளும் பாலங்களும் | 72,85,828 |
| | மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு. | 12,33,04,149 |
| | பெருமொத்தம் | **12,33,04,149** |



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஞ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 1-35

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ங) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1998 மே 27

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-5-1998) காலை 9-30 மணிக்குக்கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

164. வணிக வரிகள் துறையின் செயலாக்கப் பிரிவின், வணிக வரி உதவி அதிகாரி பதவித் தரத்திற்குக் குறையாமலுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் அதிகாரமளிப்பது தொடர்பாக, வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 2-9-1997ஆம் நாளிட்ட 371 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

238. மனிதர்களால் தயாரிக்கப்படும் செயற்கை இழை நார்கள் முதலியவற்றின் மீதான வரி வீதத்தைக் குறைத்தும் மற்றும் வணி வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 5-3-1997ஆம் நாளிட்ட II(1)/வ.வ.அ.நி./22(அ-11)/97 ஆம் எண் அறிவிக்கையில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 7-4-1998 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

239. மானியக் கோரிக்கை எண் 38-சாலைகளும் பாலங்களும் மற்றும் மானியக் கோரிக்கை எண் 56 - சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)



1998 மே 27]

240. நெடுஞ்சாலைத் துறை பற்றிய நிதி நிலை செயலாக்கச் சாதனைகள், 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

241. 1988-89 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், (தமிழ், ஆங்கிலம்)

242. 1988-89 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

243. 1988-89 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

244. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை, 1997-98.

245. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி ஆறாவது அறிக்கை, 1997-98.

246. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி ஏழாவது அறிக்கை, 1997-98.

247. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை, 1997-98.

# இணைப்பு

(354 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 38
## சாலைகளும், பாலங்களும்
## மற்றும்
## மானியக் கோரிக்கை எண் 56
## சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 1998-99
## நெடுஞ்சாலைத் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு

### I. தொடக்க உரை

பெருவளம் தருதற்குரிய பொருளாதார கூட்டு முயற்சியையும், சமுதாய ஒருமைப்பாட்டையும் உயர்த்திட பயனிறைவுடைய பெருஞ்சாலைத் தொடர்புகள் மற்றும் உயிராதாரமான உள்ளமைப்புகள் போன்ற வசதிகள் இன்றியமையாததாகும். இதைக்கருத்தில் கொண்டு, சாலைப் பணிகளுக்கென நெடுஞ்சாலைத் துறை எனும் தனியொரு துறை 1946 ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1-8-1996 முதல் மாநில தலைமைச் செயலகத்திலும் நெடுஞ்சாலைத் துறை எனும் தனித் துறை உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சாலைகளின் தரத்துக்கும், நீடித்து உழைக்கக்கூடிய தன்மைக்கும் மிகுந்த முக்கியத்துவம் தந்து, முனைப்புடனும் பயனளிக்கத்தக்க வகையிலும் சாலை மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்திட, 26-3-1998 முதல் நெடுஞ்சாலைத் துறைக்கென ஒரு தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்வேறு மட்டங்களிலும் தொழில் நுணுக்கம் தெரிந்த பொறியியல் வல்லுநர்கள் வருங்கால பயனுக்கென தொகுத்து வைக்கப்பட்டுள்ள தொழில் நுணுக்க விவரங்கள், சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டும் பணியில் பணிவிதிகளை உருவாக்கியதில் முன்னோடித் தன்மை ஆகிய அனைத்துப் பெருமைகளையும் உள்ளடக்கிய நெடுஞ்சாலை துறை பொதுமக்களின் நலன்களைக் கருதியும் நாட்டின் பல பகுதிகளின் முன்னேற்றம் கருதியும், சரக்குகளின் இடப்பெயர்ச்சிக்கு உகந்த நல்ல சாலைகள் அமைத்தல், தடங்கலற்ற பாதுகாப்பான பயணங்கள் மற்றும்

துரிதமான தொடர்புகள் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக எப்பொழுதும் கடினமாக உழைத்து வருகிறது. செயல் பயன் நாட்டமுடன் பணிகளைச் செய்து வரும் நெடுஞ்சாலைத் துறையின் இவ்வணுகுமுறையால் உற்பத்திப்பகுதிகளில் உற்பத்தியும், நுகர்வோர் நிலைகளில் சமமான பகிர்மானமும் உருவாகி வருகிறது. சுருங்கக்கூறின், அமைதியையும், வளத்தையும் நோக்கி நடைபோடும் நமது நாட்டிற்கு நெடுஞ்சாலைத் துறை வளர்ச்சிப் பாதையையே உருவாக்கித் தருகிறது.

இப்பொழுதெல்லாம் பெருஞ்செலவில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதின் மூலம் அரசு நிதித் தொகுப்பில் பற்றாக்குறை ஏற்பட்டு வருவதால் மக்கள் நலன் கருதி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணித்திட்டங்களுக்கு ஒருவருக்கொருவர் திருப்திகரமாகப் புரிந்து கொள்ளும் வகையில் தனியார் முதலீட்டை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டாயத் தேவை உருவாகி உள்ளது. மைய அரசு இந்த அணுகுமுறையைத் தூண்டி வருகிறது. தமிழ்நாடு அரசும் இந்த அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. இந்த உளஅமைவுக் கருத்தினை செயல்படுத்துவதற்கேற்ற இசைவான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது. எனவேதான், பல்வேறு தனியார் முதலீட்டாளர்கள் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்ட முன்வந்துள்ளனர். இதைக் கருத்தில் கொண்டுதான், நெடுஞ்சாலைத் துறையினர் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுமானப் பணிகளில் தனியாரும் பங்குபெறும் வகையில், தமிழ்நாடு அரசு 1851 ஆம் ஆண்டு இந்திய சுங்கவரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது. எல்லா வழிகளிலும் தனியார் முதலீட்டாளர்களுக்கு உதவிடும் வகையில், நெடுஞ்சாலைத் துறையானது தனது நேசக்கரங்களை நீட்டுவதோடு அவர்களின் பெரும் முதலீட்டை வட்டியுடன் வரையறுக்கப்பட்ட கால அளவில் சுங்கவரி வசூல் மூலம் மீண்டும் திரும்பப் பெற்றிடலாம் என உறுதி செய்கிறது.

## II. கொள்கை வரைமுறைகள்

நெடுஞ்சாலைத் துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள சாலைவலைப்பின்னலில் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல், புதுப்பித்தல், பராமரித்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இந்த சாலைவலைப்பின்னலில் பாலங்கள், தரைப்பாலங்கள், கால்வாய்ப்பாலங்கள், மேம்பாலச்சாலைகள் மற்றும் கீழ்ப்பாலச்சாலைகள் ஆகியவையும் அடங்கும்.



சாலைவலைப்பின்னலின் வகைப்பாடுகள் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன:

(அ) தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புற வெளிப்பகுதி)

(ஆ) தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்)

(இ) மாநில நெடுஞ்சாலைகள்

(ஈ) பெரிய மாவட்டச் சாலைகள்

(உ) இதர மாவட்டச் சாலைகள்

(ஊ) இதர சாலைகள்

(எ) பாலங்கள், தரைப்பாலங்கள், கால்வாய்ப்பாலங்கள். மேம்பாலச்சாலைகள் மற்றும் கீழ்ப்பாலச்சாலைகள்

மேற்கூறிய ஒவ்வொரு வகைப்பாட்டுக்கும் கடைபிடிக்கப்படும் நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### (அ) தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புற வெளிப்பகுதி):

பெரும் துறைமுகங்கள், அண்டை நாட்டின் நெடுஞ்சாலைகள், மாநில தலைநகரங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவைகளை இணைக்கும் வண்ணம் நாட்டின் நீளவாக்கிலும் அகலவாக்கிலும் அமைக்கப்பட்டுள்ள மிக முக்கியமான பெருஞ்சாலைகள் இதில் அடங்கும்.

நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டு வருவதால், தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெருகிவருதைக் கருத்தில் கொண்டு, மைய அரசு இப்போக்குவரத்தின் பெருக்கத்திற்குச் சமமாக தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் தடைகளற்ற துரிதமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக நவீன தொழில் நுட்பங்களையும் மேலாண் தொழில் நுணுக்கங்களையும் கடைபிடித்து தேவைப்படும் இடங்களில் இடவசதிக்கேற்றப்படி ஓடுதளங்களை அகலப்படுத்துதல். போக்குவரத்துத் தரங்களைப் பிரித்தனுப்புதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், தொடர்வண்டி இருப்புப்பாதைக் கடவுகளில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசும் இப்பணிகளின் செயலாக்கத்திற்கு உதவிடும் வகையில், தேவையான

அடிப்படை விவரங்களை மைய அரசுக்குத் தருவதோடு தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் இடவசதிக்கேற்றபடி நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்திட ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்தினைப் பெருக்கி அதன் மூலம் நாட்டின் ஒருமித்த மேம்பாட்டை அடையும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி தூண்டுகோலாக இருந்து வருகிறது.

**(ஆ) தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்):**

மக்கள் தொகை 20,000-க்கு மேல் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகள் "தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புறப் பகுதிகளாக" வகைப்படுத்தப் படுகின்றன. மேற்கூறிய நகர்ப்புற தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளும் "தேசிய நெடுஞ்சாலைகள் கட்டமைப்பிலேயே" உள்ளடங்கும் என மைய அரசு தற்போது அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில், இந்த நகர்ப்புற தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளிலான சாலை மேம்பாட்டுப் பணிகள் இனிமேல் மைய அரசாலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமாதலால் 1-4-98-க்குப் பிறகு இப்பணிகளுக்கான செலவினத்தையும் மைய அரசே ஏற்கும.

**(இ) மாநில நெடுஞ்சாலைகள்:**

மாவட்டத் தலைமை இடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், மாநிலத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள நெடுஞ்சாலைகள் ஆகியவைகளை இணைக்கும் முக்கியமான நெடுஞ்சாலைகள் இதில் அடங்கும். மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமான 1969 கி.மீ.களில் 1776 கி.மீ. நீளச்சாலைகள் இருவழித்தடமாகவோ அல்லது பலவழித்தடமாகவோ உள்ளன. ஒரு வழித்தடமாக மீதமுள்ள 193 கி.மீ. சாலைப் பகுதிகளை மாநில அரசு இருவழித்தடமாகவோ அல்லது பலவழித்தடமாகவோ அகலப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

**(ஈ) பெரிய மாவட்டச்சாலைகள்:**

மாவட்டத்தின் உற்பத்தி மையங்கள் மற்றும் சந்தை மையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள் இந்த மையங்களை ஒன்றோடொன்று இணைக்கும் சாலைகள் மற்றும் முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணையும் சாலைகள் ஆகியவை இதில்



அடங்கும். பெரிய மாவட்டச் சாலைகளின் மொத்த நீளமான 14016 கி.மீ. சாலைகளில் 8443 கி.மீ. ஒருவழித்தடமாகவும் 5573 கி.மீ. இருவழித்தடமாகவோ அல்லது பலவழித்தடமாகவோ உள்ளன. பெரிய மாவட்டச் சாலைகள் மாவட்ட அளவில் தடையின்றிப் பாயும் வள ஆதாரங்களை மேம்படுத்த பெரிதும் உதவுவதால், தமிழ்நாடு அரசு ஒருவழித்தடமாக உள்ள பெரிய மாவட்டச் சாலைகளை இடவசதிக்கேற்றபடியும் நிதிநிலைமைக்கேற்றபடியும் படிப்படியாக இருவழித்தட அகலமான சாலைகளாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துவருகிறது.

**(உ) இதர மாவட்டச் சாலைகள்:**

கிராமப்புற உற்பத்தி மையங்களையும் சந்தை மையங்களையும் இணைக்கும் சாலைகள், வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்கள் மற்றும் இதர பெருஞ்சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். இன்றைய நிலைமையில் இதர மாவட்டச் சாலைகளின் மொத்த நீளமான 39786 கி.மீ.களில் மிகக் குறைந்த அளவேயான 780 கி.மீ. சாலைகள் மட்டும் இருவழித்தடமாகவோ அல்லது பலவழித் தடமாகவோ உள்ளன. கிராமப்புறப் பகுதிகளில் இச்சாலைகள் வளமான பொருளாதார மேம்பாட்டினைத் தூண்டுவதாக அமைந்திருப்பதால் தமிழ்நாடு அரசு இச்சாலைகளை அகலப்படுத்திடவும், மேம்படுத்திடவும் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறது. இதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெறுவதோடு அரசின் பங்காக குறிப்பிட்ட விழுக்காடு நிதி ஒதுக்கீடும் செய்து வருகிறது.

**(ஊ) இதர சாலைகள்:**

கிராமப்புறப் பகுதிகளையும் கூட்டுக் கிராமங்களையும் இணைக்கும் சாலைகள் மற்றும் அருகில் அமைந்துள்ள முக்கிய பெருஞ்சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். இவ்வகைச் சாலைகள் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் உள்ளனவாகும். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அல்லது ஊராட்சி மன்றங்களுக்கு இச்சாலைகளை மேம்பாடு செய்திட நெடுஞ்சாலைத் துறை தேவையான தொழில் நுணுக்க ஆலோசனைகளை வழங்கி வருகிறது. 500-க்கும் மேலான மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குச் சாலைத் தொடர்புகள் அமைத்துத் தரும் பணிகளையும் நெடுஞ்சாலைத் துறை செயல்படுத்துகிறது.

***(எ) பாலங்கள், தரைப்பாலங்கள், கால்வாய்ப்பாலங்கள், மேம்பாலச்சாலைகள் மற்றும் கீழ்ப்பாலச்சாலைகள்:***

சாலைகளின் நேர்ப்பாடுகளில் நீர் ஆதாரங்களோ, தொடர்வண்டிப்பாதைகளோ குறுக்கிடுவது இயற்கையான நேர்வு ஆகும். எனவே இந்த இடர்ப்பாடுகளை தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறை சாலையின் நேர்ப்பாட்டில் பாலங்கள், தரைப்பாலங்கள், கால்வாய்ப்பாலங்கள், மேம்பாலச்சாலைகள் மற்றும் கீழ்ப்பாலச் சாலைகள் ஆகியவற்றை இடவசதிக்கேற்றபடி கட்டும் பணியையும் செய்து வருகிறது. அரசுச்சாலைகளில் பல்லாண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டுள்ள 3458 பாலங்கள் மிகவும் பழுதடைந்து திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அரசுச்சாலைகளில், ஒரு இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் கொண்ட இருப்புப் பாதை கடவுகட்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிதி வளம் மற்றும் பணிகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முன்னுரிமை அடிப்படையில், "இருப்புப் பாதை பணிகள் திட்டத்தில்" இப்பணிகள் சேர்க்கப்படுகின்றன. அணுகு சாலைகள் உட்பட இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும் மைய அரசின் இருப்புப் பாதைகள் அமைச்சகமும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மைய அரசின் இருப்புப் பாதை பாதுகாப்புப் பணிகள் நிதியிலிருந்து பணியாளர் நியமிக்கப்படாத இருப்புப் பாதை கடவுகளை பராமரித்தல், தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளை பராமரித்தல், தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக மாநில அரசுக்காகும் செலவினங்களை மாநில அரசு திரும்பப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து, எட்டு விழுக்காடு தொகை, தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல் மற்றும் பணியாளர் நியமிக்கப்படாத இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பணியாளரை நியமித்தல் முதலிய பணிகளுக்காக மாநில அரசுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்படுகின்றது.

இருப்புப் பாதை மேம்பாலம்/கீழ்ப்பாலம் கட்டுவதற்குத் தகுதியுடையனவான ஒரு இலட்சம் இரயில் ஊர்தி அலகிற்கு மேல்





உள்ள இருப்புப் பாதைக் கடவுகளின் எண்ணிக்கை 114 உள்ளன என்று மார்ச் 1998-ல் இருப்புப் பாதைகள் அமைச்சகம் தெரிவு செய்துள்ளது.

## III. திட்டஉறை வடிவுகள்

கொள்கை வரைமுறைப் பகுதியில் விளக்கப்பட்ட நோக்கத்தினை அடையும் பொருட்டு கீழ்க்காணும் திட்டங்களை 1998-99-ல் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 1. தேசிய நெடுஞ்சாலைகள்

**தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புற வெளிப்பகுதி):**

தமிழகத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 2002.464 கி.மீ. ஆகும். இதுதவிர 1997-98 ஆம் ஆண்டில் மைய அரசு 559.90 கி.மீ. நீளமுள்ள மாநில அரசின் நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவித்துள்ளது. மைய அரசின் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி இச்சாலைகள்ள நல்லமுறையில் தேவைப்படும் இடங்களில் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

1998-99 ஆண்டில் இத்திட்டத்திற்கான மானியக் கோரிக்கை ரூ. 45.00 கோடி ஆகும்.

***புக்கத் துரையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண்-45-ல் நான்கு வழித்தட அகலச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்:***

மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகம், புக்கத் துரையிலிருந்து திண்டிவனம் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் கி.மீ. 67/0 முதல் கி.மீ. 122/0 வரை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணியை மேற்கொள்ள இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்துள்ளது. இபபணியை "கட்டுதல்-இயக்குதல்-ஒப்படைத்தல்" (BOT) அடிப்படையில் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுவினால் பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தகுதிவாய்ந்த தொழில் முனைவோருக்கு இப்பணி ஜூன் 1998-ல் ஒப்படைக்கப்படும்

என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நான்கு வழித்தட அகலமாக்கும் பணி தடைகளின்றி தொடர்ந்து நடைபெறும் வகையில் இச்சாலையோரங்களிலுள்ள மரங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், மின்/தொலைபேசிக் கம்பங்கள், குடிநீர்/வடிகால் குழாய்களை இடம் மாற்றியமைத்தல் மற்றும் நான்கு வழித்தட அகலமாக்கும் பணிக்குத் தேவையான நிலம் கையகப்படுத்துதல் முதலிய பணிகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுவினரால் ரூ. 85.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தேசிய நெடுஞ்சாலை எண்-45-ல் கி.மீ. 122/0 முதல் கி.மீ. 325/0 வரையுள்ள சாலையை நான்கு வழித்தடமாக அகலமாக்கும் பணியை உலக வங்கியின் 3 ஆவது கடனுதவியுடன் செய்வதற்கான தொடர் நடவடிக்கைகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழு மேற்கொண்டு வருகிறது.

*தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்):*

தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்புறப் பகுதிகளின் மொத்த நீளம் 125.86 கி.மீ. ஆகும். தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புறப் பகுதிகளின் தரத்தை நிலைநிறுத்தும் பொருட்டு, இச்சாலைகளின் பராமரிப்புக்கென மைய அரசு வழங்கும் தொகையையும் சேர்த்து மாநில அரசின் பகுதி-2 திட்டப் பணிகளின்கீழ் இச்சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாகச் செயலாக்கப்படுகின்றன.

**2. மாநில நெடுஞ்சாலைகள்**

இன்றைய நிலவரப்படி மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1969 கி.மீ. ஆகும். 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 457.00 இலட்சம் மதிப்பீட்டிலான 6 பாலங்கள் அமைக்கும் பணிகளும், 8 சாலை மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளுக்கென 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 285.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. பெரிய மாவட்டச் சாலைகள்**

இன்றைய நிலவரப்படி பெரிய மாவட்டச் சாலைகளின் மொத்த நீளம் 14,016 கி.மீ. ஆகும். 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ், ரூ.335.00 இலட்சம் மொத்த மதிப்பிலான ஒரு பாலம் அமைக்கும்



பணியும், 6 சாலை மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளுக்கென 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 323.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. இதர மாவட்டச் சாலைகள்**

இன்றைய நிலவரப்படி, இதர மாவட்டச் சாலைகளின் மொத்த நீளம் 39,786 கி.மீ. ஆகும். 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ், ரூ. 117.00 இலட்சம் மொத்த மதிப்பீட்டிலான 3 பாலங்கள் அமைக்கும் பணிகளும், 2 சாலை மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மதிப்பீட்டில் ரூ.61.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. இதர சாலைகள்**

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் ரூ. 50,000-க்கு மேல் மதிப்புடைய பெரிய/சிறிய பாலங்கள், தாம்போகிகள், கால்வாய்ப் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப்பணிகளின் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்திட எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 700.00 இலட்சம் மதிப்பீட்டில், கடலூரில், சிங்காரத் தோப்பு அருகே உப்பனாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணியை மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 77.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. பாலங்கள்**

*அரசுச் சாலைகளில் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்:*

1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், ரூ. 447.00 இலட்சம் மொத்த மதிப்பிலான 17 பாலங்கள் திரும்பக் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 220.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்:**

செயின்ட்தாமஸ்மலை தொடர்வண்டி நிலையம் அருகில், இருப்புப் பாதை கீழ்ப்பாலம் கட்டும் பணிக்காக, நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிக்கு ரூ.2 .50 கோடிக்கு மதிப்பீடு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டதும் இப்பணி செயலாக்கப்படும்.

அரக்கோணத்தில், ரூ. 10.175 கோடி மதிப்பீட்டில் இருப்புப் பாதை மேம்பாலம் கட்டும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது. திண்டுக்கல் நகரில் ரூ. 3.52 கோடி மதிப்பீட்டில் இருப்புப் பாதை மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருவாரூர் நகரில் ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் இருப்புப் பாதை கீழ்ப்பாலம் கட்டும் பணிக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப் பணிக்காகும் முழுச் செலவினத்தையும் தமிழ்நாடு மாநில அரசே ஏற்கும்.

திண்டிவனத்தில் பாண்டிசேரி-கிருட்டிணகிரி சாலையின் குறுக்கே தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக ஒரு இரயில்வே மேம்பாலமும்,. தேசிய நெடுஞ்சாலை எண்-45 சந்திப்பில் இணைக்கும் பரிமாற்றப்பாலமும் ரூ.19.89 கோடி செலவில் "பொருளாதார மற்றும் பண்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்" கீழ் மாநில அரசு மற்றும் மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து மற்றும் இருப்புப் பாதை அமைச்சகங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது. இப்பணி நல்ல முன்னேற்றத்திலுள்ளது. விழுப்புரத்தில் கீழ்ப்பெரும்பாக்கம் அருகில், ரூ. 6.50 கோடி மதிப்பீட்டில் இருப்புப் பாதை கீழ்ப்பாலம் கட்டும் பணி 1997-98 ஆம் ஆண்டு இருப்புப் பாதைகள் அமைச்சக, பணிகள் திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. திருப்பாதிரிப்புலியூர் தொடர்வண்டி நிலையம் அருகில், கடலூர்-திருக்கோவிலூர்-அணைக்கட்டு சாலையில், இருப்புப் பாதை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ஒப்புதலளிக்கப்பட்டு, இப்பணிக்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்திட ரூ. 1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



விருதுநகர் மற்றும் சங்கரலிங்கபுரம் தொடர்வண்டி நிலையங்களிடையே ரூ. 7.40 கோடி மதிப்பீட்டில் இருப்புப் பாதை மேம்பாலம் கட்டும் பணிக்கு ஒப்புதலளிக்கப்பட்டு, இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. சிதம்பரம் தொடர்வண்டி நிலையம் அருகில் ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் இருப்புப் பாதை மேம்பாலம் கட்டும் பணியை 1996-97 ஆம் ஆண்டில் இருப்புப் பாதைகள் கட்டும் பணியை 1996-97 ஆம் ஆண்டில் இருப்புப் பாதைகள் அமைச்சகப் பணிகள் திட்டத்தில் மேற்கொள்ள மைய அரசு ஒப்புதலளித்துள்ளது. இப்பணி மாநில அரசின் ஒப்புதலுடன் 1998-99 ஆம் ஆண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1998-99 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்கென ரூ. 12.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் நபார்டு கடனுதவியுடன் பெரிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்துதல், மற்றும் அச்சாலைகளில் பாலங்கள் அமைத்தல் திரும்பக் கட்டுதல்:**

1997-98 ஆம் ஆண்டில், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி-2 ன் கீழ் மொத்த கடன்வசதியாக ரூ. 157.53 கோடி பெறப்பட்டு 2823 கி.மீ. நீளமுள்ள பெரிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளை உறுதிபடுத்தும் பணிகளும் அச்சாலைகளில் 8 பாலங்கள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையன்றி வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-3-ன் கீழும் மொத்த கடன் வசதியாக ரூ. 125.76 கோடி மொத்த மதிப்பீட்டிலான 366.58 கி.மீ. நீளமுள்ள பெரிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 53 பாலங்கள் அமைத்தல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்கென, ரூ. 130.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கழகத்தின் (ஹட்கோ கடனுதவியுடன் பெரிய மாவட்டச்சாலை/இதர மாவட்டச் சாலைகளில் பாலங்கள் அமைத்தல்/திரும்ப கட்டுதல், மற்றும்**

[1998 மே 27

### சென்னை நகரை வந்தடையும் அரைவிட்டச் சாலைகளை மேம்பாடு செய்தல்:

1997-98 ஆம் ஆண்டில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியுடன் ரூ.260.71 கோடி மதிப்பீட்டிலான 50 பாலங்கள் அமைத்தல்/திரும்பக் கட்டுதல் எனும் மிகப் பெருந்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன், மற்றொரு மிகப் பெருந்திட்டமான, சென்னை மாநகரை வந்தடையும் 210 கி.மீ. மொத்த நீளமுள்ள எட்டு அரைவிட்டச்சாலைகளை, ரூ. 212.54 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் திட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 50 பாலங்கள் கட்டும் திட்டத்தில், மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கான புலனாய்வு, வடிவமைப்பு, விரிவான மதிப்பீடுகள் தயாரித்தல், ஒப்பந்த ஆவணங்கள் தயாரித்தல், திட்டத்தை மதிப்பாய்வு செய்தல் முதலிய பணிகள் ஆலோசகர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான வடிவமைப்பு தயாரித்தல் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை தனித்தனியே ''சுழல்திறவுகோல்'' முறையில் (Turn-key) தெரிந்தெடுக்கப்பட்ட பெரிய கட்டுமான நிறுவனங்களைக் கொண்டு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 7. சிறப்புப் பகுதிகளில் சாலைகள்

#### புறவழிச் சாலைகள்

மாநகரங்கள் மற்றும் நகரங்களினூடே செல்லும் நேரடி ஊர்திப் போக்குவரத்துக்கள் மாநகரங்களிலும், நகரங்களிலும் நெரிசலை உருவாக்குகின்றது. எனவே ஊர்திகளின் இத்தகைய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச் சாலைகள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. புறவழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்த வேண்டியிருப்பதால், ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட வரைவில் புறவழிச்சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்துவதற்காக ரூ. 2.18 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கும்பகோணம், பழனி மற்றும் செய்யார் ஆகிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கும்பகோணம் புறவழிச் சாலை அமைக்கத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. பழனி மற்றும் செய்யார் புறவழிச் சாலைகள் அமைத்திடத் தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



1998 மே 27]

இத்திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அடையாள ஒதுக்கீடாக ஓராயிரம் ரூபாய்கள் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

### தொழிற்சாலைப் பகுதிகளில் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ரூ. 8.88 கோடி மொத்த மதிப்பிலான 69.75 கி.மீ. நீள அரசுச் சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில், மணலி-மாத்தூர் சாலையில் கி.மீ. 0/0-2/8 வரையிலான பகுதியை ரூ. 49.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 23.55 இலட்சம் மணலி தொழிற்சாலைப் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளால் ஏற்றுக் கொள்ளப்படும். இது போலவே, விருத்தாசலம்-தொழுதூர் சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு மதிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ. 6.50 கோடியில், திருவாளர்கள் இந்தியா சிமெண்ட்ஸ் மற்றும் ராம்கோ சிமெண்ட்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் சேர்ந்து ரூ.3.00 கோடியை அவர்களது பங்காக அளிக்க முன் வந்துள்ளனர். இந்த கருத்தொற்றுமையின் அடிப்படையில், தொழிற்சாலைப் பகுதிகளில் சாலை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதிப்பங்களிப்பினை அச்சாலை வளர்ச்சிப் பணிகளால் பயன்பெறும் தொழில் நிறுவனங்கள் ஏற்றுக் கொள்வதற்கான விருப்பம் கோரி அத்தகைய தொழில் நிறுவனங்களை அணுக, அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 345.00 இலட்சம் மதிப்பீட்டில் திருநீர்மலைச் சாலை கி.மீ. 20/8 முதல் கி.மீ. 24/8 வரையும், திருநீர்மலை-திருமுடிவாக்கம் சாலை கி.மீ. 24/8 கி.மீ. 28/0 வரையும் மேம்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் இறுதியாக்கப்பட்டு வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 191.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### விபத்து நேரக்கூடிய பகுதிகளை மேம்பாடு செய்தல்

1995-96 இல், போக்குவரத்துக் கழகங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் நேர்பாட்டு ஆய்வில் 410 இடங்கள் விபத்து நேரக்கூடியப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்த

410 இடங்களில், 383 இடங்கள் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு, மீதி 28 இடங்களை 1998-99-ல் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 33.73 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணாசாலையில் நான்கு வழிப்பாதை அமைத்தல்

அண்ணா சாலையில் மருத்துவப் பணி இயக்குநர் (DMS) அலுவலகத்திற்கும் உஸ்மான் சாலை சந்திப்பிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஊர்திகளின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்திட ரூ. 1.59 கோடி மதிப்பீட்டில் அண்ணா சாலையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணியை 30-9-1998க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத்திட்டம்

திருப்பூர் நகரில் சாலை உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்

தமிழ்நாட்டில் திருப்பூர் நகரம் நெசவு மற்றும் துணிகள் ஏற்றுமதிக்குப் பெயர் பெற்றதாகும். இந்த ஏற்றுமதியின் மூலம் ஆண்டுதோறும் ரூ. 2000.00 கோடி அன்னியச் செலாவணி ஈட்டப்படுகின்றது. திருப்பூர் நகருக்குள்ளும் அதனைச் சுற்றியும் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக முதல் கட்டமாக ரூ. 15.00 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்திற்கான தொகையில் 50 விழுக்காடு தொகையை அதாவது ரூ. 7.50 கோடி செலவினத்தை, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் அளிக்க மைய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள செலவினத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். இப்பணிகள் ஏழு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு செயலாக்க நிலைகளில் முன்னேற்றமடைந்து வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 8.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



கிழக்கு கடற்கரைச் சாலைத் திட்டம்

இத்திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, சென்னையிலிருந்து கடலூர் வரையுள்ள 160 கி.மீ. நீளத்திற்கு கிழக்குக் கடற்கரைச்சாலை அமைக்கும் பணி ரூ. 102.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பணி முழுமையாக முடிக்கப்பட்டு, கிழக்குக் கடற்கரைச் சாலையில் போக்குவரத்து 14-1-1998 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கடற்கரைச் சாலையை தூத்துக்குடி வரை அமைக்கும் பணி தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு, அதற்கான விரிவான பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**8. சிறப்பு சாலைத் திட்டங்கள்**

தமிழ்நாடு சாலைத் தொகுப்புத் திட்டம்

தமிழகத்திலுள்ள சாலைகளின் தரத்தை மேம்படுத்தி, உறுதிப்படுத்தும் பொருட்டு, கலந்துரைப்பவர் (consultant) மூலம் பிப்பரவி 1995-ல் முன்னிலைத் திட்ட ஆய்வு (Strategic Option Study) மேற்கொள்ளப்பட்டு முன்னிலைத் திட்ட ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில், 3,238 கி.மீ. நீளமுள்ள 23 சாலை வழித்தடங்கள் மேம்படுத்தப்பட வேண்டுமென கண்டறியப் பட்டுள்ளது. உலக வங்கி இந்த ஆய்வினை ஏற்றுக் கொண்டு, மேற்கூறிய 3,238 கி.மீ. நீள சாலை வழித்தடங்களுக்கான பொருளாதார இயல்நிலை அறிக்கை தயாரிக்கும் பணியையும் 1,500 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை தேர்ந்தெடுக்கும் பணியையும் மேற்கொள்ளுமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இப்பணி திருவாளர்கள் கின்ஹில், இன்ஜினியர்ஸ் புரொபரைட்டரி லிமிடெட், ஆஸ்திரேலியா, எனும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த 1,500 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதியில், முதல் நிலையில், முதல் கூட்டமாக (Phase I), 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான கலந்துரைக் கட்டணம் ரூ. 10.00 கோடி ஆகும். முதற்கட்டத்தின் தொடர்ச்சியாக (Phase IA) மேலும் 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான

[1998 மே 27

பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக (Phase II) மேலும் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை அகலப்படுத்தி உறுதிபடுத்த திட்டமிடப்பட்டு அதற்கான விரிவான பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணியை 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப்பணிகள் உலக வங்கியின் கடன் நிதியுதவியுடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய பத்து நகரங்களில் செயலாக்கப்படுகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டக் கூறுகளில், சாலைத் தொடர்பு மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான மேலாண்மை செயல் திட்டமும் (TRAMP) ஒன்றாகும். இக்கூறு நெடுஞ்சாலைத் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப்பிரிவில் 1988-89 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுகின்றது.

1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.533.42 இலட்சம் ஆகும்.

### வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

கிராமங்களே நமது நாட்டின் உயிர்நாடி ஊரகச் சாலைகளே அக்கிராமங்களின் உயிர்த்துடிப்பு இத்திட்டத்தின்கீழ் பணிகள் பின்வரும் அளவுகோல்களின்படி மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கட் தொகை 1,000 மற்றும் அதற்கு மேற்பட்ட கிராமங்கள்

(ஆ) அமைக்கப்படவேண்டிய சாலைகளின் நீளம் 1.6 கி.மீக்கு அதிகமாயிருந்தல் வேண்டும்



1998 மே 27]

(இ) தார்த்தளச் சாலைகளால் இணைக்கப்படாத கிராமங்கள்

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் செலவினத்தில் 30% விழுக்காடு தொகையை மைய அரசு திரும்ப அளித்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கான பெருமளவு நிதி ஒதுக்கீடு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிகான தேசிய வங்கியின் கடனுதவியிலிருந்து பெறப்படுகிறது.

1997-98ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் ஊரக் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-2ன் கீழும், மாநில அரசின் நிதியிலிருந்தும் ரூ. 43.46 கோடி மதிப்பீட்டில், 216 கிராமங்களுக்கு மொத்தம் 582 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி-3ன் கடனுதவியுடன், 301 கிராமங்களுக்கு மொத்தம் 734 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலை வசதிகள் மேற்கொள்ள 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.56.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் சிறப்பு உறுப்புத் திட்டம்.

மொத்த மக்கட் தொகையில் 50% விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதிதிராவிட மக்கள் உள்ள கிராமங்கட்கு சாலை வசதிகள் செய்திட இத்திட்டம் வழி வகுக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.8.07 கோடி மதிப்பீட்டிலான 122 கி.மீ நீளமுள்ள தார்ச் சாலைகள் அமைக்கும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு, இப்பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. மேலும் 1998-99ஆம் ஆண்டில் 190 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ளபடவுள்ளன.

1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்கென வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடன் உதவியின்கீழ் ரூ.16.205 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்தி பொறுப்பேற்றுக் கொள்ளும் திட்டம்.

[1998 மே 27

இத்திட்டத்தின்கீழ் மூன்றாண்டுகட்கும், மேலாகப் பேருந்துகள் சென்று வரும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப் பெற்றதும், இச்சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரால் இதர மாவட்டச் சாலைகளாகப் பராமரிக்கப்படுகின்றன.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-2 மற்றும் மாநில அரசின் நிதியிலிருந்து 622 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்டு, இப்பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன.

1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் ரூ. 29.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 392 கி.மீ. நீளமுள்ள 174 சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

*தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்காடி மையங்களுக்குச் செல்லும் ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்*

இத்திட்டம், காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 21 அங்காடி மையங்களை உள்ளடக்கி ரூ. 110.00 கோடி மதிப்பீட்டில் 800 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்ய வழிகோலுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ. 85.24 கோடி செலவிடப்பட்டு 664 கி.மீ நீளமுள்ள சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கான 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 13.47 கோடி ஆகும்.

*புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களை தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புனரமைத்தல்*

இத்திட்டத்தின்கீழ் ரூ. 21.00 கோடி மொத்த மதிப்பிலான 12 சாலைப் பணிகளையும் 25 பாலப் பணிகளையும், மேற்கொள்ள அரசு ஒப்புதலளித்தது. இதுவரை ரூ. 15.51 கோடி மதிப்பிலான 12 சாலைப் பணிகளும் 7 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



1998 மே 27]

இத்திட்டத்திற்கான 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 4.27 கோடி ஆகும்.

## 9. சிறப்புச் சாலைப் பணிகள்

*கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டம்*

சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் மேம்பாடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 1132 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கரும்புச் சாலைகளை எதிர்கால பாரமரிப்பிற்காக நெடுஞ்சாலைத் துறைவசம் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

*பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம்*

இத்திட்டமானது 1976-77 முதல் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு தொடரப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நாமக்கல், திருச்சி, சேலம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் முறையே உள்ள கொல்லி மலை பச்சை மலை, கல்ராயன் மலை, அருநூத்து மலை, ஏற்காடு மலை, சித்தேரி மற்றும் ஜவ்வாது மலை ஆகிய மலைப்பகுதிகளில் சாலைகள் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கான 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 23.23 இலட்சம் ஆகும்.

*மலைச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்*

இத்திட்டத்தின்கீழ் ரூ. 1.26 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் சில்வர்ஜூப்ளி சாலைப் பணியை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி நல்ல முன்னேற்ற நிலையில் உள்ளது.

*கிழக்குத் தொடர்ச்சி மலைச்சாலைகள் வளர்ச்சித் திட்டம்*

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 35.00 கோடி முதலீட்டில் மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இப்புதிய திட்டத்தின் கீழ் மண் வளப் பாதுகாப்பு தோட்டக்கலை, காடு வளர்த்தல், பழங்குடியினர் ஆதரவுத் திட்டங்கள், சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சித் திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சாலைகள்

[1998 மே 27

தொலையுணர்வு ஆய்வுகள் போன்ற உறுப்புகளடங்கியுள்ளது. இதில் சாலைகள் எனும் உறுப்புத் திட்டம் நெடுஞ்சாலைத் துறையுடன் தொடர்புடையதாகும்.

இத்திட்டத்தின்கீழ், சாலைகள் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2.64 கோடி முதலீட்டில் 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.0.66 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலைகள் தற்போது கண்டறியப்பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலைச்சாலைகள் அபிவிருத்தித் திட்டம்.

இத்திட்டத்திற்கென ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மைய அரசின் முதலீட்டு உதவி ரூ.50.07 இலட்சம் என மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டு, இந்த ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் கால முழுமைக்கும் ரூ.86.65 இலட்சத்திற்கான கருத்துக்களை அனுப்பிவைக்குமாறு தமிழக அரசை மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இத்திட்டம் ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஏழு மாவட்டங்களில் செயலாக்கப்படவிருக்கின்றது.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு அம்சங்கள் அடங்கிய மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்திட மைய அரசின் சிறப்பு உதவி நிதியாக ரூ.124.05 கோடி தொகையை மைய அரசு நிர்ணயித்துள்ளது. இதில் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டக்கால முழுமைக்கும் சாலைப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.17.97 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட வேண்டிய சாலைகளைக் கண்டறியும் பணிகள் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டு வருகின்றது.

**10. கருவிகளும் தளவாடங்களும்**

பல்வேறு சாலை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதால், நெடுஞ்சாலைத் துறையில் சாலைக் கட்டுமான நடவடிக்கையினை அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத் துறையில் சாலை அமைப்புக் கருவிகளையும் தளவாடங்களையும்



1998 மே 27]

மேம்படுத்துவதும் நவீனப்படுத்துவதும் இன்றியமையாததாகின்றன. பழைய கருவிகள் மற்றும் தளவாடங்கள் பலவும், அவற்றின் உழைப்புகால வரம்பினையும் மீறி உபயோகப்படுத்தப்பட்டு பயனற்றுவிட்டதால் அவற்றிற்குப் பதிலாக புதியனவற்றை வாங்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே, புதிய கருவிகளும் தளவாடங்களும் படிப்படியாக வாங்கப்பட்டு வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.23.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்**

1957ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமானது புது டில்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக மேன்மை பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம், தமிழகத்தில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பாலங்களுக்கான கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தொடர்பான செயல்பாட்டுப்பணிகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் கீழ்க்காணும் பணிப் பிரிவுகளில் தேவையான வசதிகளைப் பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது:

அ. மண் மற்றும் அடித்தளம் பொறியியல்

ஆ. கற்கலவை மற்றும் கட்டுமானங்கள்

இ. தாரக்கலவை மற்றும் சரளைக் கற்கள்

ஈ. சாலை தொடர்பு மற்றும் சரக்குப் போக்குவரத்து

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளைப் பரவலாக்கி விரிவாக்கும் நோக்கத்துடன் கட்டுமானத்தின்போது கட்டுமானப் பொருட்களைச் சோதனை செய்யவும் தரக் கட்டுப்பாட்டை உறுதி செய்யவும் தஞ்சாவூர்-மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் இந்த மண்டல ஆய்வகங்களின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு திட்டப்பணிகளின்கீழ்

ரூ. 9.08 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேவையான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களைத் திறம்பட செயலாக்கத் தேவையான நிதி வளத்தை அதிகப்படுத்த திட்டப் பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கையில் தரக் கட்டுப்பாட்டிற்கென குறிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் 50 விழுக்காட்டினைப் பங்கீடு செய்து ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கென்று நிதியைத் திரட்டிப் பெருக்குவதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

சாலைகள் மற்றும் பாலங்கள் தொடர்பான தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் இன்றியமையாதப் புள்ளி விவரங்கள் ஆகியவற்றைத் தொகுத்து 'விவரக் குறிப்பு வங்கி' ஒன்று அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பாலங்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் அனைத்துச் சாலைகளுக்குமான போக்குவரத்துச் செறிவு கணக்கெடுப்புகள் ஆகியவை ஏற்கெனவே பெறப்பட்டு, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாலைத் தளங்கள், ஓடுதளத்தின் தரம், மற்றும் மண் ஆய்வு விவரங்கள் ஆகியவைகளும் பெறப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறையிலுள்ள அனைத்துப் பொறியாளர்களுக்கும், இதர கள அலுவலர்களுக்கும் பணியிடைப் பயிற்சி வழங்கும் பொருட்டு, ஒரு பயிற்சி நிலையம் துவக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம், திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அவர்களின் மூலம் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**12. சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள் நடுதல்**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பராமரிப்பதற்காகவும், சாலையைப் பயன்படுத்துவோருக்கு நிழல் தரும் பொருட்டும் சாலையோரங்களில் பெருமளவில் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு வளர்க்கப்படும் மரங்களின் நுகர் உரிமைப் பொருட்களால் அரசுக்கு வருவாயும் கிடைக்கின்றன. மேலும் உள்ளார்ந்த நிலை கொண்ட ஊரக வேலைவாய்ப்புகளையும், ஊரகத் தொழில் வளர்ச்சியையும் உருவாக்குகிறது. தற்போது, இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் பனங்கொட்டைகள், மரப்பொருட்கள் செய்ய உதவிடும் மரங்கள், எரிபொருட்களுக்கான மரங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள், கனிகள், மற்றும் மலர்கள் ஈந்திடும் மரக்கன்றுகள் ஆகியவற்றை நடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மரங்களை நல்ல முறையில்



பராமரித்து பாதுகாக்கவும், மரங்களின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதை உறுதி செய்யும் பொருட்டும், மரக்கன்றுகளை (தோப்பாக) கூட்டுமுறையில் தொழில்நுட்ப நுணுக்கத்துடன் நடுகின்ற முறை பின்பற்றப்படுகிறது. இத்திட்டத்தினால் மிகுபயன் பெற்றிட இப்பணியில் சாலைப் பணியாளர்களை ஈடுபடுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்கென ரூ.70.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. மைய அரசின் சாலை நிதித் திட்டப் பணிகள்**

பல்வேறு மாநிலங்களில் உள்ள சாலைகளை அபிவிருத்தி மற்றும் மேம்பாடு செய்ய மைய அரசால் "மைய சாலை நிதித் திட்டம்" எனும் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ.16.49 கோடி மதிப்பிலான 17 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 258.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14. அரசுச் சாலைகளைப் பராமரித்தல் (திட்டம் சாராப் பணிகள்)**

பொருட்களின் விலை உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் சாலைப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் சாலைப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் அகவிலைப்படி உயர்வு ஆகிய காரணங்களினால் சாலைகளைப் பராமரிக்கும் செலவு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

மேலே குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் பெரும் செலவினத்தில் எல்லா பருவ நிலைகளுக்கும் தாங்குகின்ற தரத்தில் சுமார் 1000 கி.மீ. நீளத்திற்கு சலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இதனால், ஆண்டுதோறும் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் நீளம் கூடிக்கொண்டே வருகிறது. இச்சாலைகள் எல்லாம் அரசின் உரிமை வரம்பிற்குள் அடங்கும். இச்சாலைகளை கால முறைப்படி புதுப்பித்தும், பராமரித்தும் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.254.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. வெள்ள நிவாரணப் பணிகள் [1998 மே 27

(திட்டம் சாராப்பணிகள்)

1996ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையினால் 8 கடலோர மாவட்டங்களில் அரசுச் சாலைகள் பழுதடைந்தன. இவற்றின் நிரந்தர சீரமைப்பிற்கென அரசால் ரூ.150.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மையத் தார்க்கலவை இயந்திரங்கள் (Central Mixing Plants) தார்க் கலவை பரப்பும் இயந்திரங்கள் (Pavers) மற்றும் இதர உபகரணங்களைக் கொண்டு நிரந்தர அடிப்படையில் தரத்தை உறுதி செய்து நிலையான சாலைகள் அமைக்கும் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

1997ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெய்த பெருமழை மற்றும் வெள்ளத்தால் ஏறத்தாழ தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சாலைகள் பழுதடைந்து அம்மாவட்டங்களிடையேயான ஊர்திப் போக்குவரத்துக்கள் முற்றிலும் தடைபட்டது. எனவே, அனைத்து மாவட்டங்களிலும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளில் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென 1997-98ஆம் ஆண்டு பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூ.55.00 கோடி செலவிட அரசு அனுமதி அளித்தது. இப்பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.

## IV புள்ளி விவரங்கள்

1997 ஏப்ரல் திங்கள் நிலவரப்படி தமிழ்நாட்டின் சாலைகள் பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு:



| | | | |
|---|---|---|---|
| 1. | தேசிய நெடுஞ் சாலைகள் | 2002 கி.மீ. | தேசிய நெடுஞ்சாலைப் பிரிவின் கட்டுப் பாட்டில் உள்ளது. |
| 2. | மாநில நெடுஞ் சாலைகள் | 1969 கி.மீ. | நெடுஞ்சாலைப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளது. |
| 3. | பெரிய மாவட்டச் சாலைகள் | 14,016 கி.மீ | நெடுஞ்சாலைப் பிரிவில் கட்டுப்பாட்டில் உள்ளது. |
| 4. | இதர மாவட்டச் சாலைகள் | 39,786 கி.மீ. | நெடுஞ்சாலைப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளது. |
| 5. | கரும்புச் சாலைகள் | 1,132 கி.மீ | தேசிய நெடுஞ்சாலை எண் 45 பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளது. |
| 6. | ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | 34.083 கி.மீ | நெடுஞ்சாலைத் துறையின் தொழில் நுட்ப உதவியுடன் ஊரகப் பணித்துறை இயக்குநரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 7. | ஊராட்சிச் சாலைகள் | 29.020 கி.மீ | நெடுஞ்சாலைத்துறையின் தொழில் நுட்ப உதவியுடன் ஊரகப் பணித் துறை இயக்குநரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 8. | வகைப்படுத்தப் படாத சாலைகள் | 6,528 கி.மீ | நெடுஞ்சாலைத்துறையின் தொழில் நுட்ப உதவியுடன் ஊரகப் பணித்துறை இயக்குநரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 9. | வனத் துறைச் சாலைகள் | 3.324 கி.மீ | சம்பந்தப்பட்ட துறைகளின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் உள்ளது. |
| 10. | பாசனச் சாலைகள் | 1332 கி.மீ. | சம்பந்தப்பட்ட துறைகளின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் உள்ளது. |
| 11. | தமிழ்நாடு மின் வாரியச் சாலைகள் | 679 கி.மீ | சம்பந்தப்பட்ட துறைகளின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் உள்ளது. |
| 12. | நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சாலைகள் | 8,689 கி.மீ | உள்ளாட்சி மன்றங்களின் பொறியியல் பணியாளர்களுடன் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் உள்ளது. |
| | மொத்தம் . . . | 1,42,560 கி.மீ. | |

[1998 மே 27

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1951 தொடக்கத்தில் இம்மாநிலத்தில் இருந்த சாலைகளின் மொத்த நீளம் 32,807 கி.மீ நீளத்திலிருந்து, 01-04-1997 நிலவரப்படி 1,42,560 கி.மீ நீளத்திற்கு அதிகரித்துள்ளது. இந்த மொத்த சாலைகளில் சுமார் 60 விழுக்காடு நீளத்திற்கு தார்ப்பரப்பு போடப்பட்டுள்ளது. நெடுசாலைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு சாலைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

01-04-1997-ன் நிலவரப்படி தமிழகத்தில் உள்ள அரசு சாலைகள்.

**(அ) வழித்தடம் வாரியாக நீளம்**

| சாலைகளின் இனம். | ஒருவழித் தடம் | இருவழித் தடம் | பலவழித் தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (நீளம் கிலோ மீட்டரில்) | | | |
| 1. தேசிய நெடுஞ்சாலைகள் | 154 | 1816 | 32 | 2002 |
| 2. மாநில நெடுஞ்சாலைகள் | 193 | 1686 | 90 | 1969 |
| 3. பெரிய மாவட்டச் சாலைகள் | 8443 | 5526 | 47 | 14016 |
| 4. இதர மாவட்டச் சாலைகள் | 39005 | 750 | 31 | 39786 |
| மொத்தம் .. | 47795 | 9778 | 200 | 57773 |

**(ஆ) தார்ப்பரப்பு வாரியாக நீளம்**

| சாலைகளின் இனம் | சிமிட்டி கற்கலவை | தார்த் தளம் | கப்பித் தளம் | மண்தளம் |
|---|---|---|---|---|
| | (நீளம் கிலோ மீட்டரில்) | | | |
| 1 தேசிய நெடுஞ்சாலைகள் | .. | 2002 | .. | .. |
| 2. மாநில நெடுஞ்சாலைகள் | 52 | 1917 | .. | .. |
| 3. பெரிய மாவட்டச் சாலைகள் | 29 | 13940 | 47 | .. |
| 4. இதர மாவட்டச் சாலைகள் | 5 | 39493 | 272 | 16 |
| மொத்தம் .. | 86 | 57352 | 319 | 16 |



1998 மே 27]

01-4-1989 கணக்கெடுப்பின்படி ஆகிய இந்திய அளவில் சாலைகளின் அடர்த்தி ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 246.20 கி.மீ ஆகவும் 100 சதுர கிலோ மீட்டருக்கு 60.80 கிலோ மீட்டராகவும் அமைந்திருந்தது. ஆனால் தமிழக சாலைகளின் அடர்த்தி 01-04-1997-ன் நிலவரப்படி ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ரூ.255.21 கிலோ மீட்டராகவும் 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு 109.61 கிலோ மீட்டராகவும் அமைந்துள்ளது. எனவே, தமிழக சாலைகளின் அடர்த்தி அகில இந்திய சாலைகளின் அடர்த்தியைவிட கூடுதலாகவே உள்ளது.

## இணைப்பு

1998-99ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டப் பணிகளின் விவரப் பட்டியல்

| தொடர் எண் (1) | பணியின் பெயர் (2) | மொத்த மதிப்பீடு (3) | 1998-99ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (4) |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | |
| **I. மாநில நெடுஞ்சாலைகள் (சாலைகள்)** | | | |
| 1. | விழுப்புரம்-மாம்பழப்பட்டு-திருக்கோயிலூர் சாலை கி.மீ.60/0-69/0ல் மேம்படுத்தி உறுதிப்படுத்துதல் | 60.00 | 30.00 |
| 2. | விழுப்புரம்-மாம்பழப்பட்டு-திருக்கோயிலூர் சாலை கி.மீ. 69/0-75/8-ல் மேம்படுத்தி உறுதிப்படுத்துதல் | 50.00 | 20.00 |
| 3. | சென்னை-சித்தூர்-பெங்களூர் சாலை கி.மீ.19/6-22/6-ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (பூந்தமல்லிநகரியம்) | 25.00 | 10.00 |
| 4. | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 225/0-227/0-ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (கட்டுமானப்பகுதி) | 25.00 | 10.00 |
| 5. | சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலை கி.மீ 417/0-420/0-ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் | 30.00 | 12.00 |

[1998 மே 27

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6. | பெரம்பலூர்- மானாமதுரை சாலையில் கி.மீ 215/0-215/6-ல் மற்றும் கி.மீ 220/0-220/8ல் (14 கி.மீ) அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் | 10.00 | 10.00 |
| 7. | நாகை-கூடலூர்-மைசூர் சாலையில் கி.மீ.335/6-340/0-ல் ஓடுதளத்தை அகலப்படுத்துதல் (கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்டது) | 45.00 | 10.00 |
| 8 | பெரியார். நினைவுத்தூண் முதல் கேணிக்கரைச்சாலை கி.மீ 111/8-112/6-ல் மேம்படுத்தி உறுதிப்படுத்துதல் (இராமநாதபுரம் கட்டுமானப்பகுதி) | 15.00 | 8.00 |
| | மொத்தம் .. | **260.00** | **110.00** |

**II. மாநில நெடுஞ்சாலைகள் (பாலங்கள்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | தென்காசி-மதுரை சாலையில் கி.மீ 33/2-ல் பழுதடைந்த சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 2. | தென்காசி-மதுரை சாலையில் கி.மீ.18/4-ல் உள்ள பழுதடைந்த தாம்போக்கியைத் திரும்பக் கட்டுதல் | 15.00 | 6.00 |
| 4. | நாகை-கூடலூர்-மைசூர் சாலையில் கி.மீ 31/8-ல் பாலத்தினைத் திரும்பக் கட்டுதல் | 30.00 | 12.00 |
| 4. | நாகை-கூடலூர்-மைசூர் சாலையில் கி.மீ 341/2ல் உள்ள குறுகிய ஆர்.சி.சி. பாலத்தை அகலப்படுத்துதல் (கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்டது) | 60.00 | 20.00 |
| 5. | ஆரல்வாய்மொழி-நெடுமாங்காடு சாலையில் கி.மீ.8/10-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| 6. | தென்காசி-மதுரை சாலையில் கி.மீ.43/2-ல் உள்ள பழுதடைந்த சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 32.00 | 10.80 |
| | மொத்தம் | **197.00** | **72.80** |



1998 மே 27]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|

**III. பெரிய மாவட்டச் சாலைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வத்தலக்குண்டு-பேரையூர் சாலை கி.மீ.26/0-36/0-ல் ஒருபக்க ஓடுதளத்தை அகலப்படுத்துதல் | 35.00 | 20.00 |
| 2. | திருச்சி-சிதம்பரம் சாலை கி.மீ 10/0-15/0-ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் | 50.00 | 20.00 |
| 3. | கொரட்டூர்-தின்னனூர்-பெரியபாளையம் சாலையில் கி.மீ.15/2-ல் குழாய் பதிந்த தரைப்பாலம் கட்டுதல் | 30.00 | 10.00 |
| 4. | மெய்யூர்-வாணாபுரம் சாலையின் கி.மீ 0/0-14/0-ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் | 60.00 | 24.00 |
| 5. | திருபனந்தான்-ஆடுதுறை சாலை கி.மீ 0/2-10/4-ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்தல் | 50.00 | 20.00 |
| 6. | சித்தூர்-திருத்தணி சாலை கி.மீ.22/4-33/0-ல் அகலப்படுத்துதல் | 60.00 | 20.00 |
| 7. | கல்லணை-காவிரிப்பட்டினம் சாலை கி.மீ.59/0-65/6-ல் அகலப்படுத்துதல் | 50.00 | 20.00 |
| | மொத்தம் .. | **335.00** | **134.00** |

**IV இதர மாவட்டச் சாலைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சின்னசேக்காடு சாலை கி.மீ. 0/0-1/8 வரையில் அகலப்படுத்தி உறுதிபடுத்துதல் | 20.00 | 10.00 |
| 2. | மவுண்ட்-பூந்தமல்லி சாலையிலிருந்து பிரிந்து செல்லும் முகலிவாக்கம் சாலையின் கி.மீ.0/6-ல் உயர்மட்ட பாலம் கட்டுதல் | 25.00 | 10.00 |
| 3. | குளத்தூர்-மால்வாய் சாலையில் கி.மீ 3/8-ல் மருதையாற்றின் குறுக்கே தரைமட்டப்பாலம் கட்டுதல் | 35.00 | 10.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | பி. மல்லாபுரம் ராமமூர்த்தி நகர்சாலையில் கி.மீ. 1/4-ல் வேப்படியாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டுதல் | 30.00 | 10.00 |
| 5. | மர்மலாங் பாலம் இரும்புலியூர் சாலை கி.மீ.9/2-ல் பிரிந்து செல்லும் எஸ். கொளத்தூர் சாலை கி.மீ. 0/0-3/270 வரை மேம்படுத்துதல் | 7.00 | 7.00 |
| | மொத்தம் | **117.00** | **47.00** |

**V. பெரிய மாவட்டச் சாலைகளில் பழுதடைந்த பாலங்களை திரும்பக் கட்டுதல்**

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1. | கடலூர்-திருக்கோயிலூர் அணைக்கட்டுசாலை கி.மீ. 61/8-ல் உள்ள தாம்போகியைத் திரும்பக் கட்டுதல் | 10.00 | 10.00 |
| 2. | விருதாசலம்-பரங்கிப்பேட்டை சாலையில் கி.மீ. 14/2-ல் உள்ள தாம்போக்கியைத் திரும்பக் கட்டுதல் | 15.00 | 10.00 |
| 3. | நாகர்கோயில்-ராஜாக்கமங்கலம் குளச்சல் சாலை கி.மீ.3/10-ல் உள்ள தாம்போக்கியைத் திரும்பக் கட்டுதல் | 12.00 | 10.00 |
| 4. | புதுவாயல்- பெரியபாளையம் சாலை கி.மீ 11/2-ல் பாலத்தைத் திரும்பக் கட்டுதல் (பொதுப்பணித் துறை கால்வாய் குறுக்கே) | 35.00 | 10.00 |
| 5. | சிங்காரப்பேட்டை-திருப்பத்தூர் சாலை கி.மீ. 23/10-ல் தற்போது உள்ள தாம்போக்கியைத் திரும்பக் கட்டுதல் | 10.00 | 10.00 |
| 6. | நாகர்கோயில் - ஆரல்வாய் மொழிசாலை கி.மீ. 9/4-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 30.00 | 10.20 |
| 7. | மதுரை-தொண்டிசாலையில் கி.மீ. 54/6-ல் உள்ள பாலத்தைக் திரும்பக் கட்டுதல் | 22.00 | 8.00 |
| 8. | குத்தாலம்-பந்தநல்லூர் சாலை கி.மீ. 1/8-ல் செங்கல் வளைவு பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 40.00 | 10.00 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 9. | மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை கி.மீ. 60/8-ல் அரிசந்திரா நதி குறுக்கே உள்ள உடைந்த பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 40.00 | 10.00 |
| 10. | ஆக்கூர்-சீர்காழி சாலை கி.மீ. 18/2-ல் உள்ள வலுவிழுந்த பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 70.00 | 20.00 |
| | மொத்தம் | **284.00** | **108.20** |

**VI. இதர மாவட்டச் சாலைகளில் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்**

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1. | நெல்வாய்-பள்ளிக்கொண்டா சாலை கி.மீ. 13/10-ல் உள்ள கருங்கல் தாம்போக்கியைத் திரும்பக் கட்டுதல் | 25.00 | 10.00 |
| 2. | அரியலூர்-அயனத்தூர் சாலை கி.மீ. 1/6-ல் உள்ள சிறிய பாலத்தை திரும்பக் கட்டுதல் | 10.00 | 10.00 |
| 3. | அரியலூர்-அயனத்தூர் சாலை கி.மீ.12/2-ல் உள்ள மூழ்குபாலத்தை திரும்பக் கட்டுதல் | 12.00 | 10.00 |
| 4. | கடலூர்-சித்தூர் சாலை கி.மீ.8/4-ல் பிரிந்து கருத்துவம்பாடி வழியாக பெரியகளம்பாடி செல்லும் சாலையில் உள்ள தாம்போக்கியைத் திரும்பக் கட்டுதல் | 15.00 | 10.00 |
| 5. | தெள்ளாந்தி-ஆதிதிராவிடர் சாலை கி.மீ. 0/6-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 55.00 | 15.00 |
| 6. | குலச்சேகரம்புதூர்-ஆதளவிளை சாலை கி.மீ. 0/2-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 40.00 | 10.00 |
| 7. | ஜி.எஸ்.டி..சாலை கி.மீ.295/6-ல் பிரிந்து நெய்க்குளம் வழியாக ஊட்டத்தூர் செல்லும் சாலை கி.மீ.4/6-ல் உள்ள தாம்போக்கியை திரும்பக் கட்டுதல் | 6.00 | 6.00 |
| | மொத்தம் .. | **163.00** | **71.00** |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **VII.** | **இதர சாலைகள்** | | |
| 1. | சிங்காரத்தோப்பு அருகே உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (கடலூர் நகராட்சி எல்லைக்குள்) | 700.00 | 200.00 |
| | மொத்தம் .. | **700.00** | **200.00** |
| **VIII.** | **கருவிகளும்-தளவாடங்களும்** | | |
| 1. | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சொற்பொழிவுக் கூடத்திற்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல் | 6.00 | 2.00 |
| 2. | தலைமைப் பொறியாளர் (இயந்திரம்) தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு மற்றும் புலனாய்வு), கண்காணிப்புப் பொறியாளர், திருச்சி, மற்றும் கண்காணிப்புப் பொறியாளர், திருநெல்வேலி அலுவலகங்களுக்கு நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 5.00 | 2.00 |
| | மொத்தம் .. | **11.00** | **4.00** |
| **IX** | **ஆராய்ச்சியும் மேம்பாடும்** | | |
| 1. | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிறுவனத்தின் கணிப்பொறிப் பிரிவிற்கான தளவாடங்களை வாங்குதல் | 3.50 | 1.40 |
| 2. | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்பக்கத்தில் சர்தார் பட்டேல் சாலையையொட்டி மதில்சுவர் கட்டுதல் | 4.50 | 1.60 |
| | மொத்தம் .. | **8.00** | **3.00** |
| | ஒட்டுமொத்தம்.. | **2075.00** | **750.00** |

ஒக

219400

D
N21,31 N98
N98:57.2

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.